இணுவை சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புக்கள்

– ஓர் ஆய்வு –

பெயர்: வேதநாயகம் கணேந்திரன்

பதிவு இலக்கம்: FGS/MAT/2014/15/12

சுட்டெண்: MAT - 210

இணுவை சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புக்கள் ஓர் ஆய்வு என்ற இவ் ஆய்வுக் கட்டுரையானது முதுகலைமாணி இரண்டாம் அரையாண்டு பரீட்சை 2015 இன் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு ஓர் அலகாக முதுகலைமாணி உயர் பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகிறது.

மேற்பார்வையாளர்:

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்

சிரேஷ்ட விரிவுரையாளர்

முதுகலைமாணி

உயர் பட்டப்படிப்புகள் பீடம்

யாழ் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

யாழ்ப்பாணம்

2015

A CRITICAL STUDY ON THE WORKS OF INUVAI SITHAMPARA THIRUCHENTHINATHAN

Name: Vethanayagam Kanenthiran
Regd.No.: FGS/MAT/2014/15/12
Index No.: MAT - 210

This Dissertation is submitted to the Faculty of Graduate studies University of Jaffna Sri Lankain partial fullfillment of the requirement for the Degree of Master of Arts in Tamil Final Examination Master of Arts in Tamil - 2015

Supervisor:
Easwaranathapillai Cumaran
Senior Lecturer

FACULTY OF GRADUATE STUDIES
UNIVERSITY OF JAFFNA
THIRUNELVELY
JAFFNA
2015

திரு.வே.கணேந்திரன்
இணுவில் கிழக்கு,
இணுவில்.

ஆய்வாளர் உறுதியுரை

இணுவை சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புக்கள் ஓர் ஆய்வு என்ற ஆய்வுக் கட்டுரையை முதுகலைமாணி இரண்டாம் அரையாண்டு பரீட்சை 2015 இன் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு ஓர் அலகாக திரு.ஈ.குமரன் விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ் பல்கலைக்கழகம் அவர்களின் மேற்பார்வையின் கீழ் செய்யப்பட்ட இவ் ஆய்வு என்னால் சுயமாக மேற்கொள்ளப்பட்டது, வேறெந்த தேவையின் பொருட்டும் இவ் ஆய்வு சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் உறுதிகூறுகிறேன்.

....

கையொப்பம்

திரு.ஈ.குமரன்
விரிவுரையாளர்,
தமிழ் முதுகலைமாணி கற்கைநெறி,
உயர் பட்டப்படிப்புகள் பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

மேற்பார்வையாளர் உறுதியுரை

இணுவை சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புக்கள் ஓர் ஆய்வு என்ற ஆய்வுக் கட்டுரையை முதுகலைமாணி இரண்டாம் அரையாண்டு பரீட்சை 2015 இன் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு ஓர் அலகாக திரு.வே.கணேந்திரன் அவர்களால் எனது மேற்பார்வையின் கீழ் செய்யப்பட்ட இவ் ஆய்வு அவரால் சுயமாக மேற்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப் படுத்துகிறேன்.

....
மேற்பார்வையாளர் கையொப்பம்

பேராசிரியர் கலாநிதி.கி.விசாகரூபன்
கற்கைநெறி இணைப்பாளர்,
தமிழ் முதுகலைமாணி கற்கைநெறி,
உயர் பட்டப்படிப்புகள் பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

இணைப்பாளர் சான்றுரை

இணுவை சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புக்கள் ஓர் ஆய்வு என்ற ஆய்வுக் கட்டுரையை முதுகலைமாணி இரண்டாம் அரையாண்டு பரீட்சை 2015 இன் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு ஓர் அலகாக திரு.வே.கணேந்திரன் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது என்பதையும், இந்த ஆய்வு முயற்சி ஆய்வாளனின் சொந்த முயற்சி என்பதையும், இந்த ஆய்வேடு வேறெந்த பட்டத் தேவைகளின் பொருட்டும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதையும் சான்றளிக்கின்றேன்.

....

திகதி இணைப்பாளர் ஒப்பம்
பேராசிரியர் கலாநிதி.கி.விசாகரூபன்

நன்றியுரை

தமிழ் முதுமாணி கற்கைநெறியின் இறுதிப் பரீட்சையின் ஓர் அலகைப் பூர்த்திசெய்யும்பொருட்டு "இணுவை சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புக்கள் ஓர் ஆய்வு" என்ற இவ் ஆய்வுகட்டுரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் ஆய்வுத்தலைப்பைத் தெரிவுசெய்யும்போது இவ் ஆய்வுத் தலைப்பை அனுமதித்த கற்கைநெறி இணைப்பாளர் பேராசிரியர் கலாநிதி.கி.விசாகரூபன் அவர்களுக்கும், இவ் ஆய்வை நெறிப்படுத்தி, வேண்டியபோது தேவையான ஆலோசனைகளையும், திருத்தங்களையும் செய்த மேற்பார்வையாளர் விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது இவ் ஆய்வுத்தேவைகளுக்காக தன்னுடைய படைப்புக்களைத் தந்துதவியதுடன், தனது அனுபவங்களையும், கருத்துக்களையும் பகிர்ந்துகொண்ட எழுத்தாளர் திரு.இணுவை சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ் ஆய்வுக்கட்டுரையை கணனியில் அழகுறப் பதிப்புச் செய்து புத்தக வடிவில் தந்த திரு.வே.செந்தில்வேல் அவர்களுக்கும், இவ் ஆய்வு சிறப்படைய உதவிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

ஆய்வாளன்

பொருளடக்கம்

		பக்கம்
ஆய்வாளர் உறுதியுரை		I
மேற்பார்வையாளர் உறுதியுரை		II
இணைப்பாளர் சான்றுரை		III
நன்றியுரை		IV
பொருளடக்கம்		V
ஆய்வுச் சுருக்கம்		VI
இயல் ஒன்று		
1.1	ஆய்வு அறிமுகம்	01
1.2	ஆய்வுத் தலைப்பு	02
1.3	ஆய்வு எல்லை	02
1.4	இலக்கிய மீளாய்வு	02
1.5	ஆய்வின் தேவை	05
1.6	ஆய்வின் நோக்கம்	07
1.7	ஆய்வின் கருதுகோள்	07
1.8	ஆய்வு அணுகுமுறை	07
1.9	ஆய்வு மூலங்கள்	08
1.10	ஆய்வின் பயன்	08
1.11	ஆய்வின் அமைப்பு	09
இயல் இரண்டு		
2.1	அறிமுகம்	11
2.2	குடும்பப் பின்னணி	12
2.3	கல்விப் பின்னணி	15
2.4	சமூகப் பின்னணி	16
2.5	சுயதேடல்	17
2.6	எதிர்நோக்கிய சவால்கள்	19
2.7	தொழில் பின்னணி	20
இயல் மூன்று		
3.1	சிறுகதைகளின் தோற்றம்	24
3.2	சிறுகதைகளின் பண்பு	24
3.3	சிறுகதைகளின் தோற்றத்திற்கான காரணங்கள்	25
3.4	தமிழில் புனைகதையிலக்கியம்	26
3.5	தமிழக சிறுகதைகள்	27
3.6	ஈழத்து சிறுகதைகள்	28
3.7	முற்போக்கு அணி	30
3.8	மரபுவாத அணி	31
3.9	தமிழ்த் தேசியவாதத் தோற்றத்தின் பின்னணி	32
3.10	தமிழ்த் தேசிய உணர்வுத் தோற்றம்	34
3.11	தமிழ்த் தேசியவாதத்தை வெளிப்படுத்திய சிறுகதைகள்	34
3.12	1960களில் தமிழ்ச் சிறுகதைகள்	35
3.13	1970களில் தமிழ்ச் சிறுகதைகள்	36
3.14	வட இலங்கைக்கு வெளியே சிறுகதைகள்	36
3.15	1980களில் தமிழ்ச் சிறுகதைகள்	37
3.16	புலம்பெயர் படைப்புக்கள்	37
3.17	தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கு பத்திரிகைகளின் பங்களிப்பு	38

இயல் நான்கு

4.1	ஈழப்போரின் தாக்கங்கள்	42
4.1.1	ஈழப்போரின் காலகட்டங்கள்	42
4.1.2	இடப்பெயர்வு	45
4.1.3	அடிப்படை வசதிகள் அருகியமை	50
4.1.4	உயிரிழப்புகள்	56
4.1.5	போராளிகள் பற்றிய மக்களின் எண்ணங்கள்	60
4.1.6	இயல்பு வாழ்க்கை பாதிப்பு	62
4.1.7	போரும் சமாதானமும்	70
4.1.8	முக்கியத்துவம் பெற்ற விடயங்கள்	70
4.2	பெண்ணியம்	72
4.2.1	சீதனம்	72
4.2.2	குடும்ப வன்முறை	76
4.2.3	பெண்கள் மீதான தொந்தரவு	77
4.2.4	பெண்களின் கருத்துக்கள் கவனிக்கப்படாமை	78
4.2.5	திணிப்புக்களை பெண் எதிர்த்தல்	79
4.2.6	பொறுப்பாக குடும்பப் பெண்கள்	79
4.2.7	பெண்கள் ஏமாற்றப்படுதல்	80
4.3	புலம்பெயர்வு	82
4.3.1	புலம்பெயர்வுக்கான காரணங்கள்	82
4.3.2	புலம்பெயர்வால் ஏற்பட்ட மாற்றங்கள்	84
4.3.3	புலம்பெயர்வால் சமூகச் சீர்கேடுகள்	85
4.4	சமூகப் போலித்தனங்கள்	86
4.4.1	அலுவலகங்களில் போலித்தனம்	86
4.4.2	வியாபார நிலையங்களில் போலித்தனம்	87
4.5	முதியோர் பிரச்சினை	88

இயல் ஐந்து

5.1	சிறுகதைகளின் அமைப்பு	94
5.1.1	சிறுகதை வடிவங்கள்	94
5.1.2	சிறுகதைத் தலைப்புக்கள்	95
5.1.3	சிறுகதைகளின் பாத்திரவார்ப்பு	97
5.1.4	சிறுகதைகளின் முடிவுகள்	99
5.2	சிதம்பர திருச்செந்திநாதன் சிறுகதைகளில் மொழியாற்றல்	102
5.2.1	சிறுகதைகளில் வர்ணனை	102
5.2.2	சிறுகதைகளில் உவமைகளைக் கையாளல்	104
5.2.3	சிறுகதைகளில் குறியீடுகள்	107
5.2.4	உணர்வுகள்	110

இயல் ஆறு

ஆய்வு முடிவுரை 113

உசாத்துணை நூல்கள்

ஆய்வுச் சுருக்கம்

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் ஈழத்தின் புகழ் பூத்த எழுத்தாளர். 1970 களில் ஈழத்து புனைகதை எழுத்தாளராக வீரகேசரி பத்திரிகை மூலம் அறிமுகமானவர். சிறுகதைகள் நாவல்கள், குறுநாவல் என்ற புனைகதை இலக்கியங்களையும், கட்டுரைகள், திறனாய்வு, இதழ்கீலங்கள் என்ற புனைவுசார எழுத்துக்களையும், எழுதி தனது எழுத்துத்துறையை விரிவாக்கம் செய்தவர். அவர் பல்வேறு துறைகளில் எழுதினார்.

இவ் ஆய்வுக்கட்டுரையின் இயல் ஒன்று ஆய்வேட்டின் அமைப்பை விளக்குகிறது. இவ் ஆய்வானது சிதம்பர திருச்செந்திநாதனின் படைப்புக்களின் கருத்துநிலை, அவற்றின் கலைத்துவம் என்பவற்றை ஆய்வுசெய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ் ஆய்வு சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புக்கள் ஈழத்து தமிழ் மக்களின் வாழ்வை யதார்த்தமாக வெளிப்படுத்துகிறது என்பதும் கவனத்தில் கொள்ளப்படுகிறது.

இயல் இரண்டு சிதம்பர திருச்செந்திநாதனின் ஆளுமை உருவாக்கப் பின்னணி பற்றி ஆராய்கிறது. அவரது குடும்பப் பின்னணியும், கல்விப் பின்னணியும், சமூகத் தொடர்புகளும் ஒரு சிறந்த எழுத்தாளனாக எவ்வாறு அவரை வடிமைப்புச் செய்துள்ளது என்பதை இப்பகுதியில் காணலாம்.

இயல் மூன்று தமிழில் சிறுகதைகளின் தோற்றம், ஈழத்து தமிழ்ச் சிறுகதைகளின் தோற்றம், அவை வளர்ச்சியடைந்த விதம், சிறுகதைகளின் வளர்ச்சியின் பல்வேறு காலகட்டங்கள், சிறுகதைகளின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த பத்திரிகைகள் என்பன எடுத்துக்கூறப்படுகின்றன.

இயல் நான்கு சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புக்களில் கருத்துநிலையை வெளிப்படுத்தும் விதத்தில் அவரது சிறுகதைகளில் காணப்படும் உள்ளடக்கங்கள் பகுத்து நோக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஈழத்து தமிழ் மக்களின் வாழ்வியல் கோலங்களையும், போர்க்கால நெருக்கடிகளையும் தனது சிறுகதைகளில் எவ்வாறு பதிவுசெய்துள்ளார் என்பதை அறிந்து கொள்ளலாம்.

இயல் ஐந்து சிதம்பர திருச்செந்திநாதனின் சிறுகதைகளின் கலைத்துவம் ஆராயப்படுகிறது. சிறுகதைகளின் தொடக்கம், முடிவு, படைப்புக்கள் போன்ற விடயங்களையும், அவரது படைப்புக்களின் மொழியாற்றலையும் விளக்குகின்றது. உவமைகள், குறியீடுகள் வர்ணனைகள் போன்றவற்றை தனது சிறுகதைக் கட்டமைப்புக்கு மிகவும் நுணுக்கமாகவும், தேவைக்கேற்பவும் பயன்படுத்திய விதங்கள் தெளிவுபடுத்தப்படுகின்றது.

இயல் ஆறு இவ் ஆய்வுக்கட்டுரையின் முடிவுரை, இவ் ஆய்வுக்குப் பயன் படுத்தப்பட்ட உசாத்துணைநூல்களின் பட்டியல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

இயல்

ஒன்று

இயல் - ஒன்று

1.1 ஆய்வு அறிமுகம்

இணுவைச் சிதம்பர திருச்செந்திநாதன் காதலோ காதல் என்ற கதையின் மூலம் வீரகேசரி பத்திரிகையில் 1974இல் அறிமுகமானவர். நாவல்கள், சிறுகதைகள், வானொலி நாடகங்கள், நாடகங்கள், என புனைவு சார்ந்த படைப்புக்கள், கட்டுரைகள், இதழ்க்கீலங்கள் என பல்வேறு புனைவுசாரா ஆக்கங்களையும் எழுதியுள்ளார்.

அரச சேவையில் எழுதுவினைஞராகவும், நிர்வாக அதிகாரியாகவும், ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும், பத்தி எழுத்தாளராகவும் இருந்தார். வெளிச்சம், ஆதாரம், காப்பரண் போன்ற சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் இருந்து அவை சிறப்பாக வெளிவர உதவினார்.

இவரது படைப்புகள் முதலில் வீரகேசரியிலும் பின்னர் ஈழநாடு, ஈழநாதம், வாரமுரசொலி, தினகரன், சிந்தாமணி போன்ற பத்திரிகைகளிலும் சிரித்திரன், கலைச்செல்வி, மல்லிகை, உள்ளம், வெளிச்சம், ஆதாரம் போன்ற சஞ்சிகைகளிலும் வெளிவந்தன. மீண்டும் புதிதாய்ப் பிறப்போம், முடிவல்ல ஆரம்பம், இருள் இரவில் அல்ல, முள்முடி மன்னர்கள் என்ற நாவல்கள் புத்தகங்களாக வெளிவந்தன. என்னுடையதும் அம்மாவினுடையதும் வெட்டுமுகம், மணல்வெளி அரங்கு என்பன அவர் எழுதிய சிறுகதைகளின் தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன. பல வானொலி நாடகங்களையும் எழுதியுள்ளார். சில சிறுகதைகள் வானொலிச் சிறுகதைகளாக அமைந்தன. சுக்கிராச்சாரியார் என்ற நாடகம் கைலாசபதி கலையரங்கில் அரங்கேறியதுடன் தேவயாணி என்ற பெயரில் வானொலி நாடகமாக ஒலிபரப்பப்பட்டது. அவ்வாறே சேவை செய்வதே ஆனந்தம், வெள்ளை யூனிபோம் என்ற வானொலிச் சிறுகதைகளும் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டன. உள்ளம் என்ற சஞ்சிகையில் இலக்கியா என்ற புனை பெயரிலும், ஈழமுரசு பத்திரிகையில் இலக்கிய சாளரம் என்ற பகுதியில் நடராஜன் மைந்தன் என்ற பெயரிலும், ஈழநாதம் பத்திரிகையில் அழலாடிக்குட்டன் என்ற பெயரிலும், அதே பத்திரிகையில் இலக்கிய பகிர்வு என்ற தொடர் சிதம்பரன் என்ற பெயரிலும், ஒரு படைப்பாளியின் பதிவுகள் வாகுலேயன் என்ற பெயரிலும், மதவடி என்ற நகைச்சுவைத் தொடர் அயக்கிரிவன் என்ற பெயரிலும் சிதம்பர திருச்செந்தி நாதனால் எழுதப்பட்டன.

1970 களில் எழுத்துலகின் பிரவேசித்த அவரது புனைகதைகள் இனவிடுதலை, பெண்விடுதலை, சமூகசுரண்டல்கள், புலப்பெயர்வும் அதன் விளைவுகளும் ஆகிய

விடயங்களை மையமாக கொண்டு அமைந்தன. ஈழப்போரின் தாக்கங்கள் அவரது படைப்புகளின் ஆழமான வெளிப்பாடுகளாக அமைந்தன. மனிதன் மனிதனை மதிக்க வேண்டும். மனிதாபிமானம் உள்ளவனாக இருக்க வேண்டும். ஒருவனது வெற்றிக்கு அவனது அறிவும் உழைப்புமே சிறந்த ஆயுதங்கள் என்ற கொள்கைகள் அவரிடம் காணப்படுகின்றன.

நிர்வாக அதிகாரியாக யாழ்ப்பாணத்திலும், பின் வன்னிப் பகுதியிலும் சேவையாற்றினார். யுத்தகால நெருக்கடி மிக்க சூழலில் மக்களுடன் இணைந்திருந்து அந்தந்த காலத்திற்கு பயன்மிக்க பலவிடயங்களை ஈழநாடு பத்திரிகையிலும், ஆதாரம் காப்பரண், வெளிச்சம், சஞ்சிகைகளிலும் கட்டுரைகளாக எழுதினார். உயிர்பாதுகாப்பு, பொருளாதார மேம்பாடு, சுகாதார பாதுகாப்பு என்பவற்றை விளக்கி யுத்த காலத்தில் ஈழநாதம் பத்திரிகையில் இதழ்க்கீலங்கள் வரைந்தார். இவரது இப்படைப்புக்கள் அறிவு பூர்வமானவையாகவும், ஆக்கபூர்வமானவையாகவும், சமூகப் பெறுமதி வாய்ந்தவையாகவும் அமைந்தன.

1.2 ஆய்வுத் தலைப்பு

இவ் ஆய்வுக் கட்டுரையின் தலைப்பு இணுவை சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புக்கள் ஓர் ஆய்வு என அமைந்துள்ளது.

1.3 ஆய்வு எல்லை

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் சிறுகதை ஊடாக எழுத்துலகில் பிரவேசித்து நாவல்கள், குறுநாவல்கள், திறனாய்வுக்கட்டுரைகள், கட்டுரைகள், நாடகங்கள், வானொலி நாடகங்கள், இதழியல்க்கீலங்கள் (ஆசிரியர் தலையங்கம்) என பல்வேறு படைப்புக்களை உருவாக்கியுள்ளார். எனினும் ஆய்வு எல்லை கருதி இணுவை சிதம்பரதிருச்செந்திநாதனின் சிறுகதைகள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

1.4 இலக்கிய மீளாய்வு

இலக்கிய மீளாய்வு என்பது குறித்த ஆய்வுக்குரிய விடயம் பற்றி முன்னர் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் ,முன்மொழிவுகள், விமர்சனங்கள், கட்டுரைகளில் என்ன விடயங்கள் கூறப்பட்டுள்ளன. விமர்சகர்களின் பார்வையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விடயங்கள் எவ்வாறு நோக்கப்பட்டன என அறிந்து கொள்வதாகும். இதன் மூலம் எமது ஆய்வுக்கான ஒரு வழித்தடம் எவ்வாறு அமைய முடியும் என நாம் தீர்மானிக்கலாம். எனவே ஒரு ஆய்வுச் செயற்பாட்டுக்கு முன் இலக்கிய மீளாய்வு அவசியமானதாகும்.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனுடைய வெட்டுமுகம் சிறுகதை தொகுதிக்கு பேராசிரியர் நா. சுப்பிரமணியன் 1993 இல் முன்னுரை வழங்கியுள்ளார். அவர் தமது முன்னுரையில் "சிதம்பர திருச்செந்திநாதன் யாழ்ப்பாணப்பிரதேசத்தின் போர்ச்சூழலையும், அதன் பாதிப்புகளையும், சீதனம் முதலான சமூகப் பிரச்சினைகளையும், புலம் பெயர்வையும் அதனால் ஏற்படும் மாற்றங்களையும், பதிவு செய்துள்ளார். மேலும் அவரது படைப்புகள் மண்வாசனை மிக்கவையாக அமைந்துள்ளன. சமூக சிக்கல்களை மக்களுக்கு இப்படியுள்ளது என காட்டியுள்ளார். எனினும் அவற்றுக்கான தீர்வுகளை அவர் போதிக்கவில்லை." என எழுதியுள்ளார். சிறுகதைகள் இன்னும் இறுக்கமாகவும் கட்டமைப்பு செம்மையுடன் அமைய வேண்டும் என்கிறார்.

என்னுடையதும் அம்மாவினுடையதும் சிறுகதை தொகுதிக்கு முன்னுரை வழங்கிய பேராசிரியர் கா. சிவத்தம்பி 22.11.1994ல் யாழ்ப்பாண வாழ்வியல் புனைகதைகளில் இடம்பிடிக்க ஆரம்பித்துள்ளது. இந்த மண்ணின் வாழ்க்கை சிதறல்களுக்குள் நின்று கொண்டே அவற்றுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்ற ஆசிரியரின் கொள்கையைச் சுட்டிக்காட்டி, இவ் எண்ணம் சிறுகதைகள் யாவிலும் இழையோடியுள்ளதாக குறிப்பிடுகிறார். சிறுகதைகள் எடுத்துக்கூறல் முறையில் அமைந்துள்ளன. சில தலைப்புகள் கதைகளில் உணர்வை வெளிப்படுத்துகின்றன. சிறுகதைகளுக்கு தலைப்புக்கள் முக்கியத்துவமானவை. மனித நிலை சோகங்களில் சவால்களை எதிர்நோக்கும் துணிவான தன்மை கதைகளில் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். அதே வேளை ஈழத்து சிறுகதைகள் பெருமளவில் எடுத்துக்கூறல் முறையில் அமைந்துள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

09.10.2011 இல் மணல் வெளி அரங்கின் முன்னுரையில் பேராசிரியர் சிவசேகரம் யதார்த்தப் பாங்கில் நின்று சிறுகதைகள் ஒரு குறியீட்டு வடிக்கு மாற்றம் பெற்றுள்ளன. குறியீட்டு வடிவில் விடயங்களை வெளிப்படுத்தும் ஆசிரியரின் தேர்ச்சியை பாராட்டியுள்ளதுடன் ஆசிரியரின் கதை சொல்லும் ஆற்றல் விரிவடைந்துள்ளதாக குறிப்பிடுகிறார்.

பேராசிரியர் யோகராசா "இணுவை சிதம்பரத் திருச்செந்திநாதன் பதிவும் பகிர்வும்" என்ற நூலிற்கு 2015ல் வழங்கிய கட்டுரையில் ஈழத்து சிறுகதைகளில் அதிகளவு பிரச்சினைகளை சிதம்பர திருச்செந்திநாதன் எடுத்துக் காட்டியுள்ளார். யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையின் ஒரு வெட்டுமுகமாக அவரது படைப்புக்கள் அமைந்துள்ளன. போர் இலக்கியம், புகலிட இலக்கியம், பெண்கள் இலக்கியம் என அவரது படைப்புகள்

அமைந்தன. அரச அலுவலகங்களில் பணிபுரியும் பலரது நடத்தைகளை சுவைபட வெளிப்படுத்துவதாக அவரது படைப்புகள் அமைந்துள்ளன என குறிப்பிடுகிறார்.

பேராசிரியர் சிவநாதன் "இணுவை சிதம்பரத் திருச்செந்திநாதன் பதிவும் பகிர்வும்" 2015 என்ற நூலில் சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புகள் காலத்தின் பிறப்பாக்கமாக உள்ளன எனக் குறிப்பிடுகிறார். இச்சிறுகதைகளில் படைக்கப்பட்ட கதாபாத்திரங்கள் வளர்க்கப்பட்ட விதமும், வார்க்கப்பட்ட விதமும் அவருக்கே உரிய தனித்துவம்மிக்க பாணியில் அமைந்துள்ளன. அவரது மேன்மக்கள் என்ற கதை சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. அவருடைய கதைகளில் அமைதியையும், கிராமியப்பண்பையும் காண முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். எழுத்தாளரின் பார்வையும் தரிசனமும் மானிடம் தழைக்க உதவவேண்டும் என்ற வெளிப்பாட்டை முன்வைக்கிறது. "பாசமும் மகிழ்ச்சியும் இன்பமும் துன்பமும் வெற்றியும் தோல்வியும் வாழ்வின் தரிசனங்கள் என்பதைக்காட்டி நாம் நிஜ உலகில் வாழ்கிறோம் என்பதை சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புகளில் உணர்த்தியுள்ளார்" என எழுதியுள்ளார். தமது பாத்திரங்களை வெறும் கற்பனையிலும் கனவிலும் வாழப்பழக்காமல் மக்களோடு மக்களாக வாழும் பாத்திரங்களாகப் படைத்துள்ளார்.

"இணுவை சிதம்பரத் திருச்செந்திநாதன் பதிவும் பகிர்வும்" நூலிற்கு 2015 இல் பேராசிரியர் அ.சண்முகதாஸ் சிறுமைகண்டு பொங்கும் இயல்பை அவரது சிறுகதைகள் வெளிப்படுத்துகின்றன. சில சிறுகதைகள் குறியீட்டுத் தன்மை மிக்கனவாக உள்ளன. என்பதற்கு தேவன் என்ற கதையை உதாரணமாக காட்டுகிறார். யாழ்ப்பாண மத்தியதர மக்களின் வாழ்க்கை முறையை சித்தரிப்பது இவரது பொதுவான இயல்பு என குறிப்பிட்டுள்ளார். சொல்லுக்கும் செயலுக்கும் இடையே வேறுபட்டு நடக்கும் போலிப் பெருமைகளை எழுத்தாளர் அம்பலப்படுத்துவதை சுட்டிக்காட்டுகிறார்.

பேராசிரியர் சபா ஜெயராசா "இணுவை சிதம்பரத் திருச்செந்திநாதன் பதிவும் பகிர்வும்" 2015 நூலிற்கு வழங்கிய கட்டுரையில் "சிதம்பர திருச்செந்திநாதனின் அறிவும், துன்ப துயரங்களை சுமந்த மக்களுடன் இணைந்திருந்த அவரது வாழ்வும், அவரது படைப்புக்கள் காலத்திற்கு காலம் செழுமையடைய உதவியுள்ளது" என்பதை குறிப்பிட்டுள்ளதுடன் அவரது புனைகதைகள் நோக்கப்பட்ட அளவிற்கு அவரது புனைகதைசாராத படைப்புக்கள் ஆய்வு செய்யப்படவில்லை என்பதை குறிப்பிட்டுள்ளதுடன் தமிழில் புனை கதை வடிவங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கேற்ப புனைவுசாரா படைப்புக்களில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என்கிறார். சிதம்பர

திருச்செந்திநாதனின் படைப்புகள் காலத்தில் தேவைகளாக முனைப்புக் கொண்டவை, உடல் உள பாதுகாப்பு, பொருண்மிய அறிவு, சூழல்நோக்கு என்பவற்றை அடிப்படையாக கொண்ட புனைவுசாரா எழுத்துக்கள் சமூகப் பெறுமதி வாய்ந்தவை. கட்டுரைகள் அகவயத்தன்மை, புறவயத்தன்மை என்ற எழுத்தாளரின் சார்பு நிலையை தகர்க்கக் கூடியன எனவே, புனைவுசார எழுத்துக்கள் தமிழில் ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியம் என்பதையும் விளக்குகிறார். இதழியல் வளர்ச்சியோடு வளர்ந்த இதழ்க்கீல எழுத்துக்கள் தனித்துவம் மிக்கவை தகவலளிப்பு, தகவல் மதிப்பீடு, தகவற் கருத்து மதிப்பீடு ஆகிய பல பரிமாணங்களை கொண்டவை, எனவே இதழ்க்கீல எழுத்துக்கள் ஆய்வு செய்யப்பட வேண்டியவை என்பதையும் பேராசிரியர் முன்வைத்துள்ளார்.

"இணுவை சிதம்பரத் திருச்செந்திநாதன் பதிவும் பகிர்வும்" என்ற நூலில் 2015ல் பேராசிரியர் வ.மகேஸ்வரன் சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புகளில் நாவல்களை விட சிறுகதைகளே அவரின் எழுத்தாளுமையை பிரதிபலிக்கின்றன. யாழ்ப்பாணத்தின் அசைவியக்கத்தை அச்சு அசலாக பிரதிபலிக்கின்றது என்கிறார்.

1.5 ஆய்வின் தேவை

எழுத்தாளன் ஒருவன் தனது படைப்பிலக்கியங்கள் வாயிலாக சொன்னவற்றை விட அவன் மறைமுகமாக உணர்த்தும் விடயங்கள் அதிகமானவையாக இருக்கும், அவற்றை நேரடியாக வெளிப்படுத்தவும், எழுத்தாளனின் கருத்துநிலையை அறிந்துகொள்ளவும் ஆய்வு அவசியமாகிறது.

ஈழத்து புனைகதைகள் முற்போக்கு, நற்போக்கு என்ற போக்குகளுடன் இடது சாரித்துவ கொள்கைகளுக்கு முதன்மை கொடுத்தவை. ஆனாலும் அவை தொடர்ந்து அதே தளத்திலே பயணித்தன எனச் சொல்ல முடியாது. இலங்கையின் அரசியல் மாற்றங்கள அதற்கு காரணங்களாக இருக்கலாம். இவ்வாறான நற்போக்கு, முற்போக்குக் கொள்கைகளுடன் சேர்ந்து குழுவாக செயற்பட்டவர்கள் சுயேட்சையாக சுயாதீனமாக இயங்கிய எழுத்தாளர்களுக்கு சரியான இடம் வழங்கினார்கள் எனக் கூறமுடியாது. மூத்த எழுத்தாளர் ஒருவர் சிதம்பர திருச்செந்திநாதனின் படைப்பு ஒன்றுக்கான அணிந்துரையில் "முதிரா இளைஞனின் படைப்புக்கள்" என அவரது படைப்புக்களைச் சுட்டுகிறார். ஆகவே எந்த அளவுக்கு ஈழத்து எழுத்துலகம் நடுநிலையுடன் செயற்பட்டது அல்லது கைகொடுத்துதவியது என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு எழுத்தாளரையும் ஒவ்வொரு சிறிய வட்டத்திற்குள் எழுத்துலகம் பூட்டிவிட முனைந்துள்ளது.

அந்த வட்டங்களுக்கு வெளியே ஒரு எழுத்தாளரை வெளிப்படுத்த ஆய்வு தேவையாக உள்ளது.

பல எழுத்தாளர்கள் புகழ்பெற்ற எழுத்தாளர்களாக ஈழத்திலும், தமிழகத்திலும் விளங்கினார்கள். அவர்கள் எழுத்துலக ஜாம்பவான்களாக இருந்திருக்கலாம். ஆனால் அவர்களுடைய எழுத்துக்கள் பல சமூக கட்டுமானங்களின் அடிப்படையான விடயங்களை கேள்விக்குள்ளாக்கின. பெண்ணியம் பேச வந்த பலர் அதை சரியான விதத்தில் கையாளவில்லை. ஆண்களை பெண்களுக்கான பொது விரோதிகளாகவே அவர்கள் சித்திரித்தனர். அதையே எழுத்துகளிலும் பிரதி செய்தனர். அதன் சமூக தாக்கத்தினை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. சிலருடைய எழுத்துக்கள் குடும்ப அமைப்பை கேள்விக்கு உள்ளாக்கின. அது சமூக கட்டுமானத்தை கேள்விக்குள்ளாக்கும் விடயம். ஆனால் எழுத்துக்கள் சமூகக் கட்டமைப்பை பலப்படுத்துவனவாக அமைய வேண்டும். இதனால் எமது சமூகம் குறைபாடுகளுக்கு அப்பாற்பட்டது, குறைபாடு இல்லாதது என கூறமுடியாது, ஆனால் மேற்குலக சமூக கட்டுமானங்களுடன் பார்க்கும் போது வலுவானவையாக உள்ளன. அவை சட்டத்தினால் அன்றி சமூக ஒழுக்க விழுமியங்களால் வடிவமைக்கப்பட்டவை, அவை கேள்விக்குள்ளாக்க கூடாதவை. அதன் விளைவு சமூகத்தை சீரழிக்க கூடியது. அவ்வாறான கைங்கரியங்களை செய்த பல எழுத்தாளர்கள் எழுத்துப் புரட்சி செய்தவர்களாக தூக்கி நிறுத்தப்பட்டனர். இவ்வாறன விடயங்களையும், அவற்றின் பொய்மை தன்மையை வெளிப்படுத்த படைப்புகள் தொடர்பான ஆய்வுகள் அவசியமாகும்.

பல இடங்களில் நாம் படைப்புக்களை கவனத்தில் கொள்கிறோமே தவிர படைப்பாளனை பற்றி கவனத்தில் கொள்வதில்லை. “படைப்பாளன் பொதுவாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் எவ்வாறு இருக்கிறான்” என்ற பார்வை தேவையானது. எழுத்தாளன் சமூகத்திற்கு வழிகாட்டியாக, முன்மாதிரியாக இருக்க வேண்டியவன். எனவே ஒரு எழுத்தாளன் சமூகத்திற்கு தன்னுடைய படைப்புகள் மூலமாகவும், வாழ்க்கை மூலமாகவும் சொல்லும் செய்தியை அறிந்து கொள்ள அவனை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

“ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி” என்ற போக்கு கூட படைப்பாளிகள் பலரால் வெளிப்படுத்தப்படுகிறது. சில எழுத்தாளர்கள் “எனது படைப்புக்கள் எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல எப்படியெல்லாம் வாழக்கூடாது என்பதற்காக” படைப்பதாக காட்டுகிறார்கள். அவர்களை பற்றிப் பிரச்சினை இல்லை. சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்புள்ளவனாக எழுத்தாளன் இருக்கிறானா? எழுத்தாளன் படைப்பு நேர்மை உள்ளவனா? என அறிந்து கொள்ள ஆய்வு தேவையாக உள்ளது.

சிதம்பர திருச்செந்திநாதன், சிறந்த எழுத்தாளன், சிறந்த சமூக மனிதன், முன் மாதிரியான அம்சங்களைப் பின்பற்றுபவர், தனது சொல்லினும் செயலிலும் ஒரே தன்மையை வெளிப்படுத்துபவர். தனது ஆற்றலை படைப்பு நேர்மையோடு வெளிப்படுத்துவதுடன், அதனை அடுத்த தலைமுறைக்கு கையளிக்க வேண்டும். என்ற கையளிப்புப் பாரம்பரியம் உள்ளவர். புதியவர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க கூடியவர். வாசிப்புக்காக தனது நேரத்தை செலவிடுபவர். மிகுந்த மனோபலமுள்ளவர் இவ்வாறன சமூக முன்மாதிரியான பண்புகளை வெளிப்படுத்த அவர் பற்றிய, அவரது படைப்புகள் பற்றிய ஆய்வு அவசியமாக உள்ளது.

1.6 ஆய்வின் நோக்கம்

சிறுகதைகள், நாவல்கள், வானொலி நாடகங்கள் போன்ற புனைவுகளையும், கட்டுரைகள், இதழ்க்கீலங்கள் என புனைவுசாரா இலக்கியங்களையும் சிதம்பர திருச்செந்தி நாதன் படைத்துள்ளார். இவரது படைப்புக்கள் தொடர்பாக இதுவரை ஆய்வெதுவும் மேற் கொள்ளப்படவில்லை. அவரது படைப்புக்கள் தமிழ்மக்களின் வாழ்வியற் பிரச்சினைகளை எவ்வளவு தூரம் வெளிப்படுத்துகின்றன, அவரது இலக்கியக் கொள்கை, தனது இலக்கியக் கொள்கையை தனது படைப்புக்கள் ஊடாக வெளிப்படுத்தும் முறை, அவரது சமூகம் குறித்த பார்வை, இதனைத் தனது படைப்புக்களில் வெளிப்படுத்தும் முறை, கதை சொல்லும் முறை, அதில் அவர் கண்டுள்ள வெற்றி என்பவற்றை அறிந்துகொள்வதுடன், அவரது படைப்புக்கள் எவ்வளவு தூரம் சமூகப் பெறுமதி வாய்ந்தது என்பதை ஆய்வு செய்வதே இவ் ஆய்வின் நோக்கம் ஆகும்.

1.7 ஆய்வின் கருதுகோள்

"ஈழத்து புனைகதைத் துறையில் சிதம்பரத் திருச்செந்திநாதனின் படைப்புகள் சிறப்பும் தனித்துவமும் கொண்டவையாக அமைந்துள்ளன. அவை ஈழத்தமிழ் மக்களின் வாழ்வியல் கோலங்களை பிரதிபலிக்கின்றன" என்பது இவ்வாய்வின் கருதுகோளாகும்.

1.8 ஆய்வு அணுகு முறை

இணுவை சிதம்பர திருச்செந்திநாதனின் படைப்புகளை இவ் ஆய்வு முயற்சியின் போது வகைப்படுத்திக்காட்டுதல், பகுத்துநோக்குதல், தொகுத்துக்காட்டுதல், அறிஞர்களின் கருத்துகளுடன் இணைத்துப்பார்த்தல் என்ற வகையில் ஆய்வுசெய்யப் படுகிறது. தனி மனிதப் பிரச்சினைகளையும் சமூகப் பிரச்சினைகளையும் அவர் முன்வைக்கும் விதங்களை ஆராய்ந்து அவரது படைப்புக்களின் சமூகப் பெறுமானங்களை வெளிப் படுத்துவனவாக இவ் ஆய்வு அமையும்.

1.9 ஆய்வு மூலங்கள்

சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புக்களை ஆய்வு செய்ய அவரது படைப்புகளான,

- ❖ மீண்டும் புதிதாய் பிறப்போம்
- ❖ முடிவல்ல ஆரம்பம்
- ❖ இருள் இரவில் அல்ல
- ❖ முள்முடிமன்னர்கள்

என்ற நாவல்களும்

- ❖ வெட்டுமுகம்
- ❖ என்னுடையதும் அம்மாவினுடையதும்
- ❖ மணல் வெளி அரங்கு

என்ற சிறுகதைத் தொகுதிகளும் முதல் நிலை மூலங்களாக கொள்ளப்படும். விசேடமாக சிறுகதைகள் இவ் ஆய்வில் கவனத்தில் எடுக்கப்படும்.

அவரது படைப்புகள் சம்பந்தமாக அறிஞர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்களின் கட்டுரைகள் என்பவற்றுடன், அவரது பேட்டிகள் அடங்கிய நூலான "பதிவும் பகிர்வும்" வெளியிடப்பட்டது. அந்த நூலும், அவர் தொடர்பாக பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த பிரசுரங்களும் துணை நிலை மூலங்களாக பயன்படுத்தப்படும்.

1.10 ஆய்வின் பயன்

சிதம்பர திருச்செந்திநாதனுடைய படைப்புகள் சமூக கட்டமைப்பை செம்மைப்படுத்துவனவாக உள்ளன. குடும்ப உறவுகளை வலுப்படுத்துவன, சமூகத்தில் காணப்படும் பெண் அடிமைத்தனத்தையும், சீதனக் கொடுமைகளையும், சமூகப் போலித்தனங்களையும் சாடுவன, மனித விழுமியங்களான அன்பு, ஒத்துழைத்தல், ஒற்றுமை என்பவற்றை வெளிப்படுத்துவன. எனவே அவ் உயர்ந்த பண்புகளை அறிந்துகொள்வது இவ் ஆய்வின் பயன்களில் ஒன்றாகும்.

சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புலகில் பிரவேசித்த காலம், இந்த மண்ணின் மக்கள் குறிப்பாக இளைஞர்கள் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்து சென்ற காலம், அதே வேளை அதற்கான நிர்ப்பந்தங்களும் தீவிரமடைந்த காலம், அக்காலத்தில் இந்த மண்ணிலே வாழ்ந்து “இந்த மண்ணின் வாழ்க்கை சிதறல்களுக்கு அதற்குள் நின்று கொண்டே முகம் கொடுக்க வேண்டும்” என்ற எண்ணத்தை வார்த்தையில் மட்டுமன்றி வாழ்விலும் கடைப்பிடித்தவர். அவ்வாறன ஒரு துணிவை எவ்வாறு பெற முடிந்தது என்பதை அறிந்து கொள்வதும் இவ் ஆய்வின் பயனாகும்.

எழுதுவதை, சொல்வதை, தனது தனிப்பட்ட வாழ்விலும் கடைப்பிடித்து விடாப்பிடியான தனது கொள்கைப் போக்கில் நின்று செயற்படுவது எல்லோருக்கும் இயலாத காரியம். மெலிந்த பலவீனமான ஒரு மனிதனுக்குள் பலம் வாய்ந்த மனோதிடம் இருக்கிறது. அந்த மனோதிடம் எவ்வாறு அவருக்கு வந்தது? அதனை அவர் எவ்வாறு பெற்றுக் கொண்டார் என இவ் ஆய்வின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

அவர் சமூகத்தின் மீது கொண்டுள்ள பார்வை என்ன? இந்த சமூகம் எப்படி அமைய வேண்டும்? அதன் செழுமைக்கும் வளப்பத்திற்கும் அவர் முன்வைத்த விடயங்கள் என்ன? அவை சமூகத்தின் காதுகளில் எப்படி ஒலித்தது? இன்னும் இன்னும் இந்த சமூகத்திற்கு எதை எதை எப்படி சொல்ல முடியும்? என்பதை இந்த ஆய்வு உணர்த்துவதாக அமையுமாயின் இவை ஆய்வின் பயன்களாகும்.

1.11 ஆய்வின் அமைப்பு

இயல் ஒன்று ஆய்வேட்டின் அமைப்பை விளக்குகிறது. இவ் ஆய்வேட்டின் அமைப்பு, ஆய்வுத் தலைப்பு, ஆய்வு அறிமுகம், ஆய்வு எல்லை, இலக்கிய மீளாய்வு, ஆய்வின் தேவை, ஆய்வின் நோக்கம், ஆய்வின் கருதுகோள், ஆய்வு மூலங்கள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வின் பயன், ஆய்வேட்டின் அமைப்பு என்பவற்றைக் கொண்டுள்ளது.

இயல் இரண்டு எழுத்தாளரின் ஆளுமை, உருவாக்கம் பின்னணியை விளக்குகிறது. அறிமுகம், குடும்பப் பின்னணி, கல்விச்சூழல், சமூகப் பின்னணி, சுயதேடல், இலக்கியப் பிரவேசம், இலக்கியவாதி, சந்தித்த சவால்கள், பெற்ற விருதுகள், எழுத்தாளரின் தொழிற்பின்னணி என்பவற்றை விளக்கும் வகையில் அமைகின்றது.

இயல் மூன்று சிறுகதைகளின் தோற்றம், சிறுகதை தொடர்பான வரையறைகள், தமிழில் புனைகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும், ஈழத்தில் சிறுகதைகளின் வளர்ச்சி, ஈழத்து சிறுகதை வளர்ச்சிக்கு வழிகோலி நின்ற பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன ஆராயப்படுகின்றன.

இயல் நான்கு சிதம்பர திருச்செந்திநாதன் சிறுகதைகளின் கருத்துநிலை ஆராயப்படுகிறது. போர்ச்சூழலை பிரதிபலித்தல், பெண்ணியம் சார்ந்த வெளிப்பாடு, புலம் பெயர்வும் அதன் பின்னணியும், சமூகப் போலிகளை வெளிப்படுத்தல், முதியோர் சார்ந்த பிரச்சினைகள் என்ற விடயங்களை இது ஆய்வு செய்கிறது.

இயல் ஐந்து சிறுகதைகளின் கலைத்துவம், மொழியாற்றல், கதைக்கட்டமைப்பு, பாத்திரவார்ப்பு, மொழி நடை, கதை கூறும் முறை, வர்ணனைகள், உவமைகள், குறியீடுகள், கதைத் தலைப்புகள் என்பன ஆய்வு செய்யப்படுகின்றன. இவ் ஆய்வின் இறுதிப்பகுதியாக ஆய்விற்குப் பயன்படுத்திய நூல்களின் பட்டியலில் இடம்பெறுகிறது.

இயல் ஆறு ஆய்வு முடிவுரை, உசாத்துணை நூல்களின் பட்டியல் என்பன இடம்பெறுகின்றன.

இயல்

இரண்டு

இயல் – இரண்டு

இணுவை சிதம்பர திருச்செந்திநாதனின் ஆளுமை உருவாக்கப் பின்னணி

2.1 அறிமுகம்

படைப்பாளிகள் தாம் வாழும் சமூகத்தையும், சமூகத்தில் வாழும் மனிதர்களையும், அவர்களது சிந்தனைகள், செயல்களையும், அவர்களது வாழ்க்கையின் அன்னியோன்னியமான உறவுகளையும், அவர்களின் முரண்பாடான நிலைகளையும், சமூகத்தின் நிகழ்வுகளையும் நுட்பமாக சித்தரிக்கின்ற கலைஞர்கள். சமூகத்தின் நெளிவு சுழிவுகளையும், புகழ்விரும்பி செய்யும் பித்தலாட்டங்களையும், பாரம்பரியமான பழக்கவழக்கங்களின் தற்கால ஒவ்வாமைகளையும், மக்கள் வாழ்க்கைச் சூழலில் அனுபவிக்கும் இன்ப துன்பங்களையும் உணர்வு பூர்வமாக படைப்பதில் வெற்றி பெறுபவர் சிறந்த படைப்பாளி.

1. இலக்கியம் சமுதாயப்பயன்பாடு மிக்கதாக அமைய வேண்டும்.
2. தற்கால மனித நடத்தைகளை விமர்சனங்களுடன் சமூக வெளிக்கு கொண்டு வருதல் வேண்டும்.
3. சிறப்பான உருவ உள்ளடக்கங்களுடன் மக்கள் மனதை தொடச் செய்து அவர்களின் சமூக சிந்தனையை தூண்டுதல் வேண்டும்.

இவை படைப்பாளிகளிடம் எதிர்பார்க்கப்படும் விடயங்களாகும். மேலே சொன்ன விடயங்களை செய்யக் கூடிய படைப்பாளிகள் தனது காலத்தை வரலாற்றில் பதிவு செய்தவர்களாகின்றனர். இச் செயற்பாடுகளைச் செய்ய எல்லாப் படைப்பாளிகளாலும் முடிவதில்லை.

சமூகத்தை கூர்ந்து அவதானிப்பதன் மூலம் மனிதனின் எண்ண ஓட்டங் களையும், அவனது செயற்பாட்டுத்தளங்களையும் நுணுகி ஆராய்ந்து, நிகழ்கால மனிதனை பாத்திரப் படைப்புகளாக எழுத்தாளன் சித்திரிக்கின்றான். சமூகத்தில் வெளிக்கிளம்புகின்ற பிரச்சினைகளையும் அப்பிரச்சினைகளை சமூகம் எவ்வாறு கையாள்கிறது என்பதையும், பிரச்சனைகளுக்கு எவ்வாறான தீர்வுகள் சிறப்பானவையாக அமையும் என்பதையும், தனது படைப்புகள் ஊடக குறியீட்டு வடிவிலும், நேரடியாகவும் எழுத்தாளன் முன்வைக்கிறான். அவர்களின் இப்பணி முக்கியமானதாகும். இத்தகைய பின்னணியில் சமூகம் தன்னை தானே பார்த்துக் கொள்ளவும், செப்பனிடவும் படைப்பாளிகள் உதவுகின்றனர். அவர்களுடைய சமூகப் பொறுப்பும் அந்தளவிற்கு அவசியமானதாகும்.

ஒரு படைப்பாளன் ஒரு சிறந்த படைப்பு ஒன்றை வெளிப்படுத்த அவனுக்கென விசேடமான ஆற்றலும் பண்புகளும் தேவைப்படுகிறது. உணர்வு அனுபவம் கற்பனை பார்வை இதெல்லாம் தேவை[1] நுண்ணறிவு, தர்க்கரீதியான சிந்தனை இவைஎல்லாம் சமூகப் பிரச்சினைகளை இனம்கண்டு தர்க்க ரீதியாக முன்வைக்க, எழுத்தாளன் நடுநிலையில் நின்று படைப்புகளை ஆக்க உதவும். இவ்வாறு செயற்படும் எழுத்தாளன் யதார்த்த எழுத்தாளன் ஆவான்.

எழுத்தாளன் பிறக்கும் போதே எழுத்தாளனாக பிறப்பதில்லை. அவனுக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களும், அவனால் வரித்து கொள்ளப்படும் முன்மாதிரியான மனிதர்களும், குடும்பத்திலும், பாடசாலை காலத்தில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், ஏற்படுத்தப்படும் அருட்டுணர்வு ஒருவனை இலக்கிய படைப்பாளியாக மாற்றியமைக்கிறது. உளவியல் ரீதியாக ஒரு மனிதனை உருவாக்குவதில் மரபு சார்ந்த காரணிகளும் சூழல் சார்ந்த காரணிகளும் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றனவோ, அவ்வாறே இவ்விரு காரணிகளும் படைப்பாளியை உருவாக்குவதிலும் செல்வாக்கு செலுத்துகின்றன. ஒருவனுக்கு கிடைக்கும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் எவ்வாறு ஒருவனை வடிவமைப்பு செய்கிறார்களோ, அவ்வாறே அவன் வளர்ந்து விடுகிறான். இது படைப்பாளிகளுக்கும் பொருந்தும்.

சமூகத்தின் அங்கீகாரம் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் எவ்வளவு அவசியமானதோ அவ்வாறே படைப்பாளிகளுக்கும் அவனது படைப்புக்கும் சமூக அங்கீகாரம் அவசியம். அவன் காணும் மனிதர்கள், சமூக நிகழ்வுகள், அவனது சகபாடிகள் படைப்புக்களுக்கு உந்துதலாக இருக்கின்றனர். அவர்களே பாத்திரங்களாக உருமாற்றம் செய்யப்படுகிறார்கள் அல்லது அவர்களை மாதிரியாக கொண்டு பாத்திரங்கள் வடிவமைக்கப்படுகின்றன. அவர்களே படைப்புகளை அங்கீகரிக்கிறார்கள். எனவே இலக்கியங்கள் மக்களால் மக்களுக்காக மக்களை பற்றி ஆக்கப்பட்டு அவர்கள் அங்கீகாரம் பெறுகின்றன. அவை ஜனநாயகத் தன்மை வாய்ந்தவை. சமூக இயல்பே படைப்புகளாகின்றன. "நிலத்தியல்பு பயிர்க்குளதாகுமாம்". இலக்கியத்தை இலக்கியவாதியை அவன் வாழும் சமூகமே தீர்மானிக்கிறது. இந்த வழியில் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் ஆளுமை உருவாக்க பின்னணியை பார்ப்போம்.

2.2 குடும்பப் பின்னணி

சிதம்பர திருச்செந்திநாதனின் குடும்பப் பின்னணி சிதம்பர திருச்செந்திநாதன் இணுவில் சிதம்பரநாதபிள்ளை அன்னலட்சுமி தம்பதிகளுக்கு 29.05.1954ல் மகனாகப் பிறந்தார். திருச்செந்திநாதன் என்பது அவர் பெயர். இவரது தந்தையார் காணிப் பதிவகத்தில் எழுதுநராக பணிபுரிந்தவர். சிறந்த நாடக கலைஞர், இனிமையாக பாடுவார். அழகாக நடிப்பார். வில்லிசை கதாப்பிரசங்கம், நகைச்சுவைப்பேச்சு, வீறாப்பான தொழிற்சங்க பேச்சு

முதலிய கலைகளில் வல்லுநர்[2]. எந்தவேடமும் பொருந்தக்கூடிய உடற்கட்டு வாய்க்கப்பெற்றவர். தந்தையின் பின்னணி சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புக்களுக்கு ஊக்கமளிப்பதாக அமைந்தது.

சிதம்பர திருச்செந்திநாதன் தந்தையின் தொழில் காரணமாக மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு, எனப் பல இடங்களிலும் வளர்ந்துள்ளார். அவர் சிறுவனாக இருக்கும் போது மன்னார் கலாமன்றத்தில் தந்தையாரின் நாடக நிகழ்வு ஒன்று ஏற்பாடாகி இருந்தது. அதற்கு ஒரு சிறுவன் தேவைப்பட்டான். சிதம்பர திருச்செந்திநாதன் சிறுவனாக இருந்தமையால் அவனையே போடலாம் என முடிவு செய்தனர். ஆனால் அவன் மறுத்துவிட்டான். "நீ என்ரை மகன் இப்படி வெட்கப்படலாமா நாடகமும் கலைகளும் எங்களின் பரம்பரைச் சொத்து நீ இப்படி பயந்து நடுங்கினால் சரிவராது மேடையில் ஏறியவுடன் சனங்களை வடிவாகப் பார் உடன் பயம் போய்விடும்" தந்தையார் மகனுக்கு காட்டிய உற்சாக வார்த்தைகள் வெற்றியளித்தன.[3] அந்த மேடையில் சிதம்பர திருச் செந்திநாதன் முதன் முதலாகப் பிரவேசித்தார்.

பாடசாலைகளில் படிக்கும் காலங்களிலேயே எழுத ஆரம்பித்த சிதம்பர திருச்செந்திநாதன் பல கதைகளை எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்பினார். எந்த கதையும் பிரசுரமாகவில்லை. இதனால் அவரிடம் ஒருவிதமான கவலை வெளிப்பட்டது. இதனை அவதானித்த தந்தை மகனையும் அழைத்துக்கொண்டு வீரகேசரி பத்திரிகை ஆசிரியரிடம் சென்றார். அனுப்பிய சிறுகதை தொடர்பான விடயம் பற்றி கேட்டபோது அது சரியில்லை என்ற பதிலே வந்தது. "நீங்களும் ஒரு தகப்பன் என்ர மனநிலை உங்களுக்கு விளங்கும் என்று நினைக்கிறேன். ஒரேயடியாக திருத்தேலாது தானே எப்பிடியெண்டாலும் நீங்கள் தன்னும் திருத்தி இந்த கதையை போடுங்கோ"[4] வீரகேசரி பத்திரிகை ஆசிரியர் அந்த கதையை சில திருத்தங்களுடன் கறிவேப்பிலை என்ற தலைப்புடன் பிரசுரித்தார். அதனால் சிதம்பர திருச்செந்திநாதன் திருப்திப்படவில்லை. "அது என்ர கதையா வரேல்லை கதையின் தலைப்பும் மாற்றப்பட்டு கதை வேற மாதிரி வந்தது"[5] என்கிறார். இவ்வாறு சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புகளுக்கு அவரது தந்தையார் பங்களித்தார். அவரது உருவாக்க பிண்ணணியில் தந்தையின் செயற்பாடுகள் முக்கியமாக அமைந்தன என்பதை அறிந்து கொள்ள முடியும். தந்தையின் மறைவின் பின் "நல்ல மேய்ப்பான்" என்ற சிறுகதை ஒன்றை ஈழநாடு பத்திரிகையில் எழுதியிருந்தார். அதுவே அவரது என்னுடையதும் அம்மாவினுடையதும் என்ற சிறுகதை தொகுதியின் முதலாவது கதை. அவரது தந்தை அவருக்கு எவ்வாறு நல்ல மேய்ப்பானாக அமைந்தார் என்பதாகவே இக்கதை அமைந்துள்ளது. எழுதத் தொடங்கிய காலம் முதல் என் ஆர்வத்தினை சரியாகப் புரிந்து கொண்டு என்னை

வழிநடத்தும் மறைந்த எந்தை சிதம்பரநாதபிள்ளை அவா்களையும் நினைவில் கொள்கிறேன் என தன்னுடைய வெளியீடுகளின் முன்னுரையில் சிதம்பர திருச்செந்திநாதன் குறிப்பிடுவது உண்மையானது.

இவா் தனது படைப்புக்களை எழுதி முடித்ததும் அவரது குடும்பத்தவா்கள் அவற்றை வாசித்து அவருக்கு உற்சாகமூட்டி உள்ளனா். அவரது படைப்புக்களை அவா்கள் வாங்கி முதலில் வாசித்துள்ளனா். அவரது முதல் வாசகா்கள் அவரது குடும்பத்தினராவார். அவரது சகோதரா் சி.கதிர்காமநாதன் குறிப்பிடும் போது “எழுத்துத் துறையில் முக்கியமாக சிறுகதை, கட்டுரைப்பக்கம், அவா் கவனம் அதிகம் செலுத்தினாா். அவா் எழுதிய சிறுகதைகள் கட்டுரைகளை முதலில் படிக்கும் சந்தா்ப்பம் எனக்குக் கிடைத்தது. அவா் வீட்டில் நடைபயின்று பின் வெளியே வந்து யோசித்துக் கொண்டிருக்கும் போதே எனக்குத் தெரியும் அண்ணை கதை எழுதப்போறார். நானே அவரது முதல் வாசகன்”.[6] இவ்வாறு குறிப்பிடுகிறாா்.

அவரது மனைவி அவரது எழுத்துக்களுக்கு பக்கத் துணையாக இருந்துள்ளாா். ஒரு சிறந்த நிா்வாகியாக இருந்து குடும்பத்தை நெறிப்படுத்தி, எழுத்துப்பணியில் ஈடுபடுவதை அவரது மகள் “அப்பா எழுதவென உட்காா்ந்தால் எழுதிவிடுவார். எழுத உட்கார முதல் யோசித்துக் கொண்டிருப்பார். என்ன எழுத வேண்டும், எப்படி எழுத வேண்டும் என யோசிப்பார் எண்டு நினைக்கிறேன். அப்பாவினது எழுத்து எல்லோருக்கும் விளங்காது. அம்மாதான் அதனை வாசித்து மொழிபெயர்ப்பார். பின்னா் எங்களிடமும் அதனை வாசிக்கத்தருவார். அப்பாவின் கதைகள் பத்திரிகைகளில் வரும் போது சந்தோசமாக இருக்கும். தனது முதல் சிறுகதை பல கடும் முயற்சியின் பின்பே வெளிவந்தது என்றும், அன்று தான் திரும்பத் திரும்ப முயற்சி செய்திராவிட்டால் இவ்வளவு தூரம் வந்திருக்க முடியாது. முயற்சி தான் வாழ்க்கையை முன்னேற்றும் அதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பார். அதே போல் எங்கள் அம்மாவும் அப்பாவிற்கு நல்ல பக்கபலம். அப்பாவைப் பொறுத்தவரை பிள்ளைகளிடம் எதையும் மறைக்கக் கூடாது எல்லா விடயங்களும் தெரிந்திருக்க வேண்டும். அதனால் எதையுமே வெளிப்படையாகக் கதைப்பார். அதே போல் அதிக கட்டுப்பாடுகளைப் போடுவார். அப்பாவிடம் எங்கேயாவது கூட்டிக்கொண்டு போவதற்கு கேட்டோம் என்றால் தயாராகி நிற்க ஒரு நேரம் சொல்வார். அந்த நேரம் தயாராகாது விட்டால் பிரச்சினை தான். நேரத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பார்.”[7] தந்தையின் வழி நடத்தலை இவ்வாறு வெளிப்படுத்துகிறார். ஒரு நல்ல குடும்பச் சூழல் ஒரு மனிதனை அல்லது படைப்பாளனை வடிவமைப்பதில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது. என்பதற்கு சிதம்பரத் திருச்செந்திநாதன் எடுத்துக் காட்டாக அமைகிறார்.

அவர் எல்லோருக்கும் கூறும் அறிவுரையாக "சொத்துச் சுகம் சேர்ப்பதல்ல முக்கியம் முதலில் சமூகத்தில் மரியாதையாக வாழவேண்டும். நாலுபேர் எங்களை மதிக்க வேணும், படிப்புததான் எங்களுக்கு கடைசி வரையும் கைகொடுக்கும், கட்டாயம் படிக்க வேண்டும், எதிர்காலத்தில் ஏதாவது பிரச்சினை வந்தாலும் சொந்தக்காலில் நிற்கலாம்." இதனை பொதுவாகச் சொல்வார். யாரைக் கண்டாலும் "பிள்ளைகள் என்ன செய்யினம் எப்பிடியாவது படிப்பிச்சுப் போடுங்கோ" என்பார். இதிலிருந்து எதிர்கால சமூகத்தின் மீது அவர் கொண்ட அக்கறையை, பொதுவாகப் பெண்கள் எதிர்காலம் தொடர்பாகவும் அவர்களுக்கான கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாகவும் அவர் கொண்டிருக்கும் பார்வை வெளிப்படுகிறது. இவரது கருத்துக்கள் சமூகப் பெறுமதி வாய்ந்தவையாகும். ஒரு சமூக பற்றுமிக்க எழுத்தாளராக அவரது குடும்பம் அவரை வடிவமைத்துள்ளது.

2.3 கல்விப் பின்னணி

சிதம்பரத் திருச்செந்திநாதன், தந்தையாரின் தொழில் காரணமாகப் பல்வேறு பாடசாலைகளில் கல்விகற்றுள்ளார். தகப்பனாரை முன்மாதிரியாகக் கொண்டு அவர் செயற்பட்டுள்ளார். அதனால் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் காலத்தில் சிறுநாடகம் ஒன்றை எழுதி அங்கு ஆசிரியராக இருந்த சைவப்புலவர் செல்லத்துரை அவர்களின் வழிகாட்டலில் மேடையேற்றியமையே அவரது முதல் இலக்கிய முயற்சியாகும்.

சிதம்பரத் திருச்செந்திநாதன் கல்லூரிக் காலத்திலேயே சிறந்த வாசகராக இருந்துள்ளார். அம்புலிமாமா, ராணிக் கமிக்ஸ், சித்திரக்கதைகள், பி.டீ.சாமியின் மர்மக்கதைகள், நல்ல கட்டுரைகள், சிறுகதைகள், எனப் பல்வேறு நிலைகளில் உள்ள புத்தகங்களை வாங்கிப் படித்துள்ளார். தொடர்ந்து வாசிப்பதிலே தனது பெருமளவு பொழுதைக் கழித்துள்ளார். சிறந்த எழுத்தாளன் ஒருவன் முதலில் நல்ல வாசகனாக இருக்கின்றான் என்பதற்கு சிதம்பரத் திருச்செந்திநாதன் சிறந்த எடுத்துக்காட்டு.

மன்னாரில் இருந்து அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வந்தார்கள். சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்வி கற்றார். அங்கு கல்வி கற்கின்ற காலங்களில் சிவசம்பு பண்டிதர் தமிழ் ஆசிரியராக இருந்தார். அவர் கட்டுரைகளை எழுதி வருமாறு கொடுக்கும்போது அக்கட்டுரைகளில் சிதம்பரத் திருச்செந்திநாதனின் கட்டுரைகள் மிகச் சிறப்பாக இருப்பதை மற்றைய மாணவர்களுக்கு கூறுவார். அவற்றை வகுப்பறையில் வாசித்துக்காட்டுவார். சிறப்பான கட்டுரைகளை பாடசாலைக் காலத்தில் வரைந்தமைக்காக அவர் ஆசிரியர்களது பாராட்டுக்களைப் பெற்றார். பாடசாலைக் காலத்தில் உயர்தர வகுப்பில்

இவர் வர்த்தகத் துறையில் கல்வி கற்றார். பின்னர் ஸ்ரீஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தில் B.Com பட்டதாரியாக பட்டப்படிப்பை முடித்தார்.

2.4 சமூகப்பின்னணி

இவரது இளமைக் காலத்தில் இவரும் இளைஞர்களும் இணைந்து இணுவில் கலை இலக்கிய வட்டத்தைத் தோற்றுவித்தனர். இக் கலை இலக்கிய வட்டம் இலக்கிய அறிவினை மேம்படுத்தும் வகையில் இலக்கிய அறிமுக நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், நாடக மேடை ஏற்றங்கள், இலக்கிய விமர்சனங்கள், நூல் வெளியீடுகள் என பலவிதமான இலக்கியச் செயற்பாடுகளை மேற்கொண்டது. கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன், இணுவையூர் சிதம்பரத் திருச்செந்திநாதன், இணுவை துரை எங்கரசு, கவிஞர் சிவசிதம்பரம் என இவ்வமைப்பில் இணைந்திருந்த பலர் பிற்காலத்தில் நாடறிந்தவர்களாக பிரபல்யம் பெற்றனர். இவ் இலக்கிய வட்டத்தில் கோகிலா மகேந்திரன், பேராசிரியர் மௌனகுரு, சேரன், யேசுராசா, கவிஞர் சோ.பத்மநாதன், ரமணி ஐயா ஆகியோர் இணைந்து செயற்பட்டனர். இவ் இலக்கிய வட்டத்தில் இணைந்து செயற்பட்ட சிதம்பரத் திருச்செந்திநாதன் அதன் தலைவராகவும் உபதலைவராகவும், செயற்பட்டுள்ளார். சிதம்பரத் திருச்செந்திநாதனின் " என்றாவது ஒரு நாள்" என்ற குறுநாவல் இணுவில் கலை இலக்கிய வட்டத்தால் வெளியிடப்பட்டது.[8] இவ்வாறு சமூகச் சூழலில் இணைந்து செயற்பட்டமையினால் ஓர் சமூகச் செயற்பாடுடைய எழுத்தாளனாக சமூக அக்கறையுடன் அவரை எழுதத் தூண்டியது.

ஒருவனது எழுத்து அவனது செயற்பாடு, சமூகம் மீதான அக்கறை எல்லாவற்றிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இவற்றில் ஒன்றை விட்டு ஒன்றைப் பிரித்துப் பார்க்க முடியாது. சிதம்பரத்திருச்செந்திநாதன் படைப்பாற்றலின் முனைப்பு தன்னைச் சூழ உள்ள மக்கள் திரளின் நலனை முதன்மைப்படுத்துவதாக அமைந்தது. தான் வாழும் சமூகத்தின் நலனை முதன்மைப்படுத்தி எழுத்துக்களைப் படைப்பது, சமூகத்துடனேயே இணைந்திருந்து அதன் பிரச்சினைகளை வெளிப்படுத்துதல் வேண்டும் என்பன எழுத்தாளரது சமூகக் கொள்கைகளாக அமைந்தன. இந்த மண்ணில் நடைபெறும் வாழ்க்கைச் சிதறல்களுக்கு இதற்குள் நின்று கொண்டே முகங்கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துணிவு சிதம்பரத் திருச்செந்திநாதனிடம் துல்லியமாகக் காணப்படுகின்றது. தொடர்ச்சியாக தான் எடுத்துக்கொண்ட கொள்கையில் சிதம்பரத் திருச்செந்திநாதன் போர்ச் சூழலில் நின்று கொண்டு, அச்சூழலில் மக்கள் சந்தித்த நெருக்குவாரங்களை தன்னுடைய கதைகளில் படம்பிடித்துக் காட்டுகின்றார். அச் சந்தர்ப்பங்கள் அவரை புனைகதைகளையும், புனைவுசாராத கட்டுரைகளையும் வரைவதற்கு நிர்ப்பந்தித்தது. நான் வேறு, படைப்பு வேறு என்றோ ஒரு இலக்கிய வாதியின் படைப்பை மட்டும் மதிப்பிடுங்கள் அவரின் பின்னணி பற்றி ஏன்

அலட்டிக்கொள்கின்றீர்கள் என்றோ கூறுபவர்கள் மத்தியில் தனித்துவமான இலக்கியப் படைப்பாளியாக சிதம்பரத் திருச்செந்திநாதன் இருக்கிறார். அவரை இவ்வாறு உருவாக்குவதில் அவர் வாழ்ந்த சமூகமும் பங்களிப்புச் செய்துள்ளது.

2.5 சுயதேடல்

தனது ஆளுமை உருவாக்க பின்னணி பற்றி சிதம்பர திருச்செந்திநாதன் இரண்டு விடயங்களை அழுத்தமாக கூறுகிறார். ஒன்று எனது தந்தையார், மற்றையது எனது வாசிப்பு என்கிறார். நான் படைப்புக்கள் ஊடாக சமூகத்திற்கு செய்தி சொல்ல வேண்டும் என வெளிவரும் போது, எனது அறிவு சகல துறைகளிலும் பரந்து விரிந்து இருக்க வேண்டும். பிரசங்கம் செய்ய சமய அறிவும், பாட்டுக்கு சங்கீதமும், நடனக்காரிக்கு பரதமும் தெரிந்திருந்தால் போதுமானது. ஆனால் எழுத்தாளன் அரசியல், வணிகம், பொருளியல், புவியியல், சமூகவியல், மொழியியல், விஞ்ஞானம், விளையாட்டு, சினிமா, என பலதுறை சார்ந்த அறிவையும் கொண்டிருக்க வேண்டும். அதனால் நான் எனது பெருமளவு நேரத்தை வாசிப்பதிலேயே செலவு செய்கிறேன் என்கிறார். இன்று பாடசாலைப் படிப்பினை விட தனியார் கல்வி நிறுவனங்களின் படிப்பு Personal Class எனப் போகின்ற சூழலில் பிள்ளைகளுக்கு வாசிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை, சாதாரண பத்திரிகை வாசிப்புக் கூட இல்லை. அதை ஒழுங்குபடுத்துவதற்கான மனோநிலையில் பெற்றோரும் இல்லை[9] எனக் கவலைப்படுகிறார்.

வெளிவரும் புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளை வாங்கிப் படிப்பதிலும் சேகரித்து வைப்பதிலும் தனி ஈடுபாடு கொண்டவர். அவர் புத்தகம் அல்லது பத்திரிகை எதுவாயினும் வாசிக்கத் தொடங்கி விட்டால் யாரும் குழம்பக்கூடாது. தனக்கென ஓர் தனிமையான இடத்தைத் தேர்ந்தெடுத்து வாசிக்கத் தொடங்கி விடுவார். காலத்திற்கு காலம் பெறுமதியான பல புத்தகங்கள் வீட்டில் இருக்கும், அவற்றை எல்லாம் எவ்வளவோ கவனமாக வைத்திருப்பார். காலச்சூழலில் உடமைகளை எல்லாம் இழந்து யாழ்ப்பாணம் வரும் போது முழுப் புத்தகங்களையும் அவர் இழந்துவிட்டார். அவர் அதிகமாக கவலைப்பட்டது புத்தகங்களை நினைத்துத்தான்.

வாசிப்புக் காரணமாக ஏற்படும் தெளிவே ஒரு மனிதனின் நெஞ்சுறுதியை அதிகரிக்கும், அதுவே அவனின் அச்சத்தைப் போக்கும். உடல் ரீதியான பலத்திலும் எத்தனையே மடங்கு பலம் மன உறுதியில் உண்டாகிறது. அது பல யானைப் பலம் குதிரைப்பலத்தையும் விட மேலானது என்பதே அவரது எண்ணமாகவுள்ளது.

ஒருவருடைய படைப்பு முயற்சிக்கு வாசிப்பு மிக அவசியமானது. அந்த வகையில் ஈழத்து எழுத்தாளர் என்.கே.ரகுநாதனின் நிலவிலே பேசுவோம் என்ற கதை

அவரை அதிகம் ஈர்த்துள்ளது. அதே போல பங்கர் வாடி என்ற உருது நாவலரின் மீதும் அவர் அதிக ஈடுபாட்டை கொண்டுள்ளார். தன்னை அதிகமாக அந்த நாவல் கவர்ந்து என்றும் தான் மட்டுமன்றி பலரை அதை வாசிக்குமாறும் கூறுகிறாா.

"அது ஒரு இளைஞன் ஆசிரியா் நியமனம் பெற்று பின் தங்கிய கிராமத்துக்கு போகிறான், போய் அங்கு படிப்பிக்கிறான். அது ஆடு மேய்க்கும் இடையர் வாழும் கிராமம் அந்த நாவலை வாசிக்கும் போது சாணகம், ஆட்டு மூத்திரம் எல்லாம் மணக்கிற மாதிரி இருக்கும் அப்படி அற்புதமான நாவல்"[10] வாசிப்பும் இரசனையும் வெளிப்பாடுகளுக்கு உந்துதலாக அமையும். ஒரு நல்ல படைப்பாளன் சிறந்த வாசகனாக இருக்கிறான் என்பது போல, தனது வாசிப்பு காரணமாக மனதில் எழுந்த உந்துதலே படைப்புகளுக்கு காரணமாகும் என்று கருதுகிறார்.

வாசித்தல், சேகரித்தல், ஆவணப்படுத்தல் என்ற விதத்திலான ஆசிரியரின் செயற்பாடும் முக்கியமானது. சின்ன வயதிலிருந்தே பத்திரிகைகளை பார்த்து நல்ல கட்டுரைகளை சேகரித்து வைக்கும் பழக்கம் உள்ளவர், புத்தகங்களை வாங்கிப் படித்து சேகரித்து வைப்பவர். பெண்ணியம், விஞ்ஞானம், ஓவியம், பொருளாதாரம், சூழல், சூழல் மாசடைதல், சம்பந்தமாக அதிகளவு புத்தகங்கள் அவரிடம் இருந்தன. புதுக்குடியிருப்பில் அவர் இடம் பெயர்ந்து இருந்தபோது ஒரு வீடு நிறைய புத்தகங்கள், அது ஒரு நூலகம் போல காணப்பட்டது. அதுமட்டுமன்றி பத்திரிகைகளில் சேகரித்த கட்டுரைகளும் அழகாக அடுக்கப்பட்டிருந்தது. ஆனால் யுத்தம் காரணமாக அவா் தனது புத்தகங்களை இழந்துவிட்டாா். எனினும் சேகரிக்கும் முயற்சியைத் தொடர்கிறார். "முதல் முந்தி வசந்தத்திற்கு புத்தக பார்சல் வந்தால் உடைத்து முதலில் பார்க்கிறாக்கள் நாங்களாகத்தான் இருக்கும். இயற்கை சம்பந்தப்பட்ட விடயங்கள், பொருளாதாரம் எல்லாவற்றிலும் அக்கறையிருக்கு. அப்ப அந்த புத்தகங்களை வாங்கிச் சேகரிச்சது. அப்ப என்னட்ட எல்லாம் இருந்தது, இப்ப Library ல் போய் பாரத்தால் விசா்வரும், என்னட்டை அவ்வளவும் இருந்தது. இப்ப சிலதுகளை Library ல் எடுத்து Photocopy எடுக்கிறது. புத்தகம் வாங்கக் கூடிய பொருளாதார நிலை இப்ப பிரச்சினை"[11].

இவற்றை நோக்கும் போது அவரின் தேடிச் சேகரித்து வைக்கும் பண்பும் மீண்டும் அவ்வாறானவற்றை தேடும் முயற்சியும் கவனிக்கதக்க விடயங்கள். சிதம்பர திருச்செந்திநாதன் சமூகம் மீதான ஆழமான அக்கறை கொண்டவர். சமூகத்தின் செயற்பாடுகளை கூர்ந்து அவதானிக்கும் பண்பு அவரிடம் காணப்பட்டது. அப்படியான அவதானிப்பு மாத்திரம் அன்றி சமூக குறைகளை சுட்டிக் காட்டி அவற்றை களையவேண்டும்.

என்ற எண்ணம் அவரிடம் உள்ளது. அவருடைய பல்வேறு சிறுகதைகள் சமூக குறைபாடுகளை சுட்டிக்காட்டுவன. அரச அதிகாரிகளின் அசமந்த போக்கையும், மோசடிகளையும், மக்கள் எவ்வாறு அதிகாரிகளை வழிதவறச் செய்கின்றனர் என்பதையும், அன்பாக வளர்த்த பெற்றோரை பிள்ளைகள் வயதான காலத்தில் தவிக்க விடுவதையும், திருமணம் என்ற ஆடம்பரமான நிகழ்வுகள், சீதனம், அதற்காக கஸ்டப்படும் பெற்றோரையும் அவரது கதைகள் பிரதிபலித்தன. "என்ன தத்துவம் பேசினாலும் கலியாணமெண்டு செய்யப்போகும் போது வெளிநாட்டில் இருந்தாலும் எத்தனை லட்சம் காசு, வீடு வளவு, சாதி என்ன? என்ற எண்ணப்பாங்கு மாறவேயில்லை. அதைவிட சமூகத்தில் பலவிடயங்கள் புறநடையாக நடக்கின்றன. அவ்வாறு நடைபெறும் மோசமான பல சம்பவங்களை இலக்கியமாக்கலாமா?"[12] எதனை இலக்கியமாக படைக்க வேண்டும் என்ற ஆழமான சமூக நோக்கு சிதம்பர திருச்செந்திநாதனிடம் காணப்படுகிறது.

2.6 எதிர் நோக்கிய சவால்கள்

சிதம்பர திருச்செந்திநாதனின் சமூக செயற்பாடுகள் தொடர்பாக அவர் இடப்பெயர்வுக் காலத்தில் ஓர் அரச அதிகாரியாக இருந்து மக்களுக்கு தன்னாலான சேவைகளை புரிந்துள்ளார். யாரும் சவால்களை எதிர்கொள்ள அஞ்சகூடிய சூழலில் உயிர் அச்சத்தையும் பொருட்படுத்தாது மக்களுடன் மக்களாக தனது குடும்பத்தையும் அந்த யுத்த சூழலில் வைத்துக்கொண்டு பணியாற்றியுள்ளார். இடம் பெயர்ந்த அந்த கஸ்டமான சூழலிலும் பத்திரிகை ஆசிரியராக மக்களுக்கு கிடைக்க வேண்டிய அத்தியாவசியமான செய்திகளை கிடைக்கச் செய்ய முயன்றுள்ளார். தனக்கு உள்ள திறமையை குடத்தில் மூடிவைத்த விளக்கு போன்று இல்லாது, மற்றவர்களும் பயன் பெற உதவினார். பத்திரிகைத்துறையில் பத்திரிகைப் பயிற்சிநெறி ஒன்றை நடத்தியதுடன், பல செய்தியாளர்களை உருவாக்கியுள்ளார். யுத்த சூழலில் பத்திரிகைத்துறையில் பலருக்கு வேலை பெற்றுக்கொடுத்துள்ளார். வரையறுக்கப்பட்ட ஒரு பிரதேசத்தில் பத்திரிகையாளராக இருந்து கொண்டு மற்றவர்களையும் அத்துறையில் ஈடுபடுத்துவது என்பது ஒரு சாதனை. அவர் இடம் பெயர்ந்த கால வாழ்வை பற்றி சொல்கிறார். "நாங்கள் முதன் முதல் மாங்குளத்தில் ஓர் ஓட்டைக்குடிசை அதன் தாழ்வாரத்தில் தான் வாழ்ந்தோம். அதற்குள் ஆறேழு குடும்பங்கள். எங்களுக்கு மாத்திரம் முன் விறாந்தையில் படுக்கலாம். மழை பெய்தால் முழுக்க நனையும். ஒரு மேசை வைத்து அதன் கீழ்தான் சமையல், அதற்குள் தான் ஆறேழுமாதம் சீவித்தோம். இருக்கிற வளத்தை பயன்படுத்திக் கொண்டு வாழ வேண்டும். அதற்காக பெரிதாக தேடேலாது இது தான் யதார்த்தம். ஒரு யுத்த சூழலில் பத்திரிகை வெளியிடுவது என்பது அதிக சிக்லான விடயம். மை எழுத்துப் பிரச்சினை ஒருக்கா ஈழநாடு அலுவலகம் ஓரிடம் அச்சகம் ஓரிடம் பேப்பரே இல்லை. ஒரு வழியும்

இல்லை, என்ன கிடக்கு என்ற போது றோனியோப் பேப்பர் கிடக்கு என்றனர். றோனியோ பேப்பரிலை தான் அடிச்சனாங்கள், கோட்டுப் பேப்பரிலும் எல்லாம். புளோக் செய்யிறதுக்கு ஆனந்தனை பிடிச்சு மரக்கட்டை புளொக்தான் செய்தம்"[13] இவ்வாறு கடினமான சூழலில் ஈழநாடு பத்திரிகை மட்டுமன்றி காப்பரண், வெளிச்சம், போன்ற சஞ்சிகைகளும் வெளிவந்தன. அவற்றின் ஆசிரியராக இருப்பது எவ்வளவு கடினமான பணி. யுத்தகாலத்தில் பொருளாதார நெருக்கடிக்குள் வாழ்ந்து, மக்களுக்கான தீர்வுகளையும், புதிய கண்டுபிடிப்புக்களையும் உயிர்பாதுகாப்பையும், சுகாதார பாதுகாப்பையும் வெளிப்படுத்தி சமூக பயன் மிக்கதாக அவரது கட்டுரைகள் வெளிவந்தன. எனினும் யுத்த சூழலில் அழிவடைந்து இன்று அவை கைக்கு கிடையாது போய்விட்டன. அவ்வாறே வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளின் வெளிவந்த படைப்புக்களும் நூலுருப் பெறாது பல கைநழுவி விட்டன. அவை தொகுக்கப் பட்டிருப்பின் ஆசிரியரின் முழுமையான ஆளுமை பண்பை வெளிகாட்டும் பதிவுகளாக அமைந்திருக்கும்.

இடம் பெயரந்து இருந்த காலத்தில் மக்கள் மிக துன்பமான வாழ்க்கை வாழ்ந்தார்கள். அவ்வாறான துன்பம் மக்களோடு மக்களாக வாழ்ந்த எழுத்தாளரையும் தாக்கியது. "பாண் வாங்க 20 ரூபா இல்லாமல் கஷ்ரப்பட்டேன் மாங்குளத்தில் இருக்கும் போது நெருப்புக் காய்ச்சல் வந்தது. டொக்ரருக்கு கனகராயன்குளத்தில் கடன் சொல்லிப்போட்டு மருந்து வாங்கிக் கொண்டு வந்தது, மோட்டார் சைக்கிள் அடிபட்டு விழுந்தொழும்பி சக்தியெடுத்து வரும் வழியில் மாங்குளம் சந்தியில் எங்கட மருதனார்மடத்து வாணிவிலாஸ் கடையில் காசில்லை என்று சொல்லி அவரிடம் காசு பெற்று வேறுகடையில் சோடா வாங்கிக் குடித்து வீடு வந்து சேர்ந்ததை" தனது வாழ்க்கையில் எதிர்கொண்ட சவாலாக அவர் ஞாபகப்படுத்துகிறார். கஸ்டப்படாமல் எதனையும் சாதிக்க முடியாது, கஸ்டப்பட்டால்தான் எதனையும் சாதிக்கலாம் என்ற எண்ணத்துடன் அவர் சவால்களை எதிர்கொள்பவர்.

2.7 தொழில் பின்னணி

சிதம்பர திருச்செந்திநாதன் தொழில் பின்னணி அவரது ஆளுமை உருவாக்கத்தில் பங்களிப்பு செய்தது. க.பொ.த உயர்தரம் கற்று முடித்ததும் தற்காலிக அடிப்படையில் புள்ளிவிபர ஆய்வாளராக கமநல விவசாயத் திணைக்களத்தில் கடமையாற்றினார். 1980ம் ஆண்டு உடுவில் பிரதேச செயலகத்தில் எழுதுவினைஞராக நிரந்தர நியமனம் பெற்றார். யாழ் மாவட்ட செயலகத்திலும் எழுதுநராக கடமையாற்றினார். பிரதேச செயலகம் மக்களின் குறைகளையும் பிரச்சினைகளையும் அறிந்து அவர்களது அபிவிருத்திக்கு சேவையாற்றும் ஒரு முக்கிய மையம். அங்கு மக்களின் பல்வேறு

பிரச்சினைகளையும் அறிந்து கொள்ளமுடியும். அது மட்டுமன்றி மனிதாபிமான நோக்கமும் சிந்தனையும் உள்ள ஒரு பணியாளருக்கு மக்கள் சேவை உன்னதமான திருப்தியை வழங்கியிருக்கும். எப்பொழுது ஒரு மனிதன் நிரந்தரமான திருப்திகரமான தொழில் ஒன்றில் ஈடுபடுகிறானோ, அப்பொழுதே அவனது உண்மையான ஆளுமைத் தன்மை வெளிப்படும். எனவே சிதம்பர திருச்செந்திநாதன் தனது எழுதுவினைஞர் தொழிலில் பெற்றுக்கொண்ட திருப்திக்கு மேலால் அவரது பல கதைகளுக்கான கரு கிடைக்கும் மையமாகவும் அவரது தொழில் வாய்க்கப் பெற்றிருந்தது. அவருடைய பல நாவல்களிலும் சிறுகதைகளிலும் வரும் அலுவலகம் சார்ந்த விபரிப்புக்களும், பாத்திரங்களின் மனப்போக்கும் மிக யதார்த்தமாக அமைய அவரது தொழில் பின்னணி உதவியிருக்கும். அவரது சேவை செய்வதே ஆனந்தம் என்ற வானொலிச் சிறுகதை மூன்று தடவைகள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டதாக குறிப்பிகிறார். அவ்வளவு தூரம் அவரது தொழில் சார்ந்த அந்த படைப்பு யதார்த்த பூர்வமாக அமைந்திருந்தது.

ஒரு கிராமத்தில் உள்ள அரச உத்தியோகத்தர் எதிர்கொள்ள கூடிய பிரச்சினைகள் பல விதத்தில் அமையும் என்பதை மிக உண்மையான விதத்தில் யாரொடு நோகேன் என்ற சிறுகதை பிரதிபலிக்கின்றது. அலுவலகத்தில் தமது கருமங்களை இலகுவாக நிறைவேற்ற அரச ஊழியர்களை நாடும் கிராம மக்களின் அப்பாவித்தனமான தன்மையை மிக யாதார்த்தமாக அந்த கதை காட்டுகிறது. ஒரு புறம் நேரத்துக்கு அலுவலகம் செல்லும் அந்தரமும், இன்னொரு புறம் வீட்டுக்கு வரும் மனிதர்களை சமாளிப்பதும், அவர்கள் சார்பாக தாயார் முன்வைக்கும் கோரிக்கைகளையும் இந்த கதை சிறப்பாக காட்டுகிறது. இச்சிறுகதை ஒரு சுயசரிதையாகவே அமைந்துள்ளது.

இவர் இடம்பெயர்ந்து சென்று புதுக்குடிப்பு பிரதேச செயலகத்தில் பணியாற்றியுள்ளார். அக்காலத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்கள் புதுக்குடியிருப்பு, முள்ளியவளை பிரதேசங்களில் செறிவாக வாழ்ந்துள்ளனர். அந்த நெருக்கடி மிக்க சூழலில் பிரதேச செயலகங்கள் இரண்டு மூன்று மடங்கு வேலைகளால் திணறியிருக்கும். ஏனெனில், இடம்பெயர்ந்த மக்களுக்கான பல்வேறு நிவாரணப் பணிகளும் பிரதேச செயலகங்கள் ஊடாகவே இடம்பெறுவது வழக்கம். எனவே சேவை மனப்பாங்கோடும், மனிதாபிமான நோக்கோடும் அதிகாரிகள் செயற்பட்டனர். சிதம்பர திருச்செந்திநாதனும் அவ்வாறன சூழலிலேயே இடம் பெயர்ந்து சென்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இணைந்து கொண்டார்.

பின்னர் கிளிநொச்சி, பிரதேச செயலகத்தின் நிர்வாக அதிகாரியாக பதவியேற்றுக்கொண்டார். அக்காலத்தில் கடுமையான யுத்த நிலை, மக்களின் இடப்

பெயர்வு, அவலவாழ்வு இவை அனைத்துக்குள்ளும் நின்று பணியாற்றினார். இவற்றின் பின் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நிர்வாக அதிகாரியாக பணியாற்றினார். அவருடன் அவரது மனைவியும் ஒரு எழுதுவினைஞராக இணைந்து பணியாற்றினார். இப்பொழுது நிர்வாக அதிகாரியாக அவரும் பணியாற்றுகிறார். சிதம்பர திருச்செந்திநாதன் 2015ம் ஆண்டு ஓய்வு பெற்று தனது முழுமையான எழுத்துப் பணியை தொடங்கியுள்ளார். கணவன் மனைவி இரண்டு பேரும் வேலைக்கு செல்லும் குடும்பம் ஒன்றில் தனது வேலை நேரத்திற்கு மேலதிகமாக ஒரு எழுத்தாளராகவும், பத்திரிகை சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் பணியாற்றுவது என்பது எவ்வளவு கடினமான பணி. அவரது மனைவி அவருக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி உதவுகிறார். அவரின் எழுத்து முயற்சி தொடர்பாக கேட்ட போது, "நான் முழுநேர எழுத்தாளன் இல்லை. எனது அனுபவத்தில் கிடைத்தவற்றை எழுதுகிறேனே தவிர, நான் அனுபவத்தைத் தேடிச் சென்று பெற முடியாது. நாம் ஒரு புறம் வீட்டுச் சூழலையும், இன்னொரு புறம் தொழில் சூழலையும், சமூகத்தையும் எதிர் கொண்ட படியே எழுத வேண்டியுள்ளது. எழுத்து தனியே எமது தொழிலாக இல்லை. எமது நாட்டில் ஒருவர் எழுத்தை தொழிலாக கொண்டு வாழ முடியாது. எனவே நாம் இவற்றை எல்லாம் சமாளித்தபடியே எழுதவேண்டியுள்ளது என்கிறார். அவரது ஓய்வுக்காலத்தில் மேலும் படைப்புகள் வெளிவரும் என்பதை அறிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது.

அடிக்குறிப்பு

01. செல்லப்பா.சி.சு., தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது, காலச்சுவடு பதிப்பகம், நாகர் கோவில், டிசெம்பர் 2007 (இரண்டாம் பதிப்பு), ப.21
02. செல்லத்துரை.சு., இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், பதிவும் பகிர்வும், எழுகலை இலக்கிய பேரவை வெளியீடு, நோபிள் பிறின்ரேர்ஸ். யாழ்ப்பாணம், யூலை 2015, ப.40
03. சிதம்பர திருச்செந்திநாதன்.சி., என்னுடையதும் அம்மாவினுடையதும் சிறுகதை தொகுதி, சூர்யா அச்சகம், சென்னை, யூன், 1995, ப.21
04. பதிவும் பகிர்வும், ப.17
05. மேலது, ப.6
06. மேலது, ப.171
07. மேலது, பக்.174 - 175
08. மேலது, ப.132
09. மேலது, ப.8
10. மேலது, ப.3
11. மேலது, ப.23
12. மேலது, ப.19
13. மேலது, ப.13

இயல்

மூன்று

இயல் – மூன்று

எமது ஆய்வு இணுவை சிதம்பர திருச்செந்திநாதனின் சிறுகதைகள் தொடர்பானது என்பதால், சிறுகதைகள் பற்றி ஒரு தெளிவான நோக்கு அவசியமாகும். எனவே சிறுகதைகளின் தோற்றம், வளர்ச்சி என்பன கீழே ஆராயப்படுகிறது.

சிறுகதைகள் ஒரு பார்வை

3.1 சிறுகதைகளின் தோற்றம்

எட்கர் அல்லன்போ என்பவரே சிறுகதைகளை முதலில் எழுதினார். இவரே சிறுகதையின் தந்தை என கொள்ளப்படுகிறார். எட்கர் அல்லன் போவை தொடர்ந்து பிரெஞ்சு மாப்பஸான், அமெரிக்கரான ஓ.ஹென்றி ரைசியாவின் செக்காவ் ஆகியோர் சிறுகதைகளை எழுதி அதனை செழுமையடையச் செய்தனர். ஹென்றி ஜேம்ஸ், டி.எச்.லாரன்ஸ், போன்றவர்களும் அவர்களை தொடர்ந்து வில்லியம் ஃபிராங்க் ஓ கானர், எச்.இ.பேட்ஸ், வில்லியம் ஸரோயன், ஹெமிங்வே அல்பர்ட்டோ, மொரேவியா போன்றவர்கள் உருவ உள்ளடக்க சோதனைகளைச் செய்து சிறுகதை துறையை வீச்சாக்கினர்.[1]

3.2 சிறுகதைகளின் பண்புகள்

சிறுகதை என்பது தனித்துவமான இலக்கியப் பண்பைக் கொண்டது. குறித்த ஒரு விடயத்தை சில பாத்திரங்களுடனும், பொருத்தமான செறிவான கருத்து நிறைந்த சொற்களுடனும், அளவான அவசியமான பின்னணிகளுடனும் சொல்லி முடிப்பது. சிறுகதைகளில் கதைகள் ஒரு நறுக்கு துண்டு போன்று அமையும். அதற்குள் சுவையான ஒரு உள்ளடக்கம் அமைந்திருக்கும். அது மனித உணர்வுகளின் ஒன்றையோ அல்லது சிலதையோ வெளிப்படுத்தும். அது வாலுமில்லாத தலையுமில்லாத தூண்டமாக அமையும். சிறந்த தலைப்பும் அவ்வாறே முடிவும் அமைந்திருக்க வேண்டும்.

சிறுகதை என்பது அளவில் சிறிய கதை என்று அதன் பெயரை வைத்து பார்க்கக் கூடாது. அது நாவல்களுடன் ஒப்பிடும் போது அளவில் சிறியது தான், ஆனால் சிறுகதைகளுக்கு பல தனித்துவமான பண்புகள் உண்டு. முதலில் அவ்வாறான பண்புகள் எவை என பார்த்தால், சிறுகதை வாழ்க்கையின் எல்லாப் பிரச்சினைகளையும் அம்சங்களையும் ஆராயாது, ஒரு குறிப்பிட்ட மன உணர்வை பிரதிபலிக்கும். வாழ்க்கையில் உள்ள ஒரு விடயத்தை அது சுட்டுவதாக அமையும். பாத்திரங்களை வளர்த்துச் செல்லும் நிலை சிறுகதையில் இல்லை[2]. குறித்த விடயம் தொடர்பான பாத்திரங்களின் எண்ணங்கள்

செயல்களை தனியே எடுத்து தொகுத்து இறுதியில் அந்த விடயத்தில் பாத்திரம் பெற்ற வெற்றியை, அல்லது தோல்வியை, அல்லது உணர்வு மாற்றத்தை காட்டுவதுடன் கதை முடிவடையும்.

சிறுகதையை பொறுத்த வரை குறித்த உணர்வோட்டத்தை தரமுடியாத, அல்லது அதற்கு தேவையற்ற விடயங்கள் சிறுகதைகளில் இடம் பெறுவது தவிர்க்கப்பட வேண்டும். குறியீடுகளைக் கூட மிகச் சிறப்பாக கையாள வேண்டும்.[3] சிறந்த தலைப்பும் சிறப்பான முடிவும் சிறுகதைக்கு அவசியம். சமுதாய அமைப்பில் மனித வாழ்க்கையில் அடிக்கடி மாற்றங்கள் நிகழ்கின்றன. அந்த மாற்றங்கள் ஒவ்வொருவரையும் பாதிக்கின்றன. புதிய சூழலில் ஏற்படும் மன உணர்வுகள் சிறுகதையின் கருவாக அமைகின்றன. குறிப்பிட்ட ஒரு சம்பவத்தில் மனித மனம் படும் பாட்டை அல்லது ஒரு பாத்திரம் இயங்குகின்ற முறைமையை குறிப்பதுவே சிறுகதை.

சமுதாயத்தில் மனித உறவில் மாற்றங்கள் ஏற்படுவது இயற்கையானது. அம்மாற்றங்களால் படைப்பாளிகளின் உணர்வுகள் உந்தப்பட்டு, அம் மாற்றத்திற்கான காரணிகளையும் சூழலையும் மையமாக கொண்டு, குறிப்பிட்ட அந்த உணர்வு நிலையை வெளிப்படுத்த கரு ஒன்றை தெரிந்தெடுத்து, அந்த உணர்வுத்தளம் தளம்பலடையாமல், கதையை நகர்த்தி பொருத்தமான விதத்தில் கதையை நறுக்குத்துண்டு போன்று நிறைவாக்க வேண்டும். இவை சிறுகதைக்கான பண்புகளாகும்.

3.3 சிறுகதைகளின் தோற்றத்திற்கான காரணங்கள்

ஏகாதிபத்திய அரசுகள் குடியேற்ற வாதத்தை நிலை நிறுத்திய காலத்தில் அவர்களின் வீரப்பிரதாபங்கள், முயற்சிகள், சவால்கள், சாதனைகள், வெற்றிகளை வெளிப்படுத்த மேற்குலகில் நாவல்கள் தோன்றின. இவ்வாறு குடியேற்றவாதம் மூலம் பெற்றுக்கொண்ட பணத்தை முதலீடு செய்ய முற்பட்டபோது கைத்தொழில் புரட்சி ஏற்பட்டது. கைத்தொழிற்புரட்சி உற்பத்தி நடவடிக்கையை வேகப்படுத்தியது. இதனால் நாள்கணக்கில் நாவல்களை தூக்கி வைத்து வாசித்து சுவைப்பதற்கு நேரம் கிடைக்கவில்லை. கிடைக்கும் பத்து பன்னிரண்டு நிமிடங்களில் எதையாவது வாசிக்கலாம் என்று ஆசைப்படும் மனிதனின் தேவைகளை நிறைவேற்றவே சிறுகதைகள் தோன்றின.

பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவர ஆரம்பித்தமையும் சிறுகதை தோற்றத்திற்கு முக்கிய காரணி எனலாம். இக்காலத்திலேயே உலக அளவில் பத்திரிகைத்துறை வளர்ச்சியடைந்தது. பத்திரிகைகளின் சுவையை கூட்ட ஒரு பகுதியாக புனை கதைகளும் இடம்பெற்றன. சிறுகதைகளை பொறுத்தவரை ஒன்று இரண்டு பக்கங்களில்

ஒரே நாளிலேயே பிரசுரிக்க முடியும் என்பதால் தொடர்கதைகளிலும் பார்க்க, சிறுகதைகளுக்கு பத்திரிகைகளில் அதிக வரவேற்பு இருந்தது. சிறுகதைகளின் அளவும், அவற்றின் சுவையும், வாசகர்களின் வாசிப்பு நேரச்சிக்கனமும் பத்திரிகைகள் சிறுகதைகளை பிரசுரிக்க அதிகம் விரும்பியமைக்கான காரணங்களாகும்.

3.4 தமிழில் புனைகதையிலக்கியம்

புனைகதைகளான நாவல்களும் சிறுகதைகளும் மேலைத்தேய இலக்கிய வடிவங்கள். இவ்வடிவங்கள், 19ம், 20ம் நூற்றாண்டுகளில் தமிழில் தோற்றம்பெற்றன. இவ்வாறு இவை தமிழில் தோற்றம் பெற ஐரோப்பிய ஆட்சி காரணமாக அமைந்தது. ஐரோப்பியர்களில் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களிலே கிறிஸ்தவ சமய பிரச்சாரத்தை மையமாக கொண்டு, பேச்சு மொழியின் அடிப்படையில் எளிமையான உரைவடிவங்கள் தோன்ற ஆரம்பித்தன. இவ்வகையான உரைநடை வடிவங்களில் கதைகூற கிறிஸ்தவர்கள் முனைந்தனர். வீரமாமுனிவரின் வாமணன் கதை, பரமார்த்தகுருகதை என்பனவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அவ்வாறே அவர்கள் விவிலிய நூலையும் மொழிபெயர்த்தனர். அவை தவிர அச்சியந்திரங்களைப் பயன்படுத்த ஆரம்பித்தமையும், உரைநடை இலக்கியங்கள் தோன்றுவதற்கான காரணங்களாகும்.

1830களில் பிரித்தானியர் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மக்களுக்கு ஆங்கிலக்கல்வி வழங்க முடிவு செய்தனர். அதன் மூலம் மொழி பண்பாட்டு விடயங்களிலும், சுவை மனப்பாங்கிலும் ஆங்கிலேய சார்பாக இருப்பர் என கருதினர். இதன் மூலம் தமது ஆட்சியை நிலைநிறுத்தலாமென எண்ணினர். இந்தியாவிலும் இலங்கையிலும் ஆங்கிலக்கல்வி அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வாறு ஆங்கிலக்கல்வி அறிமுகம் செய்யப்பட்டதன் இன்னொரு நோக்கம் தமது நிர்வாக நடவடிக்கைகளுக்கு தேவையான ஊழியர்களை பெற்றுக் கொள்வதாகும். இவ்வாறு ஆங்கில கல்வி அறிமுகம் செய்யப்பட்டமை ஆங்கிலம், தமிழ் இரண்டும் கற்றவர்கள் தோற்றம் பெற வழியமைத்தது. தாண்டவராய முதலியார், ஆறுமுகநாவலர், ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை, வேதநாயகம்பிள்ளை, வீராச்சாமிச்செட்டியார், ராஜமையர், சரவணப்பிள்ளை, சூரியநாரணயசாஸ்திரிகள், சி.வை.தாமோதரம்பிள்ளை, கனகசபைபிள்ளை, சுந்தரம்பிள்ளை போன்றோர் உரை நடையில் எழுத ஆரம்பித்தனர். இதனால் உரைநடை இலக்கியங்கள் தோன்றின. இக்காலத்தில் உரைநடை பெருகவேண்டும் என்ற கருத்துடையோர் பலர் மக்களை வசீகரிக்க இராமாயணக் கதை, பாரதக்கதை, அரிச்சந்திரன் கதை, நளன் கதை, பஞ்சதந்திரக் கதைகள் முதலியவற்றை எழுதி வெளியிட்டனர். எனினும் இவை புராண இதிகாச கதைகளே தவிர, புனைகதைக்குரிய பண்புகளைக் கொண்டனவல்ல.

ஆங்கில மொழியை கற்றவர்கள் ஆங்கிலத்தில் காணப்படும் புனைகதை வடிவங்களான நாவல்கள் சிறுகதைகளை வாசித்தனர். அவ்வாறான புனைகதைகளை தாமும் தமிழில் ஆக்க முயன்றனர்.

3.5 தமிழக சிறுகதைகள்

தமிழகத்தில் முதலில் சிறுகதை எழுதியவராக வா.வே.சு.ஐயரை குறிப்பிடுவது வழக்கம். வா.வே.சு.ஐயரின் குளத்தங்கரை அரசமரம் என்ற சிறுகதையே தமிழில் உருவப் பிரக்ஞையுடன் எழுதப்பட்ட சிறுகதை என்ற பார்வை உண்டு. ஆனால் பாரதியாரே தமிழகத்தில் முதலில் சிறுகதை எழுதினார் என்று கூறமுடியும். 1905ல் சக்கரவர்த்தினி பத்திரிகையில் துளசிபாய் அல்லது ராஜபுத்திர கன்னிகைசரிதம் பாரதியரால் எழுதப்பட்டது. காக்காய் பார்லி மெண்ட், காற்று ஆகியனவும் வடிவ அடிப்படையில் சிறந்த சிறுகதைகளாக அமைந்துள்ளன. எனவே வா.வே.சு.ஐயர் 1915 இலேயே குளத்தங்கரை அரசமரத்தை எழுதினார். மாதவையாவின் குசிகர் குட்டிகதைகள் அவரின் முதல் சிறுகதைகளாகும். பாரதியாரின் கதைகள் சமூக விமர்சனத்திற்கானவையாக அமைய, வா.வே.சு. ஐயருடைய சிறுகதைகள் கலையுணர்வோடு எழுதப்பட்டவை. மாதவையாவின் கதைகள் சமூக சீர்கேடுகளை நயமாக சுட்டிக்காட்டி அமைந்தவை. எனவே கால அடிப்படைகளில் தமிழகத்தின் முதல் சிறுகதை எழுத்தாளர் பாரதியாராவார்.[4] மங்கையர்கரசியின் காதல் என்ற சிறுகதைத் தொகுதி பல சிறுகதைகளை கொண்டிருந்தாலும், அவை சரித்திர புராண கதைகளின் அடிப்படையில் புனையப்பட்டவை. அவற்றில் குளத்தங்கரை அரசமரம் தான் முன்மாதிரியான படைப்பு.

சிறுகதைகள் தோன்றிய ஆரம்பகாலத்தில் தமிழில் எழுதப்படிக்க தெரிந்தோர் குறைவாக இருந்தனர். உயர்ந்த மத்தியதர வர்க்கத்தை சேர்ந்தோரே எழுத வாசிக்க கூடியோரக இருந்தனர். அவர்கள் முதலில் ஆங்கிலத்தில் சிறுகதைகளை வாசித்திருந்தனர். அக்காலம் சுதந்திர போராட்டம் வேகமடைந்த காலம் என்பதால், இலக்கியத்தின் சமுதாயப்பணியை உணர்ந்தோரே எழுத்தாளர்களாகவும் வாசகர்களாகவும் அமைந்திருந்தனர்.[5]

தமிழகத்தில் வெளிவந்த ஆனந்தவிகடன், நவசக்தி, சுதந்திரச்சங்கு, கலைமகள் போன்ற பத்திரிகைகள் சிறுகதைகளை வெளியிட்டன. இப்பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளின் தாக்கம், ஈழத்தில் சிறுகதைகள் உருவ உள்ளடக்க செழுமையுடன் வெளிவரக் காரணமாக அமைந்தன.

3.6 ஈழத்துச் சிறுகதை

ஈழத்தின் கல்வி பாரம்பரியம் 19ம் நூற்றாண்டில், பாரம்பரிய தமிழ், சமயக் கல்வியுடன், ஆங்கில கல்வியையும் உள்வாங்கிக் கொண்டது. இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி வலுவாக தாபிக்கப்பட்டு இலங்கைபிரித்தானிய முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்பட்டது. இதன் விளைவாக ஆங்கிலக்கல்வி முக்கியத்துவம் பெற்றது. இந்த ஆங்கில கல்வியை முதலில் மிசனரி அமைப்புக்கள் வழங்கியதுடன், ஆங்கில கல்வி பெற்றவர்களுக்கு அரச வேலைவாய்ப்பும் கிடைக்கப்பெற்றது. இவற்றோடு தமிழில் கிறிஸ்தவமதம் தொடர்பான போதனைகளை நோக்காகக் கொண்டு பிரசுரங்களும் வெளியிடப்பட்டன. இதற்கு எதிராக சைவசமய பிரசுரங்களும் வெளிவந்தன. ஈழத்தில் சமயங்களிடையே நிலைகொண்ட இப் போட்டியின் வெளிப்பாடாய் முதலில் சமய பிரசுரங்களும், பின்னர் பத்திரிகைகளும் வெளிவர ஆரம்பித்தன.

மானிப்பாயில் அமெரிக்கன் மிசனரிமாரின் அச்சகம் ஒன்றும், யாழ்ப்பாணத்தில் நாவலரால் அச்சகம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டன. தமிழில் முதல் பத்திரிகையாக உதயதாரகை வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து இலங்கைநேசன், பாலியர்நேசன், இலங்கை பாதுகாவலி, புதினாலங்காரி, உதயபானு, விஞ்ஞான வர்த்தமானி, முஸ்லீம் நேசன், சைவாபிமானி, சன்மார்க்கபோதினி, சர்வசனநேசன், இலங்கை தினவர்த்தமானி, இந்துசாதனம், மித்திரன், மாணவன் எனப் பல பத்திரிகைகள் வெளிவந்தன.[6]

இவ்வாறான பத்திரிகைகளின் வருகை காரணமாக சமய இலக்கிய விடயங்களோடு முடங்கிக் கிடந்த தமிழ் மொழி அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், எனப் பல விடயங்களையும் எழுதக்கூடிய விதமாக மாற்றம் எய்தியது. இம்மாற்றம் ஒரு புறம் சமயவிவாதங்கள், அரசியல்விவாதங்கள், இலக்கிய சர்ச்சைகளுக்கு களமாக அமைந்த அதேவேளை, நவீன இலக்கியங்களுக்கான ஆரம்பத்திற்கும் கட்டியம் கூறியது. ஆங்கில அறிவும், பத்திரிகை பணியும், அச்சியந்திர வருகையும், வாசகர்தொகைப் பெருக்கமும், மொழி நடையின் நெகிழ்ச்சியும், புனை கதைகள் தோன்ற காரணமாக அமைந்தன. தமிழில் காவலப்பன்கதை, ஊசோன்பாலந்தை கதை என்ற மொழிபெயர்புகள் ஈழத்தில் வெளிவந்தன. அஸன்பேயின் சரித்திரம் (1885), மேகனாங்கி (1895) என்பனவும் வெளிவந்தன. இவ்வாறு நாவல்கள் போன்றே உதயதாரகையில் அவ்வப்போது சிறுகதைகளின் முன்னோடியாக மொழிபெயர்ப்பு கதைகள் அப்பத்திரிகை ஆசிரியரான ஆனோல்ட் சதாசிவம் பிள்ளையால் எழுதப்பட்டன. அவை பிற்காலத்தில் நன்னெறிகதாசங்கிரகம் என்ற பெயரால் தொகுக்கப்பட்டன. இவ்வாறு நன்னெறிகதாசங்கிரக கதைகள் உருவாக்கப்பட்டதன் நோக்கம்

மக்களுக்கு நன்னெறி புகட்டுவதே, அதாவது சன்மார்க்க போதனையே ஆகும். அதனால் அக்கதைகள் சிறுகதைகளுக்கு நெருக்கமான பண்பை கொண்டிருந்தபோதும் சிறுகதை உரிய உருவச் செழிப்பில் ஊறுபாடுடையதாக உள்ளன. பண்டிதர் சந்தியோகோ சந்திரவர்ணம் பிள்ளை என்பவர் எழுதிய கதாசிந்தாமணி ஏழு கதைகளுடன் வெளியானது. ஊர்க்கதைகள் என்ற தொகுதியை தம்பிமுத்துப்பிள்ளை வெளியிட்டார். ஐதுரூஸ் லெப்பைமரைக்கார் ஹைதர்சா சரித்திரம் என்ற தொகுதியை வெளியிட்டார்.[7] அளவில் சிறியனவாக இவை அமைந்திருந்தாலும் சிறுகதைக்குரிய உருவ பண்புகள் இவற்றில் எந்தளவிற்கு அமைந்தன எனக் கூறமுடியாது. ஆனால் சிறுகதைகள் தோற்றத்திற்கு பத்திரிகைகளின் வருகையும், ஆங்கிலக் கல்வியும் முக்கிய காரணிகளாகும். ஆனோல்ட் சதாசிவம்பிள்ளை தான் ஆங்கில மொழி கதைகளில் சிலவற்றை வேண்டிய உருவமாற்றம் செய்துள்ளதாக நன்னெறி கதாசங்கிரகபாயிரத்தில் குறிப்பிடுகிறார்.[8] எனவே அக்கால தமிழில் காணப்பட்ட கதை கூறல் மரபுக்கேற்ப நன்னெறிப் போதனையாக அவருடைய கதைகள் அமைந்தன.

சாதரண மனித வாழ்வை இலக்கியமாகப் படைக்கும் பண்பு 20ம் நூற்றாண்டிலேயே ஆரம்பித்தது. 1930ல் களில் இலங்கையர்கோன், சி.வைத்திலிங்கம், க.தி.சம்பந்தர் ஆகிய மூவரும் தமிழில் சிறுகதைகளை எழுத ஆரம்பித்த முன்னோடிகள் எனப்படுகின்றனர். ஆனந்தவிகடன், நவசக்தி, சுதந்திரச்சங்கு கலைமகள், மணிக்கொடி கிராம ஊழியன், சரஸ்வதி போன்ற சஞ்சிகைகள் ஏற்படுத்திய தாக்கத்தை இவர்களது சிறுகதைகளில் காணலாம். சி.வைத்திலிங்கம் நெடுவழி, மூன்றாம்பிறை, கங்காகீதம், பாற்கஞ்சி, பிச்சைக்காரர், அழியாப்பொருள், உள்ளப்பெருக்கு, இப்படிப் பலநாள் பைத்தியக்காரி, களனி கங்கைக்கரையில், என்காதலி, டிங்கிரி மொனிக்கா, நந்தகுமாரன் எனப் பல சிறுகதைகளை எழுதியுள்ளார்.

க.தி. சம்பந்தன் தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள் மூவருள் ஒருவர் அவர் தாராபாய், புத்தரின்கண்கள், துறவு, கூண்டுக்கிளி, மனிதவாழ்க்கை, தூமகேது, சலனம், அவள், சபலம், மகாலட்சுமி, கலாஷேத்திரம், இரண்டு ஊர்வலங்கள் போன்ற சிறுகதைகளை எழுதியுள்ளார்.

சிவஞானசுந்தரம் என்ற இயற்பெயர் உடைய இலங்கையர்கோன் பல சிறுகதைகளை எழுதியுள்ளார். இவரது சிறுகதைகள் வெள்ளிப்பாதசரம் என்ற சிறுகதையின் பெயரில் தொகுப்பாக வெளிவந்துள்ளன. மரியா மதலேனா என்ற இவரது சிறுகதை சரஸ்வதியில் வெளிவந்தது. யாழ்பாடி, மேனகை, சிகிரியா, தேவலோகக் காதல், திருமணப்பரிசு, கடற்கோட்டை, வெள்ளிப்பாதரசம், கிளிஞ்சல்கள், சக்கரவாகம், தந்தைமனம், மச்சாள், அனாதை, தாழை நிழலிலே போன்ற சிறுகதைகளை அவர் எழுதினார்.

பெரும்பாலும் இவர்களது சிறுகதைகள் புராண இதிகாச சம்பவங்கள், வரலாற்றுச் கதைகள் என்பவற்றை அடிப்படையாக கொண்டு பின்னப்பட்டவையே. அத்துடன் பாலுறவை முதன்மைப்படுத்தும் பண்பு சில கதைகளில் அதிகமாக உள்ளது. மரியாமதலேனா, மேனகை, அனுலா என்பன அத்தகைய பண்பு கொண்டன. ஓரளவு யதார்த்தமானவையாக இலங்கையர்கோனின் மச்சாள், வெள்ளிபாதசரம், முதற்சம்பளம், அனாதை தந்தை நிழலிலே, தந்தைமனம் என்பன அமைந்துள்ளன. மூன்றாம்பிறை, உள்ளப்பெருக்கு, புல்லுமலை போன்றன ஓரளவு யதார்த்தப்பாங்கானவை. இம் மூவரது முயற்சியாலும் இலங்கை சிறுகதைத்துறை தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது.[9]

3.7 முற்போக்கு அணி

சமூக ஏற்றத்தாழ்வுக்கு காரணமான சாதியத்துக்கு எதிராகவும், பெண்ணடிமைத்தனத்துக்கு எதிராகவும், சீதன வழக்கத்திற்கு எதிராகவும் இலக்கியக் குரல்கள் எழுந்தன. இக்கொள்கைகளுடன் எழுதியவர்கள் முற்போக்கு அணியினா் எனப்படுகின்றனா். சோ.நடராஜன், சோ.சிவபாதசுந்தரம், சுயா, சம்பந்தன், ஆனந்தன், பாணன், கோ.நடேசஐயா் ஆகியோர் ஈழகேசரி என்ற பத்திரிகையில் எழுதிய முற்போக்கு அணியினராவா். நவீன தமிழ் இலக்கியம் மீதான தெளிவான ஒரு பார்வையுடன், யதார்த்தமான பிரச்சினைகளை நோக்கி, எழுத்தாளர்களை தூண்டி, ஈழத்து வாழ்வை பின்புலமாகக் கொண்ட சிறுகதைகள் தோன்ற ஈழகேசரி களமமைத்தது. எனவே நவீன தமிழ் இலக்கியம் ஒரு முற்போக்கு தன்மை வாய்ந்ததாக வளர்ச்சியடைந்துள்ளது. எனினும் இலக்கியங்களில் இப்பண்புகள் பிரதிபலித்த அளவுக்கு மக்கள் வாழ்க்கை நடைமுறையில் மாற்றங்களை பெரிதாக ஏற்படுத்தவில்லை. மரபு நிலைப்பட்ட வாழ்வியல்முறை வெறும் புனைகதைகளின் வார்த்தைகளால் மாற்றப்பட கூடியதன்று, எனினும் இப்பண்புகள் தற்காலத்தில் ஒரு நெகிழ்வு தன்மையடைய இலக்கியங்கள் பங்களித்தன எனலாம். இடதுசாரிக் கொள்கைகளை பல எழுத்தாளர்கள் முன்வைத்து சிறுகதைகளை படைத்தனர். கே.டானியல், டொமினிக் ஜீவா, காவலூர் இராசதுரை, நீர்வைப் பொன்னையன், ஈழத்துசோமு அ.ந.கந்தசாமி, அகஸ்தியர், நந்தி, முருகையன், சில்லையூர் செல்வராசன், எஸ்.பொன்னுத்துரை, க.சா.அரியநாயகம், பத்மாசோமகாந்தன், புதுமைலோலன், நாவேந்தன், வ.அ.இராசரத்தினம் போன்றோர் முற்போக்கு அணியில் எழுத்தாளராக இருந்தனர். பேராசிரியர் கலாநிதி கா.சிவத்தம்பி, கலாநிதி க.கைலாசபதி போன்றோர் இம் மார்க்சிய முற்போக்குவாத எழுத்தாளர்களுக்கு பலம்வாய்ந்த விதத்தில் விமர்சனத் தடங்களை உருவாக்கினர்.[10] மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு,

அவற்றை தமது படைப்புகள் ஊடாக வெளிப்படுத்துவதும், இலங்கை தேசியத்தை கட்டியெழுப்பும் விதமாக தமிழ், சிங்கள உறவுநிலையை பேணுவதாகவும் முற்போக்குக் கொள்கை அமைந்தது. இலக்கியங்கள் முற்போக்கானதாக அமைந்த போதும் அரசியல் களத்தில் இடதுசாரித்துவ கொள்கைகள் இலங்கையில் வெற்றியளிக்கவில்லை. எழுதியவர்கள் கூட அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. அரசியல் களம் முற்போக்குவாத இலக்கிய அணிக்கு சாதகமாக வளர்ந்து கைகொடுத்திருக்குமாயின், பிற்காலத்தில் தமிழ் தேசிய வாதம் தோற்றம் பெறவோ, நீண்ட யுத்த சூழல் ஏற்பட்டிருக்கவோ முடியாது. இலங்கை தேசியம் கட்டியெழுப்பப்பட்டிருக்கும். இன ஒற்றுமை என்ற அடிப்படையிலான தேசியவாதம் துரதிஷ்டவசமாக தமிழ் இடதுசாரிகளிடம் மட்டுமே காணப்பட்டது. சிங்கள இடதுசாரிகளிடம் தேசிய வாதம் என்பது சிங்கள முதன்மைவாதத்தின் வெளிப்பாடாகவே இருந்தது.[11]

3.8 மரபுவாத அணி

1960களில் முற்போக்கு வாத அணிக்கு எதிராக மரபுவாதம் எழுச்சி பெற்றது. இலக்கிய மரபுகள் மீறப்படக்கூடாதவை, அவை பேணப்பட வேண்டும் என கலாநிதி க.சதாசிவம், சோ.இளமுருகனார், தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை, ச.சுப்பிரமணியன், பண்டிதர் வ.நடராஜன் முதலியோர் குரலெழுப்பினர். இதற்கெதிராக கா.சிவத்தம்பி, கலாநிதி க.கைலாசபதி போன்றோர் முற்போக்கு எழுத்தாளர்களுக்கு தலைமை தாங்கினார். நவீன இலக்கியங்கள் இழிசனர் வழக்காகும் என்ற வாதத்தை கலாநிதி ஆ.சதாசிவம் முன்வைத்ததுடன், சான்றோர் மரபை மீற முடியாது என்றார். இழிசனர் என்ற சொற்பிரயோகம் தலித்து இலக்கியவாதிகளைத் தூண்டுவதாக அமைந்தது. அவர்கள் மரபுநிலை வாதிகளுக்கு எதிரான கடும் போக்கை கொண்டிருந்தனர். இதனால் 1963ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 5ம், 6ம் திகதிகளில் யாழ் இந்துக் கல்லூரியில் நடந்த சாகித்திய மண்டல தமிழ்விழா பெரும் குழப்பங்களுடன் முடிவுற்றது. இந்த குழப்பங்களுக்காக முற்போக்குவாதிகளாக இருந்தோர் பின்னர் வருந்தினர்.[12]

இவ்வாறு முற்போக்கு வாதம் இலங்கையில் வளர்ச்சியடைந்தது. முற்போக்கு எழுத்தாளர்கள் நமது நாடு, நமது அரசியல், நமது பொருளாதாரம், என இலங்கைத் தேசிய வாதத்தை வளர்த்தனர். அவர்களது முக்கியகோசம் ஈழத்து தமிழிலக்கியம் தென்னிந்திய தமிழிலக்கியத்தின் பிரதியாக அமையாது, ஈழத்து மண்வாசனையைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

முற்போக்கு வாதத்திற்கு எதிராக இடதுசாரி எதிர்க்கருத்து வாதமொன்று தோற்றம் பெற்றது. கலைச்செல்வியில் சிற்பி சரவணபவன் இலக்கியச் சர்ச்சைகளுக்கு

முன்னுரிமை அளித்தார். இம் முற்போக்கு அணிக்கு எதிராக மு.தளையசிங்கம், எஸ்.பொன்னுத்துரை, சோ.நடராஜன், போன்றோர் கருத்துகளை முன்வைத்தனர். எஸ்.பொன்னுத்துரையின் வீ என்ற சிறுகதைத்தொகுப்பு தனித்துவமானது. சிறந்த சிறுகதை ஆசிரியரான இவர் சிறுகதைகளில் பாலியல் சார்ந்த விடயங்கள் அதிகமான தாக்கமாக காட்டப்படுவது அவதானிக்கத்தக்கது. மு.தளையசிங்கத்தின் கதைகளில் பாலுணர்வும் ஆன்மீக தேடலும் பிரதான இடம்பெறுகின்றன. முற்போக்கு எழுத்தாளர்களுக்கு எதிராக எஸ்.பொன்னுத்துரை நற்போக்கு இலக்கியம் குறித்து தெளிவான சிந்தனை ஒன்றை முன்வைத்தார். தான் இடதுசாரித்துவத்துக்கு எதிராவன் அல்ல, ஆனால் இடதுசாரித்துவம், இலக்கியப் படைப்புகள் இவ்வாறு தான் அமைய வேண்டும் என நிர்ப்பந்திக்கக்கூடாது என்பதே நற்போக்குவாதிகளின் கொள்கையாக அமைந்தது. எப்பொழுதும் சாதித்திமிரையும், வறுமையின் கொடுமையையும், அதிகார மமதையையுமே பேசுகின்ற பிரச்சார பண்டமாக இலக்கியம் இருக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. இதனால் மென்மையான உணர்வுகளும், கலாரசனையும், இலக்கியச் செழுமையும் மங்கிப் போகின்றன[13] என்பது நற்போக்கு வாதிகளின் வாதம். இவ்வாதம் இடதுசாரித்துவக்கெதிரானதல்ல, ஆனால் அவர்களின் இலக்கியங்கள் மீதான அழுத்தம் தவறானது என்பதே நற்போக்குவாதிகளின் கருத்து. ஆனால் இலங்கையின் இலக்கியத் துறையில் காணப்பட்ட மார்க்கஷிய முற்போக்குவாத சிந்தனைகள் அரசியல் அரங்கில் காணப்படாமை, அல்லது வெற்றி பெறாமை, அல்லது அரசியல் அரங்கில் மார்க்சிய கொள்கைகளின் போலியான தன்மை என்பன காரணமாக முற்போக்குவாதம் தோல்வியடைந்து, தமிழ்த்தேசியவாதம் வளர்ச்சியடைய வழிவகுத்தன.

3.9 தமிழ்த் தேசியவாதத் தோற்றத்தின் பின்னணி

நவீன தமிழ் இலக்கியங்களின் இந்த முற்போக்குத் தன்மை வாய்ந்த போக்கு இலங்கை அரசியல் சூழலில் காணப்படவில்லை. இலங்கையின் சனநாயக அரசியல் சூழலானது பிரித்தானியர்களால் வடிவமைக்கப்பட்டதாகும். ஜனநாயகத்தின் ஆரம்பமான கோல்புறூக் சீர்திருத்தம் தொடக்கம் சட்டவாக்க சபை, சட்ட நிருவாக சபைகளுக்கான பிரதிநிதிகள் இன அடிப்படையிலேயே நியமனம் செய்யப்பட்டனர். இந்த இன அடிப்படையிலான நியமன முறையே இனங்களுக்கிடையேயான முரண்பாடுகளுக்கான தோற்றுவாயாக அமைந்தது.

20ம் நூற்றாண்டின் முதல் பத்துகளிலேயே இனங்களுக்கிடையேயான விரிசல்கள் ஆரம்பித்தன. 1915ம் ஆண்டு முஸ்லீம்களின் நடவடிக்கைகள் தொடர்பான

அதிருப்தியின் விளைவாக, சிங்கள, முஸ்லீம் கலவரம் ஆரம்பித்தது. 1915ல் பிரித்தானிய அரசு கலவரத்துக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக 1919ல் இலங்கை தேசிய சங்கம் உருவானது. இதற்கு உழைத்த சேர்.பொன்.அருணாசலம் போன்றவர்கள் மாகாண ரீதியான பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டபோது, மேல் மாகாண தமிழர் பிரதிநிதித்துவம் தொடர்பான முரண்பாட்டால் இலங்கை தேசிய சங்கத்திலிருந்து விலகினர். 1926ல் சிங்கள தலைவர்கள் மீது தமிழ் தலைவர்கள் நம்பிக்கை இழந்து தமிழர் மகாசபையை தோற்றுவித்தனர். இனரீதியான பிரதிநிதித்துவம் மாகணரீதியாக மாற்றம் பெற்றபோதே இப்பிரிவு தோன்றியது.

1931 டொனமூர் சீர்திருத்தத்தை தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்தில் புறக்கணித்தனர். இதுவும் இனரீதியான பேதங்களையே வளர்த்து வந்தது. 1947ம் ஆண்டு சோல்பரி சீர்திருத்தம், இலங்கையின் சுதந்திரம் என்பன, தமிழ் மக்களிடையே அந்தச் சுதந்திரமும் அரசியல் யாப்பும் சிங்களவர்களுக்கானது என்ற பார்வையை ஏற்படுத்தியது. பெப்ரவரி 4 என்ற மு.தளையசிங்கத்தின் சிறுகதை தமிழர்களின் மனநிலையைப் பிரதிபலித்தது. ஆகவே இலங்கை சமூகத்தில் இன ரீதியான பார்வையும், பேதங்களும் இருபதாம் நூற்றாண்டு முழுமையும் விரவிக் கிடக்கின்றது.

1956ல் தனிச்சிங்கள சட்டம் இதனை மேலும் வலுப்படுத்தியது. தனிச்சிங்கள சட்டத்தை சிங்கள இடது சாரிகள் எதிர்த்தார்கள். எனினும் அது வெடித்த சுவரைப் பூசியது போன்றே அமைந்தது. ஏனெனில் பின் இடதுசாரிகளும் தம் கூட்டணி அரசை பாதுகாக்க தம் இடதுசாரித்துவ கொள்கைகளை உதறிக்கொண்டனர். 1972ம் ஆண்டு புதிய அரசியல் யாப்பினை வரைந்த கொல்வின் ஆர்.டி சில்வா சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாக்க சோல்பரி யாப்பில் காணப்பட்ட சிறுபான்மையினர் தொடர்பான 29வது சரத்தை நீக்கினார். ஒரு இடதுசாரி தலைவர் எவ்வாறு இன ரீதியான கொள்கையில் இருந்தார் என்பதை இது காட்டுகிறது. செனட்சபை நீக்கப்பட்டமையும், ஸ்ரீலங்கா என்ற பெயர்மாற்றமும் காரணமாக தமிழர்கள் தாம் இலங்கை தேசிய அரசியலில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டதாக உணர்ந்தார்கள். 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் நிலைமையை இன்னும் மோசமாக்கியது.

1977 ல் நடைபெற்ற தேர்தலில் எதிர்கட்சியாக தமிழர் விடுதலை கூட்டணி தெரிவுசெய்யப்பட்டது. அதேவேளை ஐக்கிய தேசிய கட்சி வெற்றியீட்டி அரசமைத்துக்

கொண்டது. எனினும் உண்மையில் இது அரசியல் ரீதியாக இனங்கள் பிளவுபட்டிருந்ததையே வெளிப்படுத்தியது. ஏனெனில் தமிழர் விடுதலை கூட்டணியினர் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டனர். இதனால் இலங்கையின் அரசியல் களம் சிங்கள தேசியவாதம், தமிழ் தேசிய வாதம் என்பவற்றுக்கிடையேயான ஆடுகளமாகவே அமைந்தது. எனவே முற்போக்குவாதிகளின் இன நல்லுறவுக்கான இலக்கிய கொள்கையை வலுவடைய வைக்கக் கூடிய அரசியல் கொள்கை அல்லது சூழல் இலங்கையில் காணப்படவில்லை.

3.10 தமிழ்த்தேசிய உணர்வுத் தோற்றம்

1956லேயே முற்போக்குவாதிகள் பலர் முற்போக்கு அணியிலிருந்து தமிழ்தேசியவாத அணிக்கு மாறி தமது எழுத்துக்களை படைக்க ஆரம்பித்தனர். புதுமைலோலன், நாவேந்தன் ஆகியோர் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலிருந்து விலகினர். தமிழ் தேசிய வாதத்தை முன்வைத்து 1956ல் அப்பே லங்கா என்ற சிறுகதையை புதுமைலோலன் எழுதினார். தொடர்ச்சியாக 20ம் நூற்றாண்டு முழுவதும் இன ரீதியான வேற்றுமைகள் விருத்தியடைந்திருந்தன. தமிழ் தேசிய வளர்ச்சியானது மென்முறைகளில் இருந்து வன்முறைப் பாதைக்கு திரும்பியது 1983ம் ஆண்டிலாகும். அதுவரை நடந்த தமிழ்தேசிய கொள்கை முன்னெடுப்புக்கள் மிதவாத அமைப்பான இலங்கை தமிழரசுக் கட்சியாலேயே முன்னெடுக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியின் பத்திரிகையாக அமைந்த சுதந்திரன் பத்திரிகை தமிழத் தேசியச் சிறுகதைகள் வெளிவர களமாய் அமைந்தது. 1956ல் இருந்து பல சிறுகதைகள் தமிழ்தேசிய வாதத்தை பிரதிபலித்தன.

3.11 தமிழ்த் தேசிய வாதத்தை வெளிப்படுத்திய சிறுகதைகள்

1956ல் புதுமைலோலன் அப்பேலங்கா, நாவேந்தனின் கள்ளத்தோணி, கரிகாலனின் கடமை முடிந்தது, இளம் பூரணனின் வண்டியில் வெறியாட்டம், உதயகுமாரின் காதலும் கடமையும், பசுத்தீவு இடையர்கோனின் அண்ணாவுக்கு அஞ்சலி, சு.முத்துலிங்கத்தின் புதுமணமும் புனர்வாழ்வும், ஏ.வி.பி. கோமஸின் காதலும் உரிமைப் போரும், புதுமை பிரியையின் மொழியுணர்ச்சி, ஈழத்துச்சோமுவின் யாழ் நாகவிகாரை, புத்தொளியின் வீரநங்கை, மு.தளையசிங்கத்தின் பெப்ரவரி 4, சிற்பியின் பிறந்தமண், கே.எஸ்.ஆனந்தனின் இதுதான் இனவெறி, செங்கைஆழியானின் நாட்டிற்கு இருவர், முத்து சிவஞானத்தின் உரிமைப்போர், நவத்தின் போர்முனை, அங்கையனின் கலங்காத கண்கள் என்பன ஆரம்பகால தமிழ்தேசிய உணர்வை பிரதிபலித்த சிறுகதைகள் ஆகும்.[14]

மொழியுரிமை பறிக்கப்படுவதையும் ,தமது தாய்நிலம் இழக்கப்படுவதையும் உணரத் தலைப்பட்ட போது அவர்களின் உணர்வுகள் வேகம் கண்டன. தமிழ் மக்களின்

அரசியல் அபிலாசைகள் என்ன என்பதையும் படம் பிடித்துக்காட்டுவதுடன், ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் சிறுகதைகள் தீவிரமாக வெளிவர ஆரம்பித்தன.

தமிழ் சிறுகதைகளை ஊறுத்தவரை 1950களின் பின் தமிழ் சிறுகதைகள் நடப்பியல் சிந்தனை போக்கு மட்டுமன்றி, அரசியல் களங்களையும் சிறுகதைகளாக்கத் தொடங்கின. நடப்பியலில் அரசியலும் ஒரு பகுதி என்பது உண்மையானது. அரசியலை விட்டு நடப்பியலை பேசமுடியாது. நடப்பியலில் சிறுகதை அமைய வேண்டுமாயின், மக்களின் பிரச்சினைகளை பேசவேண்டும். மக்களின் உணர்வுகளை பேசவேண்டும். நடப்பியல் புனைவுகள் நிகழ்கால மக்கள் பிரச்சினைகளை கலைநயத்துடன் பேசவேண்டும். அவ்வாறு பேசாத இலக்கியங்கள் போலித்தன்மை வாய்ந்தனவாக அமைந்தன. முற்போக்கு இலக்கிய கொள்கைகளை விட காத்திரமான தாக்கத்தை தமிழ்தேசியவாத சிறுகதைகள் தமிழர்களிடம் ஏற்படுத்தியது. இதற்கு இரண்டு விடயங்களை கூறலாம். தமிழர்களை பொறுத்தவரை இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், தமது வாழ்வியல், இருப்பு தொடர்பாக பாரிய சந்தேகங்களையும், எதிர்காலம் தொடர்பான அச்ச உணர்வையும் வெளிப்படுத்தின. எனவே அவ்வுணர்வுகள் சிறுகதைகளானபோது அவை சமூகத்தில் அதிக தாக்கம் ஏற்படுத்தின. 1956களைத் தொடர்ந்து இடம்பெற்று வந்த பல்வேறு அரசியல் நிகழ்வுகளும், தமிழரசுக்கட்சியின் செயற்பாடுகளும் பிற்காலத்தில் தமிழரசுக்கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகியன இணைந்து உருவான தமிழர் விடுதலை கூட்டணியின் கொள்கைகளும் தமிழ்தேசியத்தின் பால் எழுத்தாளர்களை கவர்ந்தது. 1983 யூலை கலவரமும் அதனைன தொடர்ந்து படிப்படியாக இலங்கையில் ஆரம்பித்த யுத்த சூழலின் பாதிப்புக்களும் தமிழ் எழுத்தாளர்கள் தமிழ்தேசிய கொள்கையுடன் தமது சிறுகதைகளை படைக்க வலுவான காரணிகளாயின.

3.12 1960 களில் தமிழ்ச் சிறுகதைகள்

இக்காலத்தில் செங்கையாழியான், செம்பியன் செல்வன், செ.யோகநாதன், செ.கதிர்காமநாதன், க.பரராஜசிங்கம், குந்தவை, சிதம்பரபத்தினி, அங்கையன், பெனடிக்றபாலன், கே.எஸ்.சிவகுமாரன், து.வைத்திலிங்கம், மு.கனகராசன் போன்ற பலா் சிறுகதைகளை எழுதினா். இக்காலத்தில் சிறந்த சிறுகதைகள், நாவல்களைப் படைத்த ஆசிரியா்களாக செம்பியன் செல்வன், செங்கையாழியன் போன்றோரை குறிப்பிடலாம்.

3.13 1970 களில் தமிழ்ச் சிறுகதைகள்

1970களில் தமிழ்ச் சிறுகதை உலகில் பிரவேசித்த எழுத்தாளர்களில் தெணியான் முக்கியமானவர். தெணியான் மாக்ஷிய தளத்தில் நின்று படைப்புக்களை ஆக்கியவர். தமிழ்தேசிய உணர்ச்சி வளர்ச்சியடைந்த காலமாகவும் இக்காலத்தைக் கருதலாம். காவலூர் ஜெகநாதன், சாந்தன், கே.ஆர்.டேவிட், கோகிலா மகேந்திரன், திக்குவல்லை கமால், குப்பிளான் ஐ.சண்முகம், யேசுராசா போன்றோர் இக்காலத்தில் சிறுகதைகளை வரைந்தவர்களாவர். பூங்கோதை, உடுவை எஸ்.தில்லை நடராஜன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் ஆகியோரும் சிறுகதைகளை படைத்தனர். 1970களில் சிறந்த சிறுகதைகளை படைத்தவர்களுள் ஒருவராக ஆப்டின் காணப்படுகிறார். பெண் விடுதலையை மையமாக கொண்டு சிறந்த சிறுகதைகளை படைத்தவராக கோகிலா மகேந்திரன் இக்காலத்தில் அறிமுகமாகிறார். ஆணாதிக்கத்துக்கு எதிரான ஒரு பெண்ணின் குரலாக அவரது குரல் ஒலித்தது.

அ.யேசுராசா வெட்கம், கெட்டவர்கள், பிரிவு, வரவேற்பு, கடவுள் உறங்குகிறார் போன்ற கதைகளைப் படைத்துள்ளார். உடுவை தில்லை நடராசனால் வாசக்கட்டி, சந்தியான் கோயில் சாப்பாடு, வசதிப்பணம் போன்ற பல சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன. தாமரைச்செல்வி பெண் எழுத்தாளர்களுள் முக்கியம் பெறுபவர். உருவ உள்ளடக்கத்துடன் சிறப்பான கதைகளை தாமரைச்செல்வியின் கதைகள் கொண்டிருக்கின்றன.

3.14 வட இலங்கைக்கு வெளியே சிறுகதைகள்

திக்குவெல்லை கமால் இக்காலத்தில் சிறுகதை எழுத ஆரம்பிக்கிறார். அவருடைய சிறுகதைகள் தென்னிலங்கைப் பேச்சு மொழியோடு கலந்து தனித்துவமான விதத்தில் அமைந்துள்ளது. வெறிதீர்ந்தது, மறுசாதி போன்ற பல சிறுகதைகளை படைத்துள்ளார். மண்டூர் அசோகா சிறந்த படைப்பாளி. கொன்னைப் பூக்கள், வேணிபுரத்து வெள்ளம் போன்ற சிறுகதைகள் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். என். எஸ்.எம்.ராமையா ஒரு கூடைக்கொழுந்து என்ற சிறுகதை மூலம் அறிமுகமாகி மலையக தமிழச்சிறுகதை வளர்ச்சிக்கு அடியெடுத்து வைத்தார். அவரைப் போன்றே தெளிவத்தை யோசெப் மலையக மக்கள் வாழ்வியல் பற்றி தெளிவான பார்வையோடு சிறுகதைளைப் படைத்துள்ளார். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் இக்காலத்தில் படைப்புக்கள் வெளிவர ஆரம்பித்தன. ஒரு முழுமையான வளர்ச்சியை காட்டிய காலம் இக்காலம் எனலாம். மு.பொன்னம்பலம், தையிட்டி அ.இராசதுரை, பூரணி, ஆரையம்பதி, அ.தங்கராஜா, பா.பாலேஸ்வரி, ஆகியோரும்

இக்காலத்தில் சிறுகதைகளை வரைந்தனர். பூரணி மலையகத்திலிருந்து எழுதிய பெண் எழுத்தாளர்களுள் ஒருவர். நீர்கொழும்பூர் முத்துலிங்கம், முல்லைமணி ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள். நயிமா சித்திக், நாகூர் எம்.ஹனி ஆகிய முஸ்லீம் படைப்பாளிகளும் இக்காலத்தில் பல சிறுகதைகள் படைத்துள்ளனர். இஸ்லாமிய குடும்ப வாழ்வை விளக்குவதுடன், இஸ்லாமிய நெறிகளுக்கு அழுத்தம் கொடுப்பதாகவும் இவர்களது சிறுகதைகள் அமைந்துள்ளன.[15] ஈழத்துச் சிறுகதை இலக்கியத்திற்கு பெருமை சேர்த்த எழுத்தாளர்களான சாரல்நாடான், மலரன்பன், மு.சிவலிங்கம், சி.பன்னீர்செல்வம் போன்றோரும் மலையக மக்களின் வாழ்வியல் கோலங்களை பிரதிபலித்தனர்.

3.15 1980 களில் தமிழ்ச் சிறுகதைகள்

இக்காலத்தில் வெளிவந்த படைப்புக்கள் பெரும்பாலும் தனித்துவமானவை. 1983 இனகலவரத்தின் பின்னர் தேசியம் பற்றியாரும் பேசமுடியவில்லை. 83களின் பின் விடுதலைப்போராட்டம் வலுவடைந்தது. தியாகங்கள், மரணங்கள், இடப்பெயர்வுகள், காணமால் போதல்கள் எனக் பல சம்பவங்களும் நடைபெற்றன. இந்தியப்படை, இலங்கைப்படைகளின் நடவடிக்கைகளும், ஷெல்தாக்குதல், விமானக் குண்டுவீச்சு, பதுங்குழி வாழ்க்கை, பொருளாதாரத்தடை என்பனவும் கதைகளின் கருக்களாயின. மிக இறுக்கமான சாதிய அமைப்பு முறை நெகிழ்வுக்குள்ளான தன்மையைக் கருக்களாக கொண்ட கதைகள் படைக்கப்பட்டன.

எஸ்.பொன்னுத்துரை, பத்மா சோமகாந்தன், நந்தி, சிதம்பர திருச்செந்திநாதன், செங்கையாழியான், செ.யோகநாதன், கோகிலா மகேந்திரன் போன்றோர் தொடர்ச்சியாக இக்காலகட்டத்தில் சிறுகதைகளை எழுதியுள்ளனர்.

3.16 புலம்பெயர் படைப்புக்கள்

இக்காலப்பகுதியில் புலம்பெயர் படைப்புக்கள் முக்கியமானவை. சு.முத்துலிங்கம் கனேடிய பிரசை எனினும் இங்கு தான் பெற்ற அனுபவங்களை தனது படைப்புகளாக வெளியிட்டுள்ளார். பெரும்பாலும் ஈழ சூழலின் அடிப்படையில் புலம்பெயர் இலக்கியங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. புலம்பெயர் படைப்புக்கள் அந்தந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகள், தாயகபூமி மீதான அக்கறை என்பவற்றை அடிப்படையாக கொண்டு படைக்கப்படுகின்றன.

3.17 தமிழ்ச் சிறுகதைகளின் வளர்ச்சிக்கு பத்திரிகைகளின் பங்களிப்பு

1841 வெளிவர ஆரம்பித்த உதயதாரகைப் பத்திரிகையில் ஆனோல் சதாசிவம்பிள்ளை எழுதிய (நன்னெறி கதாசங்கிரகம்) கதைகள் வெளிவந்தன.[16] ஈழத்தில் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கும், புனைகதை இலக்கியங்களின் ஆரம்ப வடிவங்களுக்கும், தமிழில் பத்திரிகைத்துறை தோற்றம் பெறுவதற்கும் முன்னோடியாக இப்பத்திரிகை அமைந்தது. முதலில் இலங்கையில் வெளிவந்த பத்திரிகை என்ற பெருமையும் இதற்கு உண்டு.

1930 யூன் 22 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரத் தொடங்கிய ஈழகேசரி படைப்புத் தளமும் சிறுகதைகள் கணிசமாக வெளிவரக் காரணமாயின. இப் பத்திரிகை ஈழத்துப் படைப்பாளிகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தது. ஈழகேசரி பொன்னையா என்பவரே இப்பத்திரிகையின் ஸதாபகர் ஆவார். 1922 சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலை, திருமகள் அச்சகம் என்பவற்றை ஆரம்பித்ததுடன், ஈழகேசரி என்ற பத்திரிகையையும் ஆரம்பித்தார். பல எழுத்தாளர்களை இப்பத்திரிகை உருவாக்கியதால் ஈழகேசரிப் பண்ணையில் உருவானோர் என இவர்கள் கூறப்படுகின்றனர். 1930 - 1958 வரை ஈழகேசரியில் 514 சிறுகதைகள் வெளிவந்திருக்கின்றன. இலங்கையர்கோன், க.தி.சம்பந்தன், சி.வைத்தியலிங்கம், வரதர் முதல் கே.டானியஸ், புதுமைலோலன், அ.செ.முருகானந்தன், இ.நடராஜா, எஸ்.பொன்னுத்துரை போன்றோர் வரை ஈழகேசரி பண்ணையில் முகிழ்த்தவர்கள் எனக் கொள்வதில் தவறில்லை.[17]

ஈழகேசரியை தொடர்ந்து இலங்கையில் மறுமலர்ச்சி என்ற சஞ்சிகை வெளிவந்தது. 1946 - 1948 வரை இரண்டு ஆண்டுகள் இச்சஞ்சிகை வெளிவந்தது. தமிழிலக்கிய மறுமலர்ச்சி சங்கம் என்ற எழுத்தாளர் இயக்கமே மறுமலர்ச்சி சஞ்சிகை வெளிவர காரணம் எனும் அவர்களுக்கிடையே ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களே மறுமலர்ச்சி என்ற சஞ்சிகை இரண்டாண்டுக்களை தாண்டி வெளிவர முடியாமற் போக காரணமாக அமைந்தது. எனினும் சிறுகதை துறைக்கு மறுமலர்ச்சி சஞ்சிகை தனது குறுகிய காலத்தில் பலமான பங்களிப்புக்களை வழங்கியது. அ.செ. முருகானந்தம் சம்பந்தன் இலங்கையர்கோன் வரதர், து. உருத்திரமூர்த்தி, சு.வே நாவற்குழியூர் நடராஜன், வல்லிக்கண்ணான், இராஜநாயகன் பெரியதம்பி கதிராயத் தேவி, சொக்கன் கார்த்திகேயன், பத்மா துரைராஜ, வே. சுப்பிரமணியம் தாழையடி சபாரத்தினம் கார்த்திகேயன், எஸ்ஸ்ரீநிவாசன் இ.பொன்னுத்துரை தியாகராஜன் எம்.எஸ். கமலா முதலானோர் சிறுகதைகளைப் படைத்துள்ளனர்.

1966ல் தினபதியின் வரவு புதிய எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தது. தினம் ஒரு சிறுகதை என்ற திட்டத்தை முன்வைத்தமை சிறுகதை வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது. "இன்சான்" பத்திரிகை ஊடாக புதிய தலைமுறை முஸ்லீம் எழுத்தாளர்கள் அறிமுகமாயினர்.

ஈழநாடு என்ற பத்திரிகை வரவு, பிரதேச பத்திரிகைகள் தோற்றம் பெற வழிவகுத்தது. எழுத்தாளர்கள் பலர் ஈழநாடு பத்திரிகையில் எழுத ஆரம்பித்தனர். 1947ல் வெளியான சுதந்திரன் ஈழத்து சிறுகதை தொடர்பான முக்கிய பத்திரிகையாகும். கோ.நடேசஐயர் இதன் ஆசிரியராக இருந்தார். சுதந்திரன் பத்திரிகை சிறுகதை பலவற்றை வெளியிட்டது. சுதந்திரன் பல்வேறு கொள்கையுடைய இலக்கிய வாதிகளுக்கும் களம் அமைத்தது. அ.ந.கந்தசாமி, என்.கே.ரகுநாதன், டொமினிக் ஜீவா, புதுமைலோலன் போன்றோரின் தரமான சிறுகதைகளை சுதந்திரன் பிரசுரித்தது. மாக்சிய முற்போக்கு அணியின் களமாக விளங்கிய சுதந்திரன் 1960க்கு பின் தமிழ்தேசிய இலக்கிய முயற்சிகளுக்கு முதன்மை கொடுக்கத் தொடங்கியது.

தினகரன் பத்திரிகையில் 1957-1963 ஆசிரியராக இருந்த கைலாசபதி மாக்சிய முற்போக்கு எழுத்தாளர்களின் படைப்புகளை வெளிப்படுத்தியதுடன், சிறுகதை விமர்சனத் தடத்தின் ஊடாக மாக்சிய முற்போக்கு வாதிகளுக்கு வெளிச்சமூட்டி அவர்களை வெளிப் படுத்தினார். இக்காலத்தில் இப்பணியை பேராசிரியர் கா.சிவத்தம்பி ஏ.ஜே.கனகரத்தினா போன்றோரும் மேற்கொண்டனர். ஆனால் தேசிய வாதம், இன ஒற்றுமை என்ற நம்பிக்கைத் தளங்களுடன் இயங்கிய முற்போக்கு வாதத்தின் நம்பிக்கைகள் கானல் நீராய் போனதற்கு, வேகமாக பரவிய பேரினவாத சிந்தனைகள் காரணமாயின. மாக்ஷியத்தையோ, முற்போக்கு வாதத்தையோ கண்டு கொள்ள முடியாதவாறு பேரினவாத சிந்தனைகளே வளர்ந்தன.

ஈழநாடு, சுதந்திரன், கலைச்செல்வி, மலர், கதம்பம், மாணிக்கம், தாமரை, சுபமங்களா, கணையாழி, கலைமகள் ஆகிய பத்திரிகைகள், சஞ்சிகைகள் இக்காலத்தில் வெளிவந்தன. இவை இவர்களது படைப்புக்களை பிரசுரித்தன.

மல்லிகை, சிரித்திரன், வீரகேசரி, போன்ற பத்திரிகைகள் முக்கிய இடம் வகித்தன. வீரகேசரி, தேசிய பத்திரிகையாக இலங்கை முழுவதும் விநியோகிக்கப்படுவது. யாழ்ப்பாணத்தில் உதயன், சஞ்சீவி, ஈழநாடு வாரமஞ்சரி, ஈழநாதம், போன்ற பத்திரிகைகளும் சஞ்சிகைகளும், சுடரொளி, செங்கதிர், ஜீவநதி, நவரசம், வளர்பிறை, வெளிச்சம், வைகறை, விளக்கு, ஆதாரம், காப்பரண், நாற்று, உள்ளம் போன்றனவும் அவை தாம் வெளிவந்த காலத்தில் சிறுகதைகளை பிரசுரித்துள்ளன.

1990களில் வெளிவந்த சரிநிகர் என்ற பத்திரிகையின் வரவு சிறுகதை வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கியது.[18] ஈழத்துச் சிறுகதைகள் என்பது வட இலங்கையை மட்டும் குறிப்பாக யாழ்ப்பாணத்தை மட்டும் மையமாக கொண்டது. அன்று அது கிழக்கிலங்கையையும் மலையகத்தையும் இணைத்துப் பார்க்க வேண்டியது. அவசியமானது. ஏனெனில் அவை தனித்துவமான பண்பாட்டுச் சூழலையும் பிரச்சினைகளையும் கொண்டவை. ஒவ்வொன்றும் தனித்துவம் மிக்கவை. மலையக வாழ்வியலும், கிழக்கிலங்கை வாழ்க்கையும், வடஇலங்கை வாழ்வியலிலிருந்து வேறுவேறானவை எனினும், அவற்றுக்கிடையே பொதுமையான பண்புகள் நிறைய உள்ளன.

ஈழத்துச் சிறுகதை வரலாறு இலங்கை முழுவதையும் மையமாக கொண்டது. எனினும் நாம் ஆய்வுக்கு எடுத்து கொண்ட எழுத்தாளர் வட இலங்கையை மையப்படுத்தியே தனது படைப்புக்களை வரைந்துள்ளார். எனவே இச்சிறுகதை வரலாறும் வட இலங்கையை மையமாக கொண்டே அமைந்துள்ளது. இதன் கருத்து மற்றைய பகுதிகளில் சிறுகதைகள் தோன்றவில்லை என்பதோ, மற்றைய பகுதிகளை புறக்கணிப்பதோ அல்ல. ஒரு படைப்பாளன் தனக்கு பரீட்சயமான சூழலிலேயே சிறப்பாக படைப்புகளை வெளியிடமுடியும். அதுவே இயற்கையானதாக அமையும். பலர் சிறுகதைகளை எழுதியிருந்தாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக அந்தந்த கால கட்டங்களை தெளிவுபடுத்துவதே எமது நோக்கம் என்பதால், எல்லா சிறுகதை ஆசிரியர்களும் இச்சிறுகதை வரலாற்றுக்குள் வரவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

அடிக்குறிப்பு

01. செல்லப்பா.சி.சு., தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது, காலச்சுவடு பதிப்பகம், நாகர் கோவில், டிசெம்பர் 2007 (இரண்டாம் பதிப்பு), ப.17
02. சிவத்தம்பி.கா., தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், இராமன்ஸ் பிறின்டிங் பிறஸ்,சென்னை, 1967. ப.15
03. மேலது, ப.17
04. குணராசா.க., ஈழத்து தமிழ்ச் சிறுகதை வரலாறு, வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம், ஆனந்த அச்சகம், 2001, ப.18
05. தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், ப.25
06. மகேசன்.சதா., நாவலர் நூற்றாண்டு மலர், மெய்கண்டான் அச்சகம், கொழும்பு, 1969, ப.73
07. குணராசா.க., ஈழத்து தமிழ்ச் சிறுகதை வரலாறு, பக்.18, 19
08. சதாசிவம்பிள்ளை ஆனோல்ட், நன்னெறி கதாசங்கிரகம், ஸ்திறோங் அஸ்பரி அச்சியந்திரசாலை, மானிப்பாய், 1883, பாயிரம் III
09. தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், ப.146
10. குணராசா.க., ஈழத்து தமிழ்ச் சிறுகதை வரலாறு, ப.72
11. சிவத்தம்பி.கா., ஈழத்து தமிழ் இலக்கியத்தடம் 1980 - 2000 பார்வையும் விமர்சனங் களும், மைக்றோ பிறின்ட் பிரைவேட் லிமிட்டெட், சென்னை, 2000, ப.46
12. குணராசா.க., ஈழத்து தமிழ்ச் சிறுகதை வரலாறு, ப.73
13. மேலது, ப.77
14. மேலது, ப.79
15. மௌனகுரு.சி., சித்திரலேகா.மௌ., நு∴மான்.எம்.ஏ., இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம், சித்திரா அச்சகம், யாழ்ப்பாணம், 1979, பக்.73, 74
16. யோகராசா.செ., நவீன இலக்கிய வளர்ச்சியும் ஈழத்துப் பத்திரிகைகளும், மல்லிகை, 39வது ஆண்டுமலர், ஜனவரி 2004, ப.106
17. குணராசா.க., ஈழத்து தமிழ்ச் சிறுகதை வரலாறு, ப.25
18. நவீன இலக்கிய வளர்ச்சியும் ஈழத்துப் பத்திரிகைகளும், ப.107

இயல்

நான்கு

இயல் – நான்கு

ஒரு தலைசிறந்த ஆக்க இலக்கியகர்த்தா தனது அறிவு, அனுபவம் என்பவற்றின் மூலம் சமூகம் தொடர்பாக கொண்ட தெளிவின் அடிப்படையிலேயே சமூகம் சார்ந்த பிரச்சினைகளை தன் படைப்புகளில் வெளிப்படுத்துகிறான். ஆக்க இலக்கியங்களின் கருத்துநிலை என்பது படைப்பாளனின் இலக்கியக் கோட்பாடு அடிப்படையிலேயே தோற்றம் பெறுகிறது. எனவே ஒரு படைப்பின் உருவிலும் பொருளிலும் ஏற்படும் அமைவு இலக்கியக் கோட்பாடாகிறது.[1] இது வாழ்க்கை பற்றிய ஒரு கண்ணோட்டமும் ஆகும். எனவே ஒரு படைப்பாளனை விளங்கிக்கொள்ளவோ அல்லது அவனின் கருத்துநிலையைக் கண்டறியவோ, இலக்கியக் கோட்பாட்டை அறியவோ ஒரு படைப்புத் தொடர்பான உள்ளடக்கம் ஆய்வு செய்யப்பட வேண்டும். எழுத்தாளனின் படைப்புக்களின் உள்ளடக்கத்தையும், கருத்து நிலையையும் அறிந்து கொள்ளும் பகுதியாக அவனது வாழ்க்கை பற்றிய கண்ணோட்டத்தை தெரிந்துகொள்ளவும் இலக்கிய உள்ளடக்கம் நோக்கப்பட வேண்டும்.

4.1 ஈழப்போரின் தாக்கங்கள்

ஈழப்போர் என்பது தமிழ்த்தேசிய உணர்வு வளர்ச்சி அடைந்து 1983ம் ஆண்டின் பின் போராக மாற்றம் பெற்றது. துப்பாக்கிச்சண்டை, ஷெல் தாக்குதல், விமானக் குண்டுவீச்சு போன்ற தாக்குதல்களாகவும், படை நகர்வுகளாகவும் இடம்பெற்றது. இந்த யுத்தத்தால் மக்கள் தங்கள் உயிர், உடமைகளை இழந்தமை, காணாமல் போனமை, இடம்பெயர்ந்தமை போன்ற விடயங்களை இப்பகுதியில் சிதம்பர திருச்செந்திநாதன் எவ்வாறு பதிவுசெய்துள்ளார் என்பது ஆராயப்படுகிறது.

4.1.1 ஈழப்போரின் காலகட்டங்கள்

ஈழப்போரின் காலகட்டங்களை ஆசிரியர் தன்னுடைய சிறுகதைகளில் பதிவு செய்துள்ளார். இதனை மிகச்சிறப்பாக அவர் படைத்த எதுவரை என்ற சிறுகதை விளக்குகிறது. எதுவரை என்ற சிறுகதையையும், அக்கதை எழுதப்பட்ட காலத்துக்கு பிற்பட்டவையை விளக்க வேறு சில சிறுகதைகளும் இங்கு ஆராயப்படுகின்றன.

1970 களின் நடுப்பகுதியில் அமைதிநிலை குழப்பமடைதல்

1970களின் நடுப்பகுதியில் 1974 தமிழாராய்ச்சி மாநாட்டு குழப்பத்தால் வடபகுதியின் அமைதிநிலை குழப்பமடைய ஆரம்பித்தது. ஒரு போர்ச்சூழல் ஒன்று படிப்படியாக

தோற்றம் பெற்றது. இவ்வாறான போர்ச்சூழலில் பல்வேறு காலகட்டங்களையும் தனது எதுவரை என்ற சிறுகதையில் சிதம்பர திருச்செந்திநாதன் பதிவுசெய்துள்ளார். எந்தவிதமான வேறுபாடுமின்றி மக்களோடு மக்களாக இருந்த படைகள் சந்தேக மிகுதியினால் தமது பாதுகாப்பை அதிகரிப்பதை எதுவரை என்ற சிறுகதையில் பகுதி I இல் காட்டுகிறார்.

> ஒற்றை பௌசரில் சுன்னாகம் ஸ்ரேசனடியில் தண்ணீர் அள்ளிக் காரைநகருக்குப் போகும் நேவிக்காரனின் தண்ணீர் பௌசரின் முன்னும் பின்னும் ஆயுதம் தாங்கிய நேவிக்காரர்கள் ஜீப்புகளில் பவனிவர முன்னிலைக்கு வந்துவிட்டகாலம்.[2]

1980 களில் மக்களை துரோகிகளாகப் பார்த்தல்

போரின் ஆரம்பத்தில் அரசுக்கெதிரான சுவரொட்டிகளை ஒட்டுதல், இரகசியமான இடங்களில் கூட்டங்கள் நடத்துதல், தமக்குத் தேவையான உணவு, பணம் என்பவற்றை மக்களிடம் சேகரித்தல் என்பன இடம்பெற்றன. இதற்காக மக்களைச் சந்தேகத்துடன் பார்ப்பது, கைது செய்வது, மக்கள் தாக்கப்படுவது என்பவற்றை எதுவரை என்ற சிறுகதை பகுதி II இல் பதிவு செய்கிறார்.

> ஒரு பெரிய இராணுவ அதிகாரி ஐயா சுவரொட்டியைக் கிழிக்கும் பெரும் பணியில் ஈடுபடுமாறு பணித்தார். அதனைப் பௌவியமாக ஏற்றுப் பணிய சில விநாடிகள்தான் தாமதமாகிவிட்டது. பெரும் அரசதுரோகம் இழைத்துவிட்டதாகக் கருதி அந்தப் பெருமைமிக்க படையினர் ரைபிள்களால் இடிக்க, கன்னம் கன்றி இரத்தம் பீறிட்டது.[3]

1987ன் பின் இந்தியப் படைகளின் நடவடிக்கை

இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு இந்தியப் படைகள் இலங்கைக்கு வந்தன. சமாதானப் படையாக வந்த படை சண்டையில் இறங்கியது. மக்கள் மிக அச்சத்துடன் வாழந்தனர். இளைஞர்கள் பிடிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டனர். இதனால் அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து தப்பி கொழும்பில் சென்று வாழ்ந்தனர். யாழ்ப்பாணம் இளைஞர்களுக்கு ஒரு அச்சம்மிக்க இடமாக மாறியதை ஒருபோதும் என்ற சிறுகதையில்

"யாழ்ப்பாணம் போய் அம்மாவை பார்க்க வேணும் மச்சான்."

"நீ தலையைக் குடுக்கிறன் என்று நிக்கிறாய். நான் அதைத் தடுக்கிறதே"[4]

இவ்வாறு பதிவு செய்கிறார்.

அவ்வாறே எதுவரை என்ற சிறுகதையில் இந்தியப் படையினரால் எச்சரிக்கப்பட்ட போது

எங்கள் சந்தி ஒன்றும் அவர்களின் குஜராத்திலோ,

உத்தரப் பிரதேசத்திலோ இல்லை.[5]

என்ற வரியை ஆழமான கனதியான உணர்வுடன் வெளிப்படுத்துகிறார்.

இவ்வாறான எண்ணம் ஒருபுறம் இருக்க, சிலரிடம் அதற்கு எதிரான மாற்றுக் கருத்தொன்றையும் ஒருபோதும் என்ற சிறுகதையில் சசி என்ற பாத்திரம் மூலம் பதிவுசெய்கிறார்.

அமைதிகாக்க வந்தவங்களை அதைச் செய்ய விடாமல் தடுத்தால்

திருப்பித்தானே அடிப்பாங்கள்.[6]

1995 இடப்பெயர்வு

எதுவரை என்ற சிறுகதையின் பகுதி 4 இடம்பெயர்வைப் பதிவு செய்கிறது. அதனை இடப்பெயர்வு என்ற தனியான பகுதியில் ஆராயலாம். இடம்பெயர்ந்தவர்களின் எண்ணத்தை ஆசிரியர்

எங்கள் தற்காலிகக் குடிசையில் திரும்பிப் படுக்க இடம் இல்லை.

ஆனால், நில், இரடா, ஐ.சி இருக்கா என்று கேட்க யாருமில்லை.[7]

என்று குறிப்பிடுகிறார்.

1996ன் பின் யாழ்ப்பாணம் மீண்டமை

மக்கள் தென்மராட்சியில் இருந்து யாழ்ப்பாணம் மீண்டனர். எனினும் கைதுகள், காணாமல் போதல் என்ற அவல வாழ்க்கைகள் தொடர்வதை அவரது மணல்வெளி அரங்கு என்ற சிறுகதைத் தொகுதியின் காணாமல் போனவன், ஒரு பாலத்தின் கதை, அட இவ்வளவுதானா, பயம்வேண்டாம், மணல்வெளி அரங்கு என்ற சிறுகதைகள் பதிவுசெய்கின்றன.

இவ்விடயங்கள் ஈழப்போர் வளர்ந்த காலகட்டங்களைப் பதிவுசெய்கின்றன. அதுமட்டுமன்றி, ஈழத்தில் வாழும் மக்களின் மனப்பதிவுகளையும் படம்பிடித்துக் காட்டுகிறது.

4.1.2 இடப்பெயர்வு

போர் நடவடிக்கைகள், ஷெல்வீச்சு, அச்சம் போன்ற காரணங்களால் மக்கள் தங்கள் சொந்த வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்து தற்காலிகக் கூடாரங்களிலும், உறவினர் வீடுகளிலும், கோயில்களிலும் வாழ்ந்தமை இடப்பெயர்வாகும். இடம்பெயர்வு வாழ்க்கையின் நெருக்கடிகள் இப்பகுதியில் ஆராயப்படுகிறது.

இடப்பெயர்வுக்கான காரணங்கள்

மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்தமைக்கான பிரதான காரணம் ஷெல் தாக்குதல்களே. படையின் முன்னேற முன்பு ஷெல் தாக்குதல்களில் ஈடுபடுவர். இதன்போது மக்கள் பதட்டமடைவதுடன், தமது அனுபவத்தின் மூலம் படையினர் முன்னேறப்போவதை அறிந்துகொண்டு இடம்பெயர ஆரம்பிப்பர். இதனை சிதம்பர திருச்செந்திநாதன் எனக்காக என்ற சிறுகதையில் இவ்வாறு பதிவுசெய்கிறார்.

> "என்ரை அம்மாளே என்ன நடந்தது, அதிர்வுகளுடன்
> காதில் விழுந்த ஷெல் நடப்பதைப் புரிய வைத்தது."[8]

இதனை வீட்டை மட்டுமா என்ற சிறுகதையில் மக்கள் ஷெல் தாக்குதல்களால் இடம்பெயர்வதை பின்வருமாறு காட்டுகிறார்.

> "சனங்கள் வாழ்விடங்களைத் துறந்து வந்து கொண்டிருந்தார்கள்.
> இரவிரவாக கேட்ட காதைப் பிளக்கும் சத்தங்கள் சொந்த மண்ணிலேயே
> அகதிகளாக்கியது."[9]

அச்ச உணர்வும் பதட்டமும்

வீட்டை மட்டுமா என்ற சிறுகதையில் குழந்தைகளும் பெற்றோரும் ஷெல் தாக்குதல், குண்டுச் சத்தங்களால் பதற்றமடைந்து இருப்பதைப் பின்வருமாறு காட்டுகிறார்.

"எங்கும் பதற்றம் நிலவிக் கொண்டிருந்தது. குண்டுச்சத்தங்களும், துப்பாக்கிச் சத்தங்களும் தாராளம். இடையிடையே ஷெல்லடிகள் வீட்டில் மனைவியும் பிள்ளைகளும் நிலைகுலைந்துபோய் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.[10]

இடம்பெயரத் தயக்கம்

பாடுபட்டுக் கட்டிய வீட்டையும் தங்களுக்கு வருமானம் தரும் வளவுகளையும் விட்டுவிட்டுப் போவது மக்களுக்குத் தயக்கத்தைக் கொடுத்திருந்தது. ஆனால் உயிர்கூட சிலவேளை போகவேண்டி வரும் என்ற அச்சமே மக்கள் இடம்பெயரக் காரணம் என்பதை வீட்டை மட்டுமா என்ற சிறுகதையில் காட்டுகிறார்.

சற்குணத்திற்கு வீட்டையும் வீட்டுப் பொருட்களையும் கைவிட்டுப் போவது சங்கடமாகவே இருந்தது. பாப்பம், பார்த்துச் செய்வம் என மனமில்லாமல் பதில் சொன்னான். திரும் என சத்தம் வெடித்துச் சிதறும் அதிர்வுகள் "ஐயோ" என மனைவி பிள்ளைகள் கூக்குரலிட்டனர்.[11]

இடம்பெயரும் மக்களின் தோற்றம்

இடப்பெயர்வின் போது தாம் வாழும் இடங்களை விட்டு வேறு இடங்களுக்குச் சென்று வாழ வேண்டியிருந்தது என்பதால் மக்கள் தமக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு செல்வார்கள். சைக்கிள்களிலோ, அல்லது தலைச் சுமையாகவோ பொருட்களைக் கொண்டு செல்லும் மக்களின் தோற்றத்தை எனக்காக சிறுகதையில்

"சொத்திழந்து நாடோடிக் கும்பலாக யாழ்ப்பாணத்தை விட்டு வன்னி புறப்பட்டோம். தலையில் உரைப்பைச்சுமை என்பதே தமிழரின் அடையாளம் என்கிற காலப்பகுதியில் உரப்பை, சூட்கேசு சகிதம் நாங்களும் வன்னி நகர்ந்தோம்.[12]

பயங்கரம் நிறைந்த பயணங்கள்

யாழ்ப்பாணத்திற்கு வெளியே செல்ல ஒரே ஒரு தரைமார்க்கப் பாதையாக ஆனையிறவே உள்ளது. யுத்தகாலத்தில் ஆனையிறவை விட பூநகரிப் பாதையே மக்கள் போக்குவரத்துக்குப் பயன்பட்டது. அந்தப் பாதையும் தடைப்பட கொம்படி எனப்படும் பரவைக்கடல் பகுதி யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப் பெருநிலப்பரப்பிற்குமான பாதையாக அமைந்தது. இந்தப் பாதை உப்பங்களி ஊடாகவே அமைந்தது. சேறும் சகதியுமான இந்தப்பாதை தடைப்பட யாழ்ப்பாணத்தை வன்னியிலிருந்து பிரிக்கும் கடல்நீரேரியின் ஊடாக தென்மராட்சி தனங்கிளப்பில் உள்ள கிளாலி என்ற இடத்திற்கும், பூநகரி நல்லூர் என்ற இடத்திற்குமிடையே படகுச்சேவை ஒன்று இடம்பெற்றது. இந்தப் படகு சேவையே யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் மற்றைய பிரதேசங்களுக்குச் செல்லக் கிடைத்த ஒரேயொரு பாதையாகும். இப்பயணம் படையினரின் ஊடறுப்புக்கு உட்படுவதால் பயங்கரமானதாக விளங்கியது. மக்கள் வன்னிக்கு இடம்பெயரும்போது படகுகள், இயந்திரப் படகுகளுடன் கயிறுகள் மூலம் இணைக்கப்பட்டு ஒரு புகைவண்டி போன்றே பயணம் நடைபெற்றது. இதனை எனக்காக என்ற சிறுகதையில்,

> "தாகமும் பசியும் இணைந்து இம்சைப்படுத்த கிளாலிக் கடற்
> கரையில் படகுகளுக்காய் காத்திருந்தோம் தொடுகைப் படகுகளில்
> ஏறத் தயாரானோம்"[13]

என ஆசிரியர் காட்டுகிறார்.

தொடர்ச்சியாக இடப்பெயர்வு

நிரந்தரமாக ஓர் இடத்தில் மக்களால் வாழமுடியவில்லை. போர் காரணமாக ஒவ்வொரு இடமாக இடம்பெயர வேண்டியேற்பட்டது. அதற்கு ஏற்ப மக்களும் வாழப் பழகினர். எனக்காக என்ற சிறுகதை இதனைத் தெளிவாகக் காட்டுகிறது. முதலாவது பகுதி யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்வதையும், அதன் இரண்டாவது பகுதி தென்மராட்சியைத் தாண்டி கிளாலிக்குச் செல்வதையும், மூன்றாவது பகுதி கிளிநொச்சிக்கு மக்கள் இடம்பெயர்வதையும், நான்காவது பகுதி மாங்குளத்தில் இடம்பெயர்ந்து வாழ்வதையும், ஐந்தாம் பகுதி புதுக்குடியிருப்பு சென்று வாழ்வதையும் காட்டுகிறது. ஒரு குடும்பம் யாழ்ப்பாணம், தென்மராட்சி, கிளிநொச்சி, மாங்குளம், புதுக்குடியிருப்பு என இடம்பெயர்வதைக் காட்டும் விதத்தில் ஆறு கதைக் கூறுகளைக் கொண்டுள்ளது.

எனக்காக சிறுகதையில்,

> துயரம் வெடித்துச் சிதறும் முகங்களுடன் வரும் சனங்களை விலத்திக்கொண்டு விரைய சத்தங்களின் அதிர்வுகள், மனத்தின் அதிர்வை விட மிக வேகமாக கேட்கத் தொடங்கின.[14]

யாழ்ப்பாணத்தினுள்ளே ஷெல்தாக்குதல்கள் காரணமாக இடம் பெயரும் மக்களைக் காட்டுகிறார்.

இரண்டாம் பகுதி

1995ம் ஆண்டு வலிகாமம் பகுதி மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளுக்கும், வன்னிப்பகுதிக்கும் இடம்பெயர்ந்ததை இப்பகுதி காட்டுகிறது.

> ஆயிரத்திதொளாயிரத்தி தொண்ணூற்றைந்தாம் ஆண்டு என்ன மாதிரி வந்துவிட்டது அக்டோபர் கடைசியில் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்தாயிற்று.[15]

மூன்றாம் பகுதி

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து கிளாலிக் கடல்நீரேரியூடாக வன்னிப் பகுதிக்குச் சென்று ஓரளவு வசதிகள் நிறைந்த கிளிநொச்சியில் மக்கள் வாழ்ந்தனர். இதனை இப்பகுதியில் பின்வருமாறு பதிவுசெய்கிறார்.

> கிளிநொச்சி திருவையாற்றில் குடியமர்ந்து இயற்கை வனப்புடன் சங்கமமாகி வாழத்தொடங்க சூழல் இயைந்து வந்தது.[16]

நான்காம் பகுதி

கிளிநொச்சிப் பகுதி மீதான சத்ஜெய நடவடிக்கை காரணமாக மக்கள் கிளிநொச்சியை விட்டு வன்னியின் பிற பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தமையை இப்பகுதியில் இவ்வாறு காட்டுகிறார்.

> நாங்கள் இப்பொழுது மாங்குளம் வந்து விட்டோம். திருவையாறில் தாராளமாகக் கிடைத்த தண்ணீர் மாங்குளத்தில் வரண்டது.

ஐந்தாம் பகுதி

மாங்குளம் மீதான ஷெல் தாக்குதல்கள், படைநடவடிக்கைகள் என்பனவற்றால் மாங்குளத்தை விட்டு புதுக்குடியிருப்புக்கு இடம்பெயர்ந்தமையை இப்பகுதி காட்டுகிறது.

> புதுக்குடியிருப்பு யாழ்ப்பாணம் போல சுவாத்தியம். யாரோ
> சொன்னது உண்மைமாதிரித்தான். எந்த வெக்கையாக இருந்தாலும்
> தென்னைமர நிழலில் அது பஞ்சாகிவிடும்.[17]

இவ்வாறு மக்கள் ஓரிடத்தில் நிலையாக வாழமுடியாமல் தமது பொருட்களையும் சுமந்துகொண்டு ஒருவருடத்திற்கு ஓரிடத்தில் நிலைத்து வாழமுடியாமல் அலைந்து திரிந்ததை எதுவரை என்ற சிறுகதையும், எனக்காக என்ற சிறுகதையும் தெளிவாகக் காட்டுகின்றன.

இடப்பெயர்வு மக்கள் மனங்களில் கடுமையாக உளநெருக்கீட்டை ஏற்படுத்தியிருந்தன. மக்கள் இடப்பெயர்வினாலும், அதன் விளைவுகளாலும், அல்லற்படுவதையும் காட்சிமாற்றம் என்கின்ற சிறுகதையில் பின்வருமாறு பதிவுசெய்கிறார்.

> முகம் சுழிக்கும் உறவினர்கள், அகதிமுகாம் வாழ்க்கை, அரச
> சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள், எத்தினை நாளைக்கு
> அவரினதும் குடும்பத்தினதும் வயிற்றுக்கு உதவி கிடைக்கும்
> பசியைப் போக்கும்.[18]

இடப்பெயர்வின் போது மக்கள் அவசரம் அவசரமாகவே சில பிரதேசங் களிலிருந்து இடம்பெயர்ந்தனர். இதனால் நிலையான சொத்துக்களை மட்டுமன்றி தமது நாளாந்த தேவைக்கான ஆடைகளைக் கூட எடுக்கமுடியாது அவசரத்தில் இடம்பெயர்ந்ததை காட்சிமாற்றம் என்ற சிறுகதையில் பின்வருமாறு பதிவுசெய்கிறார்.

> சண்டை தொடங்க அவர் கடை வைத்திருந்த இடத்தை
> விட்டு ஒரு துரும்பைக்கூட எடுக்க முடியாமல் போட்ட போட்ட
> உடுப்புக்களோடு இடம்பெயர்ந்து வந்தார்.[19]

4.1.3 அடிப்படை வசதிகள் அருகியமை

ஒரு மனிதனது அடிப்படைத் தேவைகளாக இன்று உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து என்பன ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இவ் அடிப்படைத் தேவைகள் பல போர்க்காலத்தில் வரையறுக்கப்பட்டன அல்லது கிடைக்காமல் போயின. இவற்றுள் மிக அத்தியாவசியமாக உணவு, உடை, உறையுள் என்பன இன்றி மக்கள் பல சந்தர்ப்பங்களில் அல்லற்பட்டனர்.

உணவுப் பிரச்சினை

உணவு ஒரு மனிதனது அடிப்படைத் தேவை. அந்த உணவு கிடைக்காமல் மக்கள் பல சந்தர்ப்பங்களில் அல்லற்பட்டனர். உணவுப்பிரச்சினை என்பது மிகவும் கடுமையானதாக அமைந்ததைப் பல இடங்களில் சிதம்பர திருச்செந்திநாதன் காட்டுகிறார்.

பசியும் தாகமும் இணைந்து இம்சைப்படுத்த கிளாலிக்
கடற்கரையில் படகுக்காய் காத்திருந்தோம்.[20]

ஆசிரியர் புதுமையான உவமைகளைக் கையாள்வார். அதில் உணவுப் பிரச்சினையைக் காட்டுகிறார். இடம்பெயர்ந்த மக்களுக்கு வருமான மார்க்கங்கள் அற்றுப் போனதால் நிவாரணங்களை வைத்தே அவர்கள் வாழ்க்கை நடத்த வேண்டியேற்பட்டது. அந்த நிவாரணங்களும் அடிக்கடி குறைக்கப்பட்டதை,

நிவாரண வெட்டால் ஒடுங்கிப்போன
பொதுசனம் போல[21] என உவமிக்கின்றார்.

இந்தியப்படை காலத்தில் தேர்தல் கடமையொன்றின் பொருட்டுச் சென்ற திகாரிகள் உணவின்பொருட்டு பட்ட அல்லலை அவர் அண்மையில் எழுதிய ரமணா என்ற சிறுகதையில்,

இரவு எல்லோருக்கும் சப்பாத்தியும் எண்ணெயும் தண்ணியும்
கலந்த ஒரு வகைக் கறியையும் சாப்பிடத் தந்தார்கள்
அந்த எண்ணெய் மணம் எங்களை கலங்கடித்தது, சாப்பிட
முடியவில்லை கதறி அழவேணும் போலை இருந்தது.

அவர்களுக்கு வழங்கப்பட்ட தேநீர்கூட சரியாக வழங்கப்படாமையை,

கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் தங்க வைக்கப்பட்ட
எங்களுக்கு இந்தியன் ஆமி ஒரு பிளேன்ரீ தந்தது
வாழ்க்கையில் ஒருபோதும் கிடைக்காத திரும்பவும்
குடிக்க விரும்பாத சுவை.[22]

உணவுப் பற்றாக்குறையால் மயக்கம் போட்டு விழும் ஒருவரை என்று மடியும் எங்கள் என்ற சிறுகதையில்,

ஒருவர் மயங்கித் தரையில் சரிந்தபோது, பாவம் எத்தனை
நாள் சாப்பிடாமல் இருந்ததோ மனிசன் இண்டைக்கும் விடிய
வெள்ளன வநதிட்டுது[23] எனப் பதிவுசெய்கிறார்.

இடப்பெயர்வு காரணமாகவும், தமது பிள்ளைகளை பிரிந்த துயரத்திலும், வறுமையாலும், உணவின் தரமின்மையாலும் மக்கள் உணவின்றி அல்லது உணவை வெறுத்துப் பசியில் தவிப்பதை ஆசிரியர் தனது கதைகளில் சித்திரிக்கிறார்.

தண்ணீர்ப் பிரச்சினை

உணவுப் பிரச்சினை போன்றே தண்ணீர்ப் பிரச்சினையும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மக்கள் கடும் வரட்சியான காலங்களில் வரண்ட பகுதிகளில் இடம்பெயர்ந்து போய் இருந்தபோது கடுமையான தண்ணீா பிரச்சினைக்கு முகம் கொடுத்ததை எனக்காக என்ற சிறுகதையில்,

முழுவாளியை கிணற்றுள் விட்டால் காவாளி தண்ணீா
மண்ணோடு வரும் அதனை அள்ளக்கூடு கியூவில்
ஆட்கள் நிற்பார்கள்.[24]

இவ்வாறு பதிவுசெய்கிறார்.

வீடு

ஒரு மனிதனுக்கு வீடு மிகவும் அவசியமானது. அமைதியான வாழ்க்கையும், நிம்மதியும் வீட்டிலேயே கிடைக்கிறது. உண்ணவும், உடுக்கவும், உறங்கவும், பாதுகாப்பாக வாழவும் வீடு இன்றியமையாதது. இடப்பெயர்வின் காரணமாக மக்கள் வீடு தொடர்பான மூன்று விதமான நெருக்கடிகளை எதிர்நோக்கினர்.

(1) தமது சொந்த வீடுகளை இழந்தமை.

(2) தற்காலிக வீடுகளின் வசதிக்குறைவுகள்.

(3) தம்முடைய வீடுகள் அழிக்கப்பட்டமை.

தமது சொந்த வீடுகளை இழந்தமை

போர்ப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் தாம் வாழ்ந்த வசதியான வீடுகளை விட்டுவிட்டு வந்தனர். கஷ்டப்பட்டு கட்டிய வீடுகளை மிகுந்த வருத்தத்துடன் விட்டுவிட்டு வந்தனர். வீடு தொடர்பான பிரச்சினை வீட்டை விட்டு வெளியேறிய பின்னர்தான் தெரியும். தங்கள் வீடுகளை விட்டு வெளியேறும் மக்களின் மனத்துயரை வீட்டை மட்டுமா என்ற சிறுகதையில் இரண்டு விதமாகக் காட்டுகிறார். ஒன்று வீட்டில் ஏற்படுத்தப்பட்டிருந்த வசதிகளையும், இரண்டாவது வீட்டை விட்டுப் பிரியும் வருத்தத்தையும் கீழ்வருமாறு காட்டுகிறார்.

வீட்டில் காணப்பட்ட வசதிகளை

மல்லிகைப் பந்தலும் பூந்தோட்டமும் கார் கராஜும்
காற்று வாங்க வசதியாக மொட்டை மாடியும்.[25]

என வீட்டில் காணப்பட்ட மேலதிகமான வசதிகளை காட்டின், அந்த வீட்டின் சிறப்பைக் காட்டுகிறார்.

பின்னர் இவ்வாறு வசதியாகக் கட்டிய வீட்டைப் பிரியமுடியாமல் பிரிவதைக் காட்டுகிறார்.

அப்பா எங்கையாவது போவோம் என்கிறார்கள் (மனைவி, பிள்ளைகள்)
ஆனாலும் சற்குணாத்திற்கு மனமில்லை.
வீட்டையும், வீட்டில் உள்ள சாமான்களையும்
கைவிட்டுப் போவதென்பது சங்கடமாக இருந்தது
வீட்டை மட்டுமல்ல.[26]

இன்று நாளை என்ற சிறுகதையில் வீட்டையும் வளவையும் பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காக இழக்க வேண்டியிருக்கும் என வருந்தும் ஒரு குடும்பத்தின்

நிலையை ஆசிரியர் காட்டுகிறார்.

இன்று -

வீடு கட்டி முடிந்தது நாங்கள் குடியேறியபோது கடன் இருந்தாலும் சொந்தமாக வீடும் வளவும் சேர்ந்ததே என்ற மனநிறைவாவது கிடைத்தது.[27]

நாளை -

மோட்டுத்தனதாய் எயர்போட்டுக்குக் கிட்ட காணி வாங்கி வீடு கட்டினமே வளவை அளக்கத்தான் போகினம் எயர்போட்டை பெருப்பிக்கிறம் எண்டு சொல்லி முடிக்காமல், அம்மா அழத் தொடங்கினாள். என் கண்களும் கதைத்தன, நான் அழவில்லை நாளை எங்கள் வளவில்கூட ஒரு யுத்த விமானம் நிற்கும்.[28]

வீட்டை மட்டுமா, இன்று நாளை என்ற சிறுகதைகள் தங்கள் சொந்த வீட்டையும் வளவையும் பறிகொடுக்கப்போகும் ஏக்கத்தின் உணர்வுகளை நெஞ்சை உருக்கும் வண்ணம் பதிவுசெய்கின்றன.

தற்காலிக இருப்பிடங்களில் வசதியின்மை அல்லது திருப்தியின்மை

தற்காலிக இருப்பிடம் என்பது தங்கள் சொந்த வீடுகளை விட்டு வந்த மக்கள் குடியிருந்த ஏனையோரின் வீடுகள் அல்லது கூடாரங்கள், குடிசைகள் ஆகும். அவை இடம்பெயர்ந்தோருக்கு திருப்தியாகவோ, நிம்மதியாகவோ, வசதியாகவோ இல்லாமையை ஆசிரியர் என்றும் தங்கள் நினைவில் வாழும் என்ற சிறுகதையில்,

இடம்பெயர்ந்து வீடும் வாசலும் இல்லாமல் இரவல்
வீட்டில் இருந்து கஷ்ரப்படுறம்[29]

என்றவாறு காட்டுகிறார்.

இது இடம்பெயர்ந்த யாரோ ஒருவருடைய வீட்டில் வசதிகள் இருந்தும் சொந்தவீடு இல்லையே என்ற கவலையைக் காட்டுகிறது.

எதுவரை என்ற சிறுகதையில் ஆசிரியர் வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து சென்று வாழ்ந்த மக்களின் தற்காலிக இருப்பிடம் ஒன்றைப் பின்வருமாறு காட்டுகிறார்.

அடர்த்தியான மரத்தின் கீழ் அடுப்பு புகைத்துக் கொண்டிருந்தது.
மணல் பூக்கள் தாங்கிய உரப்பைகள் தரையாகி சிரட்டையில்
ஏறி நின்ற கத்தியில் மரக்கறி வெட்டல் நடக்கிறது.

ஒரு தற்காலிக தங்குமிடத்தின் செயற்பாட்டை விளக்கும் இவ்வரிகள் மூலம் அந்த இருப்பிடத்தை சிறப்பாக வெளிப்படுத்துகிறார். அக்கதையில் வசதிகளை இழந்து வந்த வருத்தத்தைக் காட்டுகிறார்.

தலையை முட்டும் கூரையைக் கொண்ட எங்கள்
தற்காலிக குடியிருப்பில் திரும்பிப்படுக்க இடமில்லை.[30]

காட்சி மாற்றம் என்ற சிறுகதையில் இடம்பெயர்ந்த மக்களின் குடியிருப்பு ஒன்றைப் பின்வருமாறு விபரிக்கிறார்.

சனங்கள் கும்பல் கும்பலாக திரண்டிருந்தன
சின்னப்பிள்ளைகள் சட்டையில்லாத வெற்றுடம்புடன்
அவர்களது பின்னணியில் அளெவெடுத்துக் கட்டியது
போல ஓலைக் குடிசைகள்.
"இதென்னடா மச்சான்"
இது இடம்பெயர்ந்த மக்கள் ஆட்கள் இருக்கிற குடியிருப்பு.[31]

திருமண வீடியோ ஒன்றை லண்டனில் பார்த்துக் கொண்டிருக்கும்போது பின்னணியில் வந்த காட்சி தொடர்பான உரையாடலாக இது விளக்கப்படுகிறது.

திரும்பிச் சென்றபோது வீடுகளின் நிலை கண்டு வருந்துதல்

பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் இடம்பெயர்ந்து சென்று பின்னர் தங்கள் வீடுகளுக்கு திரும்பிப் போனார்கள். அவ்வாறு செல்லும்போது மிகுந்த எதிர்பார்ப்புடன் செல்வார்கள். ஆனால் அவர்களுக்குப் பல விடயங்கள் ஏமாற்றம் மிக்கதாகவே அமைந்திருந்தன. அதனைத் தனது சமகாலம் என்ற சிறுகதையில் சிதம்பர திருச்செந்திநாதன் எடுத்துக் காட்டுகிறார்.

அனுமதி பெற்று குடும்பம் குடும்பமாக வீட்டைப்
பார்க்கப் போனோம்.

வீடுகளின் அழிவுகளைக் கண்டு வருந்துவதை,

வெறுமையான வீடுகளின் கூரைகள் சரிந்துபோய்
இருந்தன. வெளி மதில்களின் அத்திவாரங்கள்
தெரிந்தன. வாய் பிளந்திருந்த எங்கள் வளவின்

கேற்றும் நிலையோடு பெயர்ந்திருந்த வெளி
விறாந்தைக் கதவும் கண்ணீரைப் பெருகச்செய்தன.[32]

திருட்டுப் போனமை

மக்கள் இடம்பெயர்ந்து சென்றபின் அவர்களின் வீடுகளுக்குள் புகும் திருடர்கள் அங்கு காணப்படும் பெறுமதியான பொருட்களை மட்டுமன்றி, கதவு யன்னல்களைக் கூட திருடிக்கொண்டு போன சம்பவங்கள் நடந்துள்ளன. இதனை தனது சமகாலம் என்ற கதையில்,

எல்லா அறைகளிலும் எல்லாப் பொருட்களும் தலை
கீழாக்கப்பட்டு இருந்தன. நல்லவை யாவும் தெரிவு
செய்யப்பட்டு யாரோ நல்லவர்கள் கொண்டு போன
பின்னர்[33]

இவ்வாறே யுத்தத்தால் அழிவடைந்து போன வீடு ஒன்றைப் பார்த்து அதன் உரிமையாளர் வருந்துவதை வீட்டை மட்டுமல்ல என்ற சிறுகதையில்,

அழகான முன்புறம் விசாலமான கண்ணாடி
ஜன்னல், தேக்கம் கதவுகள் காற்று வாங்கும்
மொட்டை மாடி பின் விறாந்தை கோல் சகலதும்
இருந்த இடம் தெரியாமல் இருந்தன.[34]

என்று விபரிக்கிறார்.

ஒருவருடைய வீடு மட்டும் அல்ல, ஒருவர் மட்டுமன்றி பலரின் நிலை இவ்வாறு இருந்தது என்பதையும் யாரும் யாருக்கும் ஆறுதல் கூறமுடியோதாராக வீடுகளை இழந்த துயரத்தை வீட்டை மட்டுமல்ல என்ற இந்த சிறுகதையில்,

புல்டோசரின் வரித்தடங்கள்தான் தெரிந்தன. எது
வளவின் எல்லையென்பது கூடத் தெரியவில்லை.
பக்கத்து வீட்டுக்காரர்கள், பின்வீட்டுக்காரர்கள்
எல்லோருமே தங்கள் தங்கள் பகுதியில் நின்று
தங்களின் இடிபாட்டுக் குவியல்களைப் பார்த்து
வேதனைப்பட்டுக் கொண்டிருந்தனர்.[35] என்று காட்டுகிறார்.

இயற்கைக் காரணிகளின் அழிவு

வீடுகளில் பெரும்பாலும் போர் நடந்த பகுதிகளில் அழிவடைந்திருந்தன. வீடகள் தப்பியிருந்தாலும் கூரைகள் அழிவு, வீட்டின் உள்ளிருந்து பொருட்கள் மழையினால் நனைந்து உருக்குலைந்து போனமையை ஆசிரியர் சமகாலம் என்ற சிறுகதையில்,

> அலுமாரிகளில் இருந்த போட்டோ அல்பங்கள் மழைநீரில் மூழ்கி உருவங்கள் அழிந்து உருக்குலைந்து போய் ஒரு வரலாற்றினை நாசமாக்கிவிட்டன. அலுவலக அறையில் அப்பா சேர்த்து வைத்திருந்த அத்தனை புத்தகங்களும் தண்ணீர் குடித்து வயிறு பொருமி கருமையும் பச்சையும் சேர்ந்து பூஞ்சணம் பிடித்து சாக்கடையாய் நாற்றம் அடித்துக்கொண்டிருந்தது.[36]

யாழ்ப்பாணத்தில் வாழும் ஒருவனுக்கு தனது வீடு என்பது எவ்வளவு தூரம் அவனது உயிரோடும் உணர்வுகளோடும் ஒன்றிப்போன விடயம் என்பதை அவரது வீட்டை மட்டுமா, சமகாலம் என்ற சிறுகதைகள் சிறப்பாகக் காட்டுகின்றன. தமது வீடுகளை இழந்து அல்லற்படும் மக்களின் துயரங்களின் ஆழமான உணர்வை அவரது இக்கதைகள் பிரதிபலிக்கின்றன.

4.1.4 உயிரிழப்புக்கள்

கைதுகள், காணாமல் போகும் சம்பவங்கள் போர்க்காலத்தில் மக்கள் சந்தித்த மிக மோசமான விளைவுகளாகும். துன்பம் மிக்க சம்பவங்களாக உயிரிழப்புக்கள், கைதுகள், காணாமல் போதல்கள் இடம்பெற்றன. இதனால் போர்க்காலம் துயரம் மிக்கதாக அமைந்தது. போர் முடிவுற்ற பல ஆண்டுகளின் பின் கூட கைது செய்யப்பட்டவர்கள், காணாமல் போனவர்களுக்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை.

உயிரிழப்புக்கள்

போரின் போது ஷெல்தாக்குதல், விமானக் குண்டு வீச்சுக்கள், துப்பாக்கிச் சூடு போன்ற சம்பவங்களால் பொதுமக்கள் பலர் உயிரிழந்தனர். எனினும், அவற்றை ஆசிரியர் தம் கதைகள் எதிலும் நேரடியாகப் பதிவுசெய்யவில்லை. எனினும் அவற்றைத் தனது கதைகளில் மக்களின் கவலைகளாகப் பதிவுசெய்துள்ளார்.

> எத்தனை நினைவஞ்சலிகள் அத்தனையும் வளரும் பயிர்கள்தானே
> யோசித்துப் பார்க்க கண்கள் கலங்குகின்றன.[37]

காலம் கழிப்பமடி என்ற சிறுகதையில் உயிரிழப்புக்கள் பற்றி வெளிப் படுத்தியுள்ளார். அவ்வாறே குறைவிருத்தி நாடு என்ற கதையிலும் உயிரிழப்பு பற்றிய ஒரு குறிப்பு பின்வருமாறு வருகிறது.

அதிகாலை சந்தைக்கு வந்த சிலபேரின் உயிர்கள்
ஊர்வலம் போனவர்களால் பறிக்கப்பட்டது.[38]

யுத்தத்தில் உயிரிழப்புக்கள் அதிகமாக நிகழ்ந்தாலும் மக்கள் அச்சமான சூழலில் வாழும்போது படைப்புக்களில் அவற்றை அதிகம் காட்டுவது மக்களை அச்சமூட்டுவதாக அமையும் என்பதால், தனது படைப்புக்களில் அவர் உயிரிழப்பு செய்திகளின் வீச்சைக் குறைத்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. இது உணர்வுநிலையில் நின்று எழுதாமல் அறிவுநிலையில் நின்று ஆசிரியர் படைப்புக்களை ஆக்கியுள்ளார் என்பதை உணர்த்துகிறது.

தாக்கப்படல்

பொதுமக்கள் பல்வேறு காலங்களில் கடுமையாக தாக்கப்பட்டனர். கைகளாலும், தடிகளாலும், தமது ஆயுதங்களாலும் மிக மோசமான விதத்தில் தாக்கப்பட்டனர். இதனை தனது எதுவரை என்ற சிறுகதையில் சிதம்பர திருச்செந்திநாதன் பின்வருமாறு பதிவுசெய்கிறார்.

அந்தப் பெருமை மிக்க படையினர் கைகளில்
இருந்த றைபிளால் இடிக்க கன்னங்களில்
இரத்தம் பீறிட்டது.[39]

இவ்வாறே பொதுமக்கள் தாக்கப்படுவதையும், அதனால் ஏற்படும் அச்ச உணர்வையும் குறைவிருத்தி நாடு என்ற சிறுகதையில்,

அப்படித் தப்பினாலும் அடி உதை இடி என்று
மாதக்கணக்கில் ஆஸ்பத்திரியில் இருந்தாலும் (சரிவராது)[40]

எனக் குறிப்பிடுகின்றார்.

காணாமல் போனவர்கள்

போர்க்காலத்தில் அதிகளவில் இடம்பெற்ற சம்பவங்களில் காணாமல் போதலும் ஒன்றாகும். குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு என்ன நடந்தது என்பது அவரது குடும்பத்தவர்களுக்கே தெரியாமல் போவதே ஆட்கள் காணாமல் போதல் ஆகும். காணாமல்

போனவா்கள் ஒன்றில் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது இரகசிய தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் பொதுவாக உண்டு. செம்மணிப் புதைகுழிகள் காணாமல் போனவா்களுடையது என்ற செய்திகளும் வெளிவந்தன. கைதுசெய்யப்பட்டவா்கள் சித்திரவதையின் பின் கொன்று புதைக்கபட்டமையை மாணவி கிருசாந்தி குமாரசாமியின் கொலைச் சம்பவம் வெளிப்படுத்தியது. இந்த நிகழ்வுகள் யாழ்ப்பாணப் பகுதியை ஒரு காலத்தில் அச்சம் மிக்க பகுதியாக்கி இருந்தது. மக்கள் எழுதவோ, பேசவோ, வீதிகளில் நடமாடவோ அஞ்சிய அந்தக்கால நிகழ்வுகள் பல கதைகளாக்கப்பட்டன. சிதம்பர திருச்செந்திநாதனின் மணல்வெளி அரங்கு, அட இவ்வளவுதானா, காணாமல் போனவள் என்ற சிறுகதைகள் இந்த விடயத்தை மையமாகக் கொண்டு படைக்கப்ட்ட சிறுகதைகளாகும்.

மணல்வெளி அரங்கு காணாமல்போன ஒருவருக்கு நடந்த திகில் நிறைந்த அனுபவா்தை குறியீட்டு வடிவில் விளக்குகிறது.

அட இவ்வளவு தானா என்ற சிறுகதை விசாரணைக்குழு ஒன்றின் கண்துடைப்புச் செயலையும், காணாமல் போனவன் என்ற சிறுகதை காணாமல் போனவனை நினைத்து வருந்தும் அவனது பேரனின் கவலைகளையும் கருக்களாகக் கொண்டன. இருப்பு என்ற சிறுகதையில் காணாமல்போன சம்பவம் ஒன்றை சிதம்ப திருச்செந்திநாதன் அவா்கள் பின்வருமாறு பதிவுசெய்கிறாா்.

> அவரை மூன்று நாளாகக் காணேல்லை
> எரு அள்ள எண்டு லொறியோடை போனாா்.[41]

காணாமல் போனவன் என்ற சிறுகதையில் வரும் கிழவா் வாய்மொழி மூலமாக சம்பவத்தைக் காட்டுகிறாா்.

> பத்தொன்பது வயதுப் பேரன் மறைபொருளாகிவிட்டான்
> அடையாள அட்டையுடன்தான் போனான்.[42]

அடையாள அட்டையுடன் போனவா்கள் தம்மை யாா் என்று அடையாளம் காட்டியபோதும் காணாமல் போனாா்கள் என்பதைக் காட்டுகிறாா்.

விசாரணைகள்

காணாமல் போனவா்கள் தொடா்பான செய்திகள் வெளிவரத் தொடங்க விசாரணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. தாமே செய்த தவறை தாமே விசாரிப்பது எவ்வளவு

கேலிக்கூத்து ஆகும். தவறைச் செய்தவர்களே அதனை விசாரிக்க வந்திருந்தனர் என்பதை ஆசிரியர்,

அதிகாரிகளின் உடைகளில் இருந்த சிவில்த்தனம்
பார்வையிலும் தோற்றத்திலும் இல்லை.[43]

இவ்வாறு வெளிப்படுத்துகிறார்.

அவர்களுடைய நோக்கம் காணாமல் போனவர்களைக் கண்டறிவதல்ல, சம்பவங்களை மூடிமறைப்பது என்பதைப் பின்வரும் குறியீட்டில் காட்டுகிறார்.

குழியில் அடங்க மறுத்த சடலத்தின் கை கால்கள் போல
கோவைகள் ஊடாக தாள்கள் மிதந்து கொண்டிருந்தன.[44]

உறவுகளின் துயரம்

பிள்ளைகளைக் காணவில்லை என்பது பெற்றோர்களுக்கு எவ்வளவு துயரமானது. அவ்வாறே கணவனைக் காணவில்லை என்று மனைவியும், தனது பேரனைக் காணவில்லை என்று தாத்தாவும் வருந்தும் சம்பவங்களை ஆசிரியர் தனது சிறுகதைகளில் மிகவும் உணர்வுபூர்வமாகப் படைத்துள்ளார்.

இருப்பு என்ற சிறுகதையில் கணவனை நினைத்து அழும் மனைவியாக கனகம்மாவைக் காட்டுகிறார்.

"உழைப்பு பிழைப்பு இல்லாட்டியும் அவர் பக்கத்திலை
இருந்தால் காணும் என்ன நடந்ததோ என்ரை அம்மாளே"[45]

பிள்ளையைத் தேடும் பெற்றோர்களை காணாமல் போனவன் என்ற சிறுகதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

இரண்டு கிழமைகளாக மகனும் மருமகளும் படாத
பாடுபடுகிறார் ஏறாத முகாம் இல்லை இறங்காத
அலுவலகம் ஒன்றும் இல்லை பத்தொன்பது வயது
பேரன் மறைபொருளாகி விட்டான்.[46]

தனது பேரனைக் காணவில்லை என்ற தவிப்பில் உயிர்போகும்போதும் அவன் நினைப்பில் பேரனின் துயரம் நிரம்பியிருப்பதை காணாமல் போனவன் கதையில் விபரிக்கிறார். தனது உயிரை எடுக்க வந்த இயமனிடம் பேரனின் உயிர் பற்றிக் கேட்பதாக இந்தச் சிறுகதை உள்ளது.

எங்கையப்பா என்ர பேரன் உயிரோடை இருந்தால்
இவ்வளவுக்கும் தெரிஞ்சிருக்கும் செத்துப்போயிருந்தால்
உனக்குத் தெரியாமல் இருக்காது, தயவுசெய்து சொல்லு[47]

4.1.5 போராளிகள் பற்றிய மக்கள் எண்ணங்கள்

மக்களின் பாதுகாப்புக்கும் சுதந்திர வாழ்வுக்குமாக இவர்கள் தம்மை அர்ப்பணிக்க முன்வந்தவர்கள். சமூகநலனும், இலட்சிய நோக்கும் அவர்களிடம் இருந்தது. பெற்றவர்களையும், சகோதரர்களையும் கைவிட்டு ஒரு தியாக வாழ்வு வாழ்ந்தவர்கள். அவர்களை ஆசிரியர் காலம் கழிப்பமடி என்ற சிறுகதையில்,

போன வருசம் தன்னிடம் படித்தவன் இந்த வருசம்
தலையைக் கவிழ்ந்த வண்ணம் கைகயில் துணியால்
சுற்றிய நவீன சுமையுடன் போகிறான்.[48]

எனவும், அதே கதையில்

நடுத்தர வயதுக் காரர்கள் வாழ்வையே
அர்ப்பணிக்க வெளிகிட்ட தலைமுறை.[49]

எனவும் அவர்களது தியாகங்களைக் காட்டுகிறார்.

தங்களை விட்டுப் பிரிந்துசென்ற ஒருவன் தன் நண்பர்களை மீண்டும் சந்திப்பதாக வெட்டுமுகம் சிறுகதையில் காட்டும்போது பின்வருமாறு கூறுகிறார்.

இரண்டு வருடத்தின் பின் செந்தூரனைக் கண்டபோது
அவன் முகத்தில் புதுப்பொலிவு பிறந்திருந்தது
முகத்தில் மட்டுமல்ல, மக்களுக்காக வாழத்தொடங்கிய
அவனை அப்போதுதான் புரிய ஆரம்பித்திருந்தோம்.[50]

எனக்காக என்ற சிறுகதையில் தியாகி ஒருவனை,

பிறிதொருநாள் மணலாற்றுப் பக்கம் அதிக ஷெல்
விழுந்து கொண்டிருந்த நேரம் புன்னகை சிந்தும்
தோழர்களோடு வாகனம் ஒன்றில் போவதை
தம்பி கண்டதாகச் சொன்னான்.[51]

எனக் கூறுகிறார்.

தேவர்கள் என்ற சிறுகதையில் ஒரு போராளியைத் தேடி வந்த போது ஒருவரது எண்ணங்களை இவ்வாறு காட்டுகிறார்.

தேவனைக் கண்டாயா
எந்தத் தேவன் என்று கேட்டால் பிரச்சினை தேவனை
தெரியாமல் யார் இருப்பார்கள் அவனும் இந்த
மண்ணில் இருந்து வந்தவன் தானே

எனவும்,

தேவன் எப்பொழுதும் இந்த மண்ணில் மிதிப்பவன்
மண்ணுக்காக வாழ்பவன் ஆக்கிரமிப்பாளர்களை
எதிர்ப்பவன்
தேவர்களைக் கண்டால் சொல்லக்கூடாது
தேவர்களை மட்டுமா? தேவனையும்தான்.[52]

இவை அக்கதைகளில் போராளிகளைக் குறிக்க அவர் கையாண்ட முறைகளைக் காணலாம். அவர்கள் குறித்த மக்களின் எண்ணங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

அம்மாவாக அல்ல என்று சிறுகதையில் போரில் இறந்த வீரனின் தாய், தன்வீட்டுக்கு வரும் அவனது நண்பர்களில் தன் மகனைக் காண்பதைப் பின்வருமாறு படைத்துள்ளார்.

அம்மா பசிக்குது என்று கூறி தென்னையில் ஏறுவார்கள்
மாம்பிஞ்சைப் பறிப்பார்கள் கிணற்றில் குளிப்பார்கள்
குடிசைவாசலில் ஓலை பரப்பி வட்டமாக உட்கார
அம்மா நடுவில் அமருவாள் வாழை இலைகளைப்
பிய்த்துக்கொண்டு அம்மா குழைத்துத் தரும் சாப்பாட்டை
சாப்பிடுவார்கள். மணியான சாப்பாடு என்று வேறு
சொல்வார்கள். அம்மா அவர்கள் ஒவ்வொருவர்
முகத்திலும் அவனைத் தேடுவாள் அம்மாவாக அல்ல.[53]

போராளிகள் மரணத்தைப் பற்றிய மக்களின் பார்வை

தேசவிடுதலைக்காக, தன் மக்களைப் பாதுகாப்ப உயிர்கொடுத்த தியாகிகளாகவே மக்கள் அவர்களைப் பார்த்தனர். அவர்களது மரணங்கள் மக்களின் கண்களை கலங்கச் செய்தது. அவர்கள் வாழவேண்டியவர்கள், இளம்பயிர்கள் என்ற

எண்ணம் மக்களை வாட்டியதை பின்வருமாறு ஆசிரியர் காலம் கழிப்பமடி என்ற சிறுகதையில் குறிப்பிடுகிறார்.

எத்தனை நினைவஞ்சலிகள் அத்தனையும்
வளரும் பயிர்கள்தானே.
தூரத்தில் தெரியும் மண் மூட்டைகள் அவற்றின்
பின்னணியில் நாளைய சந்ததிக்காக இன்று
கருகும் பயிர்கள்.[54]

வெட்டுமுகம் என்ற சிறுகதையில் இறந்துபோன ஒரு போராளி பற்றிய அவன் நண்பனின் நினைவுகளை,

அவன் மரணித்துப் போனதும் ஊரே அழுதுகொண்டு
ஊர்வலம் போனது நேற்றுப் போல வேதனை உண்டானது
கண்களில் கண்ணீர் வந்தது.[55] எனக் காட்டுகிறார்

ஒரு தாய் தன் மகனின் கல்லறை மீது கார்த்திகை மாதம் 27ம் திகதி மாலை ஆறு மணிக்கு கிட்டிய நேரத்தில் மகனுக்கு விளக்கேற்றுவதை அம்மாவாக அல்ல என்ற சிறுகதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

அவள் அழ ஆரம்பித்தாள் அக்கம் பக்கம் நின்றவர்கள்
அவளை அழைத்துச் சென்று மகனின் நடுகல் முன்
விட்டார்கள் அம்மா அந்த மகனின் நடுகல்லில்
பூக்களைச் சொரிந்தாள். கண்களைத் துடைத்தாள்,
விளக்கேற்றினாள்.[56]

4.1.6 இயல்பு வாழ்க்கை பாதிப்பு

மக்கள் தங்களது நாளாந்த கருமங்களைச் சுதந்திரமான முறையில் செய்து ஓர் அமைதியான வாழ்க்கை வாழ்வதே இயல்பு வாழ்வு எனப்படும். போர் பல சந்தர்ப்பங்களில் மக்களின் இயல்பு வாழ்வை கடுமையாகப் பாதித்தது. தாக்குதல்கள், முன்னேற்றங்கள், இடப்பெயர்வுகள் இவற்றில் முக்கிய இடம்பெற்றன. அதுமட்டுமன்றி, அதன் பக்கக் காரணிகளாக போக்குவரத்துச் சிக்கல், மருந்துப்பொருட்கள் தட்டுப்பாடு, பொருளாதாரப் பாதிப்பு, அச்சுறுத்தல், ஊரடங்குச்சட்டம், சுற்றிவளைப்பு, வீதித்தடை என்பனவும் மக்களின் இயல்பு வாழ்வைப் பாதித்தன. இவ்வாறு மக்களின் இயல்பு வாழ்வைப் பாதித்த பக்கக் காரணிகளை ஆராய்வோம்.

பொருளாதாரத்தடை

வடபகுதி மக்களை மிகவும் பாதித்த விடயம் பொருளாதாரத்தடையாகும். பொருளாதாரத்தடை என்பது பல்வேறு பொருடகள் வடபகுதிக்கு எடுத்து வருவது தடைசெய்யப்பட்டது. அவ்வாறான பொருட்கள் எவையெனப் பட்டியலிட்டால் அரிசி, மா, சீனி, பருப்பு, அழகுசாதனப் பொருட்கள், மதுபானம் தவிர மற்றைய பொருட்களெல்லாம் வரையறுக்கப்பட்டன. தடைசெய்யப்பட்ட பொருட்களில் பற்றரிகள், எரிபொருட்கள் முதலிடம் பெற்றன. எரிபொருட்களில் மண்ணெண்ணெய் மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்தது. அதுவும் வரையறுக்கப்பட்டளவுதான். இதனை ஆசிரியர் என்னுடையதும் அம்மாவினுடையதும் என்ற கதையில் பின்வருமாறு பதிவுசெய்கிறார்.

> பொருண்மியத் தடை வந்து பெற்றோலும் மண்ணெண்ணெயும்
> போத்தல்களில் ஏறி பெட்டிக்கடைகளின் அரசர்களான பின்னர்
> பொன்னையாண்ணை வேலை செய்த பெற்றோல் செற்
> கண்காட்சிப் பொருளாகிவிட்டது. பொன்னையா அண்ணைக்கு
> சந்தைக்குள் தேங்காய் வியாபாரம்.[57]

பொருளாதாரத்தடை, பெற்றோல், ஓயில் என்பன பெறமுடியாமல் போனபோது மக்கள் வேறு பதலீட்டுப் பொருட்களைப் பயன்படுத்தி வாகனங்களை இயக்கியதை என்னுடையதும் அம்மாவினுடையதும் என்ற கதையில்,

> கோயில் வாசலில் சைக்கிளை நிறுத்தியபோது புகை
> கக்கியபடி வந்து நின்றது லொறி ஒன்று. மண்ணெண்ணையும்
> மரக்கறி எண்ணையும் கலந்து மூக்கைப் பதம்பார்த்தது.[58]

எனப் பொருளாதாரத் தடையை தனது கதைகளில் பதிவு செய்துள்ளார்.

வாகனங்கள் மண்ணெண்ணையில் ஓடியதை காட்சி மாற்றம் என்ற சிறுகதையில்,

> அலங்கரிக்கப்பட்ட பொம்பிளை வந்த கார் கோயில்
> வாசலில் வந்து நின்றது. இந்தக் காரும் மண்ணெண்ணை
> குடித்தபடிதான் ஓடுகிறதா.[59]

யாழ்ப்பாணம் போக நினைத்ததையும், அங்கு போகமுடியாமல் போனதையும் வெளிநாட்டில் உள்ள இருவர் உரையாடும்போது,

> யாழ்ப்பாணம் போகும் எண்ணம் பொருண்மியத் தடைக்கு
> உட்பட்ட பொருட்களைப்போல் தடைப்பட்டுப் போய்விட்டது.

போக்குவரத்துச் சிக்கல்

போக்குவரத்துச் சிக்கல் என்பது மக்கள் தமது தேவைகளின் நிமித்தம் நாட்டின் பல்வேறு பாகங்களுக்கும் சென்று வரக்கூடிய நிலமை தடைப்பட்டமையாகும். யாழ்ப்பாணாத்தில் இருந்து தென்பகுதிகளுக்குச் செல்ல ஆனையிறவைத் தாண்ட வேண்டும். அங்கு ஒரு படை முகாம் இருந்ததால் அது தடைப்பட்டது. இதனால் விமானம், கப்பல் போன்றன மூலமே தென்பகுதிக்கான பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. கடிதங்கள், தகவல்களைக் கூட உரிய காலத்திற்கு அனுப்ப முடியவில்லை. ஒருபோதும் என்ற சிறுகதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

> யாழ்ப்பாணத்தில் இருந்து கடிதம் கொழும்புக்கு வர
> பத்துப் பதினைந்து நாள் எடுத்திருக்கு. குமாரியோ
> குமணவோ எதிலை வந்தது.[60]

கடிதங்களை உரிய காலங்களுக்கு அனுப்ப முடிவதில்லை என்பதால், அவை கொழும்புக்குப் போவோரிடம் கையில் கொடுத்துவிடும் பழக்கம் உண்டு. ஒருவர் கொழும்புக்குப் புறப்பட்டால் அவர் அயலில் உள்ளவர்களுக்கு ஒரு தபால்நிலைய சேவையை வழங்குபவர் போல உதவுவார்.

> குமாரியும் இல்லை கோதாரியும் இல்லை யாழ்ப்பாணத்தால
> வந்த ஓராள் கொண்டு வந்தது.[61]

என்பதை ஒருபோதும் சிறுகதையில் காட்டுகிறார். பயணங்கள் கடினமாக அமைந்தமையை அதே சிறுகதையில்,

> நினைச்ச உடனே போய்வரக்கூடிய இடமே
> யாழ்ப்பாணம்.[62]

இவ்வாறு எழுதுகிறார். இக்காரணங்களால் யாழ்ப்பாணம் ஒரு தனித்தீவாக அக்காலத்தில் மாறியிருந்தது. இதனால் உள்ளூர் என்றால் யாழ்ப்பாணத்திற்கு உட்பட்ட பகுதியே கருதப்பட்டது. இ.போ.ச பஸ்களின் தொகை குறைந்து யாழ்ப்பாணத்தின் போக்குவரத்தில் மினிபஸ்களே செல்வாக்குச் செலுத்தின. அதனை காலம் கழிப்பமடி சிறுகதையில் பின்வருமாறு பதிவுசெய்கிறார்.

> ஒருபக்கம் சரிந்தபடி செல்லும் மனிபஸ்கள் அதில்
> தொங்கும் மனிதர்கள் அதையும் மிஞ்சி கூரைமேலே
> சுமைகளோடு சுமைகளாக மனிதர்கள்.[63]

யாழ் நகரத்திற்குக்கூட சில காலங்களில் செல்ல முடிவதில்லை. அடிக்கடி

அச்ச உணர்வால் மக்கள் வீடுகளின் உள்ளேயே முடங்கியிருக்க வேண்டியிருந்தது. நகருக்குச் செல்லமுடியாமல் போக்குவரத்து முடங்கிக் கிடந்தது. இதனை நல்ல மேய்ப்பான் என்ற சிறுகதையில்,

எங்கள் ஒழுங்கையால் வந்து றோட்டில் ஏறியபோது
றோட்டு வெறிச்சோடிப்போய் இருந்தது சனநடமாட்டமும்
வெகு குறைவு. பஸ்கள், மினிபஸ்காரர்கள் எல்லாமே
எங்கேயோ பதுங்கிவிட்டன.

நான் ஒழுங்கை வழியாக சுழன்று சுழன்று ஒன்பது
மணிக்கு கந்தோருக்கு போய்ச்சேர்ந்தேன். அதன்
பின்னர்தான் ரவுண்பக்கம் பிரச்சனை அதிகமாகியது
எப்படித் திரும்பிப்போவது என்ற பயமும் ஏற்பட்டது.[64]

போக்குவரத்துத் தொடர்பான பிரச்சினைக்கு அதிகாரிகள்கூட மழுப்பலான விதத்தில் பதில் சொல்வதை அட இவ்வளவுதான் என்ற சிறுகதையில்,

ஓ போக்குவரத்துப் பிரச்சினையா அது சரியான
பிரச்சினைதான் நாங்கல் வலுவாய் தெண்டிக்கிறம்
எப்பிடியும் கப்பல் போக்குவரத்து செய்துபோடலாம்
கிழமைக்கு இரண்டு தட்வையாவது.

எனப் பதிவுசெய்துள்ளார்.

பொருளாதாரப் பாதிப்பு

இயல்பு வாழ்க்கையை பாதிப்படையச் செய்த முக்கிய காரணிகள் பொருளாதாரம் பாதிக்கப்பட்டமையாகும். வடபகுதியின் பொருளாதார அடிப்படை அம்சமாக விவசாயம் விளங்கியது. வடபகுதி விவசாயிகள் வெங்காயம், புகையிலை, உருளைக்கிழங்கு போன்ற பயிர்களைப் பயிரிட்டு தென்பகுதிக்கு அனுப்பி வருமானம் ஈட்டினர். வடபகுதியின் பிரதான வருமான மார்க்கம் பயிர்ச்செய்கையிலேயே தங்கியிருந்தது. எனினும் போரும் போக்குவரத்து நெருக்கடியும் பொருளாதாரத்தை மிகவும் மோசமாகப் பாதித்தது. அதனை ஆசிரியர் அகதிமுகாம் என்ற சிறுகதையில்,

இங்கு லொறி போக்குவரத்து ஒழுங்காக இல்லாதபடியால்
பொயிலை நல்லாய் விலை விழுந்துபோச்சு நல்ல திறம்

கன்றுகள் கூட அநியாய விலைபோகுது எண்ணெய்த்
தட்டுப்பாடு சரியாய் இருக்கிறபடியால் இந்தமுறை
வெங்காயம் நடேலாது போல. கனக்க செலவழிச்சு
வெங்காயத்தை நட்டுப்போட்டு நல்ல விலைக்கு விற்கலாமோ
தெரியாது. இனித் தோட்டம் செய்து நல்லா வருவம்
எண்ட நம்பிக்கை எனக்கில்லை.[66]

என்றவாறு பதிவுசெய்கிறார்.

தடை முகாம்கள் காவலரண்கள்

போர்க்காலத்தில் வீதிகள், சந்திகள், முக்கியமான இடங்களில் எல்லாம் தடைமுகாம்கள் இருந்தன. தடைமுகாம்களையும், காவலரண்களையும் தாண்டிச் செல்வது கடுமையானதாக அமையும். அவ்வாறான தடைமுகாம் ஒன்றையும், அதைத் தாண்டிச் செல்ல அடையாள அட்டைகள் அவசியம் என்பதையும் காணாமல் போனவன் என்ற சிறுகதையில் ஆசிரியர் பின்வருமாறு பதிவுசெய்கிறார்.

சந்தித் தடைமுகாம் ஒளி வெள்ளத்தில் பூத்திருந்தது
ஜெனரேற்றரின் சீரான ஓசையில் அந்தப்பகுதி கலகலத்தது
முள்ளுக்கம்பி கேடர்கள் பனைமரக்குற்றிகள் மண்மூடைகள்
என தெருவில் இருபக்கமும் அலங்காரமாக தெருவைத்
தடைசெய்து படுத்திருந்த கேடர்கள்.
யாரும் ஆளை மறிக்கவில்லை பழக்க தோசத்தால்
படியில் இருந்த அடையாள அட்டைகள் கொண்ட
பொதியை எடுக்கப்போனார்.[67]

தடைமுகாம்கள் ஒவ்வொரு சந்தியிலும் எவ்வாறு திட்டமிட்டு அமைக்கப் பட்டிருந்தன என்பதை குறியீட்டு வடிவில் மணல்வெளி அரங்கு என்ற சிறுகதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

சரிந்த சுவர்கள் அழிந்த வீடுகள் மத்தியில் நிதானமாய்
தெருவின் மத்தியில் சிறிய சிறிய கூடுகள் வெள்ளைப்
புறாக்கள் மட்டும் பக்குவமாய் சீவிக்கப் பொருத்தமாய்.[68]

வெள்ளைப் புறாக்கள் சமாதானத்தின் குறியீடு சமாதானத்திற்கான போர் என்பதால் வெள்ளைப் புறாக்களாக காவலரணில் இருந்தவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மருந்துத் தட்டுப்பாடு

மக்களின் மனிதாபிமானத் தேவைகளில் ஒன்றான மருந்துகள் கூட சரியான முறையில் வழங்கப்படவில்லை. உரிய காலத்தில் மருந்துப் பொருட்கள் கிடைக்கவில்லை. மருந்துப் பொருட்களுக்குப் பலவேளைகளில் பெரியளவில் தட்டுப்பாடு நிலவியது. இதனை அட இவ்வளவுதானா என்ற சிறுகதையில் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்.

> "ஆஸ்பத்திரிகளில் மருந்துப் பிரச்சினையோ? மருந்துகளை
> தாராளமாய் அனுப்ப நாங்களும் எங்கள் உயரதிகாரிகளும்
> முயற்சி எடுக்கிறம்தான் எண்டாலும் பாதுகாப்பு அனுமதி
> அது இது எண்டு இழுபட்டு சரியான ரைமுக்கு அனுப்ப
> முடியாமல் போகுது"[69]

அச்சுறுத்தல்கள்

போர்க்காலங்களில் மக்கள் கடுமையாக அச்சுறுத்தப்பட்டனர். மக்கள் எப்பொழுதும் ஒருவித பயத்தில் வாழ்ந்தனர். மிகக் கடுமையான வார்த்தைகளாலும், செயல்களாலும் அச்சுறுத்தப்பட்டனர். இவ்வாறாக மிரட்டப்படும் சம்பவம் ஒன்றை எதுவரை என்ற சிறுகதையில் பதிவுசெய்கிறார்.

> எங்கடை காம்பில் ஒரு அறை இருக்கு தெரியுமா
> என்றான் தமிழ் தெரிந்த சிப்பாய் ஒருவன்
> ம்.....
> அங்கை கொண்டு போனால் இரத்தக்காயம் படாமல்
> ஒருவரும் வெளியில வந்ததில்லை
> ம்.....
> அடுத்த தரம் இப்படி ஏதாவது பிரச்சினை எண்டால்
> அந்த அறைக்குத்தான் கொண்டு போகவேணும்
> இப்ப போ என்றான் சற்று உறைப்பாக.[70]

இது தனியே அச்சுறுத்தலை மட்டுமன்றி, வதை முகாம் ஒன்று இடம்பெற்றதையும் காட்டுகிறார்.

சுற்றிவளைப்புக்கள்

யாழ்ப்பாணத்தில் 1995 இடப்பெயர்வின் பின் மக்கள் மீளத் திரும்பி வந்தபோது எதிர்கொண்ட முக்கியமான ஒரு பிரச்சினை சுற்றிவளைப்புக்களாகும். வீடுகளில் உள்ள

மக்கள் எல்லோரும் திறந்தவெளி ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்படுவர். யாரும் வீடுகளில் நிற்கமுடியாது. குறித்த பகுதிகளுக்கு எல்லைகளாக படைகள் நிறுத்தப்படும். அதற்குள் யாரும் நுழையவோ, வெளியேறவோ முடியாது, அதுவே சுற்றி வளைப்பு எனப்படும். மக்கள் இயல்பு வாழ்க்கையை அக்காலத்தில் மோசமாக பாதிப்பதாக சுற்றிவளைப்புக்கள் நடைபெற்றன. இதனை பயம் வேண்டாம் என்ற சிறுகதையில்,

> "எல்லாரும் போளினில் பள்ளிக்கூட கிறவுண்சுக்கு போக
> வேணும் சரியா" மனிதர்கள் மாத்திரம் எங்கெங்கெல்லாமோ
> இருந்து வந்து சொல்லி வைத்த மாதிரி மைதானத்தின்
> நடுவே படியத் தொடங்கினர். அழுது பழகக்கமில்லாத
> சின்னப்பிள்ளைகள் கூட சிரிக்க மறந்து விழிகளால்
> பேந்திக் கொண்டிருந்தன.[71]

இவ்வாறு சுற்றிவளைப்புக்களையும், மக்களின் அச்ச உணர்வையும் எடுத்துக் காட்டுகிறார்.

கடிதங்கள்

கடிதங்கள் மட்டுமே தகவல்களை பரிமாறக் கிடைத்த முக்கிய ஊடகமாக போர்க்காலத்தில் காணப்பட்டது. அந்தக் கடிதங்கள் கூட நேரகாலத்திற்கு கிடைப்பதில்லை. கப்பல் மூலமே எல்லாப் பொருட்களும் வடபகுதிக்கு விநியோகிக்கப்பட்டதால் கப்பல்கள் வரும்போதே கடிதங்களும் வரும். இதனை ஒருபோதும் என்ற சிறுகதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

> "யாழ்ப்பாணத்தில் இருந்து கடிதம் கொழும்புக்கு வரப் பார்
> பதினைஞ்சு நாள் எடுத்திருக்கு"
> "குமாரியோ குமணவோ (கப்பல்களின் பெயர்) எதில வந்தது"
> குமாரியும் இல்லை, குமணவும் இல்லை யாழ்ப்பாணத்தால
> வந்த ஒரு ஆள் கொண்டுவந்தது.[72]

கடிதங்களை விரைவு கருதி அக்காலத்தில் வெளியிடங்களுக்குச் செல்வோரிடம் கொடுத்து விடுவர். அக்காலத்தில் தபாலகங்கள் பற்றிக் குறிப்பிடும்பொழுது,

> முத்திரைகள் தபாற்கந்தோரில் விற்கிற காலம் அல்ல
> இந்தக் காலம்

காலம் கழிப்பமடி என்ற சிறுகதையிலும் தாமதமாக வரும் கடிதம் பற்றிய செய்தியை பின்வருமாறு வெளிப்படுத்துகிறார்.

"ஒரு மாதத்துக்கு முன்னர் போட்டு எத்தனை பஸ்கள்
பிரயாணம் செய்து, எவ்வளவு நாட்கள் வெவ்வேறு
இடங்களில் பழி கிடந்து வந்த கடிதமோ அதனை
அம்மா வைத்து வாசித்துக் கொண்டிருந்தாள்"[73]

ஊரடங்குச்சட்டம்

யாழ்ப்பாணத்தில் போர்க்காலத்தின் முக்கியமான ஒரு நெருக்கடி ஊரடங்கு. சில காலங்களில் 24 மணி நேர ஊரடங்கு வாரக் கணக்கில் போடப்பட்டு 1 மணித்தியால, 2 மணித்தியால இடைவேளை வழங்கப்பட்டதும் உண்டு. பெரும்பாலும் இரவு முழுவதும் ஊரடங்காகவே அமைந்ததும் உண்டு. இதனால் மக்கள் பெரியளவில் பாதிக்கப்பட்டனர். நோயாளிகளைக் கூட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியவில்லை என்பதை எந்தையும் தாயும் மகிழ்ந்து குலவி... என்ற சிறுகதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

சும்மா நேரத்தில் ரோட்டில் போவதே சிக்கல்
ஊரடங்கு நேரத்தில் என்றால் எப்படி இருக்கும்
ரோட்டுப் பக்கம் தலை காட்டவே முடியாது
விடியும் வரை சமாளிக்க வேண்டும்.

ஒரு கிழமை கழிய மீண்டும் அம்மாவுக்கு நெஞ்சுவலி வந்தது
எப்படியும் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகவேண்டும் தெருமுனையில்
ஒரு கார் இருந்தது பாஸ் ஓட்டி இடையிடையே ஓடும்
வெள்ளைக்கொடி பிடித்து ஆஸ்பத்திரி போகலாம்
என்று அந்தக் கார்க்காரரிடம் போனோம்.....

வெள்ளைக்கொடி பிடித்தால் என்ன பிடிக்காவிட்டால் என்ன
விளைவு ஒண்டுதான் ஒரே மாதிரித்தான் தம்பி
என்னைக் கேட்டுக் குறை நினையாதை நான் வரமாட்டன்
வேணுமெண்டா காரைத் தாறன் கொண்டு போங்கோ
நானும் பிள்ளை குட்டிக்காரன்.[74]

இவ்வாறு ஊரடங்குச் சட்டம் வைத்தியசாலைக்குக்கூட நோயாளர்களைக் கொண்டு செல்லமுடியாத அவலத்தை ஏற்படுத்தியது. இதனால் உயிரிழப்புக்கள்கூட ஏற்பட்டன.

4.1.7 போரும் சமாதானமும்

சமாதானம் என்பது அமைதியான, ஒற்றுமையான சூழல் ஒன்றைக் குறிக்கும். போருக்கு எதிரானது சமாதானம் எனக் குறிப்பிடப்படும். ஆனால் உலகில் சமாதானத்தின் பேரால் யுத்தம் நடப்பதும், சாமதானத்தைக் காட்டி போர்களைத் தோற்கடிப்பதும், சமாதானம் என்று ஒருபக்கம் போக்குக்காட்டி இன்னொரு பக்கம் சிதைந்த படைப்பிரிவுகளை சீரமைப்பதும், பலமான வேளையில் போரையும், பலவீனமடையும் போது சமதானத்தையும் விரும்புவதும் என சமாதானமும், சமாதானம் என்ற சொல்லும் எவ்வளவு மோசமாகப் பயன்படுத்தப்பட்டன என்பதை அறியலாம். போரால் பெறமுடியாத எதனையும் சமாதானம் மூலம் பெறமுடியாது என்பது ஒரு போர் பற்றிய பழமொழி. சமாதானம் பற்றி இந்தக் கருத்துக்களை, உண்மைகளை சமாதானம் என்ற சிறுகதையில் உருவகத் தன்மையுடன் சிதம்பர திருச்செந்திநாதன் பின்வருமாறு காட்டுகிறார்.

> சமாதானத்தை ஒரு நொந்து முடங்கிப்போன பெரியவராகவும் அதை தேவையானபோது தேடி பெருமையடையச் செய்து, தேவையற்ற போது குற்றுயிராக்கி விடுவதாகவும், அது மூலையில் உயிரை விடப் போகின்ற ஒன்றாக இருப்பதாகவும் சித்திரிக்கிறார். அதனைத் தேடும் காரணத்தைப் பின்வருமாறு காட்டுகிறார்.
>
> பெரும்பான்மை சிறுபான்மை பிரச்சினை எல்லை மீறிப் போய்விட்டது நாட்டை அழிவின் விளிம்பிலிருந்து காப்பாற்ற வேண்டும். ஆனால் பிரச்சினை முற்றிப் போய்விட்டது நாங்கள் மேற்கொண்ட எந்த நடவடிக்கையும் பயன்தரவில்லை. பயன்தரவில்லை என்றால் சிறுபான்மை பிரச்சினை முழுமையாக முடியவில்லை சிறுபான்மையை முழுமையாக முடிக்கும் வரை பிரச்சினை முடியாதுதான் என்றார்.[75]

தேவைகளுக்கேற்ப சமாதானம், பேச்சுவார்த்தை என்பன அரங்கேற்றப்பட்டதை இந்தச் சிறுகதை தெளிவாக விளக்குகிறது.

4.1.8 முக்கியத்துவம் பெற்ற விடயங்கள்

போர் இடம்பெற்ற காலத்தில் சில விடயங்கள் இல்லாமல் எதையும் செய்ய முடியாது. அவ்வாறான விடயங்களில் ஒன்றாக அடையாள அட்டை முக்கியத்துவம்

பெற்றிருந்தது. வீட்டில் படுத்திருக்கும்போது கூட கைகளிலோ, தலைமாட்டிலோ வைத்திருக்க வேண்டியிருந்தது. அவ்வாறே நாளாந்த வானொலிச் செய்தியும் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

அடையாளஅட்டை

அடையாள அட்டை 1972ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய அடையாள அட்டை என இது அறிமுகம் செய்யப்பட்டது. போர்க்காலத்தில் பல்வேறு அடையாள அட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1995ன் பின் இராணுவ அடையாள அட்டையும், இதைவிட தொழிலாளர் தொழில் நிலையத்தை விளக்கி தொழிலாளர் அடையாள அட்டையும், பிரதேசங்களின் வகைகளுக்கேற்ப அந்தந்தப் பிரதேசங்களால் அறிமுகம் செய்யப்பட்ட பாஸ் நடைமுறைகளும் மக்களின் வாழ்க்கையில் நெருக்கடியை உண்டாக்கின. எந்தநேரமும் இரண்டு, மூன்று அடையாள அட்டைகளை கைவசம் வைத்திருக்க வேண்டியிருந்தது. இதனை காணாமல் போனவன் என்ற கதையில் பின்வருமாறு காட்டுகிறார். அடையாள அட்டையை சுருக்கமாக ஐ.சி என்று குறிப்பிடுவார்கள்.

> கேட்பது என்னவோ ஒரு ஐசிதான் ஆனால் காட்ட
> வேண்டியது மூன்று, நான்கு ஐ.சீக்கள். உலகத்தில்
> இல்லாத புதினமாக ஒருவருக்கு மூன்று, நான்கு.[76]

அடையாள அட்டை இல்லாமல் பஸ்ஸில் கூட பயணிக்க முடியாது. பஸ்காரன் கூட பஸ்ஸில் ஏற்றமாட்டான். ஏனெனில் அது பின்னர் அவர்களுக்குப் பிரச்சினையாக அமையும்.

> எல்லாரிட்டையும் அடையாள அட்டை இருக்கா இல்லாமல்
> ஏறாதேங்கோ. பிறகு எங்களுக்குப் பிரச்சினை.[77]

ஐ.சி எவ்வளவு தூரம் முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதை இவை தெளிவாக்குகின்றன.

வானொலிச் செய்திகள்

போர் இடம்பெற்ற காலத்தில் வானொலியும் செய்திகளும் முக்கியம் பெற்றிருந்தன. மின்சாரம் இல்லாதபோதும் பற்றரிகளாலோ, சைக்கிள் தைனமோக்களினாலோ ரேடியோக்கள் இயக்கப்பட்டன. நாளாந்தம் நடைபெறும் செய்திகள், ஊரடங்கு அறிவித்தல்கள் மற்றும் போர்ச்செய்திகளை அறிந்து கொள்ள வானொலிச் செய்திகளே பயன்பட்டன. வானொலிச் செய்திகள் தொடர்பாக யாரை நோவது என்ற சிறுகதையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

கொஞ்சக்காலமா மாநிலச் செய்திகளுக்கு இருந்த மதிப்பெங்கே?
"ரேடியோவில் ஆறுமணி, ஏழுமணி பதினைந்து,
ஏழு நாற்பத்தைந்து ஒன்பதேகால், ஒன்பது
நாற்பத்தைந்து என்று சகல நியூஸ்களையும்
கேட்பது வருத்தத்திற்கு நேரத்திற்கு நேரம்
குளிசைகள் போடுவது போல ஒரு நாளாந்தக் கடமை"[78]

4.2 பெண்ணியம்

பெண்கள் சமூகத்தில் பல்வேறு நெருக்கடிகளுக்கு உட்படுத்தப்படுதல் தொடர்பாக ஆராயப்படும் செயற்பாடு பெண்ணியம் எனப்படும். பெண்கள் இரண்டாம் நிலை பாலினமாகக் கருதப்படுவதுடன், ஆண்களின் உடமையாகவும் கருதப்படுகின்றனர். இதனால் உடல்ரீதியாகவும். உளரீதியாகவும் பெண்கள் துன்புறுத்தல்களுக்குள்ளாகின்றனர். கீழைத்தேச நாடுகளில் மட்டுமன்றி, மேலைத்தேச நாடுகளிலும் இந்நிலை காணப்படுகிறது. பெண்கள் தொடர்பாக பல்வேறு அமைப்புக்கள் குரல்கொடுத்து வருகின்றன. சிறுகதைகள், நாவல்கள் என்பவற்றில் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை முன்வைத்து கதைகள் பின்னப் படுகின்றன. எமது நாட்டிலும் சீதனம், உடல்ரீதியான வன்முறைகள், புறக்கணிப்புக்கள், பெண்களின் தீர்மானம் எடுக்கும் உரிமை மறுக்கப்படுதல் என்பவற்றை சிதம்பர திருச்செந்திநாதன் தனது சிறுகதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

4.2.1 சீதனம்

சீதனம் என்பது திருமணத்தின்போது பெண்வீட்டாரால் ஆண்வீட்டாருக்கு வழங்கப்படும் ஒரு கொடையாகும். தமது பெண்ணின் வாழ்க்கைக்கும், பொருளாதார நிலைக்கும் வழங்கப்படும் ஒரு காப்புறுதி போன்றே அமைந்தது. இந்தச் சீதனம் பிற்காலத்தில் பெண்ணை விலைபேசுவதாகவோ அல்லது மணமகனை விலைபேசுவதாகவோ அமைந்தமையும், பொருளாதார வசதி குறைந்தவர்கள் வீடுகளில் உள்ள பெண்களின் திருமணம் தடைப்பட காரணமாகவும் அமைந்தமையால் சமூக ஆர்வலர்களால் சீதன வழக்கம் கொடுமையானதாக சித்திரிக்கப்படுகிறது. சிதம்பர திருச்செந்திநாதன் தனது சிறுகதைகளில் சீதனத்துக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கிறார்.

சீதனம் காரணமாக திருமணங்கள் தடைப்படல்

அதிகளவில் மணமகன் வீட்டார் சீதனத்தை எதிர்பார்த்து பொருத்தமாக இணையும் திருமணங்களில் தடைகளை ஏற்படுத்துவதை சேர்ந்தோம் வாழ்ந்தோம் என்ற சிறுகதையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

காசு ஒரு லட்சத்தையும் ஒருமிக்கத் தரட்டாம்.
முன்னர் ஒப்புக்கொண்ட மாதிரி ஐம்பது காசும்
மிகுதிக்கு பொறுப்பாய் காணியும் வேண்டாமாம்.[79]

ஒரு மணமகனுக்குப் பொருத்தமாக வரும் திருமணங்களை அதிக சீதனத்தை எதிர்பார்த்து திரும்பத் திரும்ப குழப்பி மீண்டும் திருமணம் பேசுவதை,

கல்யாணம் ஒன்று பேசி முற்றாகிப் போய்
பிறகு குழம்பிப்போச்சு.
ஏன்?
சீதனம்தான்.[80]

என விபரிக்கிறார். இதன் மூலம் திருமணம் தடைப்படவும், காலம் தாழ்த்தவும் சீதனம் காரணமாக அமைவதைக் காட்டுகிறார்.

பெண்களின் கவலை

தனக்குத் திருமணம் பேசி வரும்போது பெண்கள் அந்தத் திருமணம் எவ்வாறு நடைபெறப்போகிறது, சீதனப் பேச்சுக்கள் சரிவருமா என்ற கவலைகளை சேர்ந்தோம் வாழ்ந்திடுவோம் என்ற சிறுகதையில்,

சாதகம் பொருந்தி எல்லாம் முற்றாகி பிறகு
சீதனப் பிரச்சினையால் கலியாணத்தை குழப்பிய
அவரை எனக்கு முற்றாக்கி இருக்கினம்
முதல் குழம்பின மாதிரி எனக்கும் செய்தால்.[81]

ஆசிரியர் மேற்கண்டவாறு பதிவுசெய்கிறார்.

பெற்றோர் பணத்தைத் திரட்ட படும்பாட்டைப் பார்த்து பெண்கள் மனம் வருந்துவதை,

நேற்றைக்கு இடையில் ஐம்பதினாயிரம் புரட்டுவது என்பது
மந்திரத்தால் மாங்காய் விழுத்தும் செயலா?
ஏற்கனவே கொடுக்க ஒப்புக்கொண்ட காசையும் கடன்
பட்டுத்தான் சேர்த்திருந்தார்கள். பிறகு மீண்டும் காசு
கடன்படுவது என்றால்.[82]

என சேர்ந்தோம் வாழ்ந்திடுவோம் என்ற சிறுகதையில் எடுத்துக் காட்டுகிறார்.

சீதனத்தின் பொருட்டு அடிக்கடி திருமணத்தைக் குழப்புவர். எதிர்காலத்தில் எப்படி இருப்பார், அவருடன் மனத்தால் சேர்ந்து வாழமுடியுமா என்ற ஒரு பெண்ணின் கவலையை சேர்ந்தோம் வாழ்ந்திடுவோம் என்ற சிறுகதையில்,

இப்படி காசுக்குச் சண்டைப் பிடிப்பவர்களுடன் நாளைக்கு
எப்படி வாழ்க்கை நடத்துவது, உடம்புதான் பலவந்தத்தால்
அவர்களுடன் சேரும். மனம் சேருமா?[83]

எனக் காட்டுகிறார்.

தங்களிடம் கொடுக்கச் சீதனம் இல்லை. எனவே தமது எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதைப் பற்றிய ஒரு பெண்ணின் கவலையை தீர்வுகள் என்ற சிறுகதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

எங்களிட்டை கொடுக்கப் பெரிசாய் சீதனம் எண்டு
ஒண்டும் இல்லைத்தானே.[84]

பெற்றோர்கள் தமது திருமணத்தின் பொருட்டு வீடு, பணம் என்பவற்றைத் திரட்ட படும் கஷ்டத்தை எண்ணி வருந்தும் ஒரு பெண்ணை சமகாலம் சிறுகதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

சீதனம் கொடுப்பதற்காக ஈட்டிலிருந்த வீட்டையும்,
வளவையும் மீட்க அப்பா பட்ட கஸ்ரங்களைச்
சொல்லி அழுதாலும் தீராது. எப்படியோ மீட்ட
பின்னர் விதி இப்படி ஆகிவிட்டது. வீட்டைத் திருத்தி
பழைய நிலைக்குக் கொண்டு வந்து கல்யாணமும்
நடப்பதென்றால், இவற்றினைப் பற்றி யோசித்துத்தான்
நான் கவலைப்படுகிறேன்.[85]

சீதனத் தரகர்கள்

சீதனப் பிரச்சினை பெரிதாக வளர்வதற்கு பெற்றோரை விட சீதன தரகர்களே முக்கிய காரணம். அவர்கள் தமது வருமானத்திற்காக சீதனத்தைக் கூட்டி வாங்குவதில் கவனம் செலுத்துவதே சீதனப் பிரச்சினைக்குக் காரணம். இதனைக் காணிக்கு வேலி உண்டு சிறுகதையில்,

பத்தாயிரம் பதினையாயிரம் கொமிஷன் வாங்கும்
சீதன புறோக்கர்கள் நித்தமும் வந்து போய்க்கொண்டு
இருக்கிறார்கள்.[86]

எனக் குறிப்பிடுகிறார்.

பெற்றோரின் கவலைகள்

தமது பெண்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் ஒன்றைச் செய்து வைக்கப் பெற்றோர் ஆசைப்படுவது உலக வழக்கம். அவ்வாறே நல்ல குடும்பம், நல்ல தொழில் என்பன அமைந்தால்தான் பெண்ணின் வாழ்வு சிறப்பாக அமையும். ஆனால் இதற்குத் தடையாக சீதனம் இருப்பதைக் கண்டு தந்தை ஒருவர் வருந்துவாக சேர்ந்தோம் வாழ்ந்திடுவோம் என்ற சிறுகதையில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

> நந்தகுமாரின் தாய், தகப்பன், சகோதரங்கள், ஏன் அவர்கூட
> சீதனப் பிசாசுகள். என்ன செய்யிறது? எங்கட பிள்ளைக்கு
> நல்லதொரு வாழ்வு வேண்டும். ஒவ்வொரு முறையும் பேசின
> கலியாணங்கள் சரிவராமல் போச்சு, சீதனம்தான் கேட்கினம்.
> என்ன கஸ்ரப்பட்டும் செய்வம்.[87]

சீதனம் பற்றிய தாயின் விருப்பம்

பெண்களுக்கு சீதனம் கொடுக்கக் கஸ்ரப்படும் தாய் தந்தை தம் ஆண் பிள்ளையின் திருமணத்தில் சீதனம் வாங்க விரும்பும் உற்சாகத்தை காட்சி மாற்றம் என்னும் சிறுகதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

> வெளிநாட்டு மாப்பிளைமார் எல்லாம் யாழ்ப்பாணத்தில்
> சீதனவீடு கேட்கினம். இல்லை எல்லாரும் கொழும்பிலை
> தாராளமாய் வீடு வேண்டினம். உன்ரை விருப்பத்தை சொல்லு
> அப்படியே செய்யலாம்.[88]

வெளிநாட்டில் வாழும் மகனுக்குத் தாய் எழுதிய கடிதத்தில் இந்த விருப்பத்தை அவள் கேட்டதாகக் காட்டியுள்ளார்.

சகோதரர்கள்

ஒரு பெண்ணின் திருமணத்திற்காக பெற்றோர்கள் மட்டுமன்றி, உடன் பிறந்த சகோதரர்களும் கஸ்ரப்பட்டு உழைத்தார்கள். அதற்காகவே வெளிநாடு சென்றவர்களும் இருக்கிறார்கள். வீட்டிலுள்ள பெண் சகோதரிகள் தொடர்பாக பொறுப்புடன் செயற்படுவதையும், அது தொடர்பான சகோதரர்களின் கரிசனையையும் அகதிகள் முகாம் என்ற சிறுகதையில் பின்வருமாறு பதிவுசெய்கிறார்.

> யாழ்ப்பாண இளைஞர்கள் ஊர்தேசம் பார்க்க வெளிநாடு
> போவது குறைவு. கூடப்பிறந்த பெண் சகோதரங்கள்

மதிலுடன் கூடிய கல்வீடு வளவும், கழுத்தை மறைக்கும்
நகைகளுமாகப் புகுந்த வீட்டுக் கஸ்ரத்தைக் குறைக்கும்
புண்ணியவதிகளாக வாழவேண்டும் என்பதற்காகத்தான்
போய் உடலையும் உயிரையும் பணயம் வைத்து
உழைக்கிறார்கள்.[89]

4.2.2 குடும்ப வன்முறை

குடும்பங்களில் பெண்கள் உடலியல் ரீதியாகவும், வார்த்தைகளாலும் தாக்கப்பட்டு உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பல்வேறு பாதிப்புக்களுடன் வாழ்வது குடும்ப வன்முறை எனப்டும். மதுபோதை, மனவிகாரம் கொண்ட ஆண்களினால் மட்டுமன்றி, போலித்தனமும், பகட்டும் கொண்டவர்களாலும் குடும்ப வன்முறை நிகழ்வதை ஆசிரியர் தனது கதைகளில் காட்டுகிறார்.

பெண்கள் அதிக அளவில் வன்முறைகளுக்கு ஆளாவது மதுபோதையில் கணவன்மார் உள்ளபோதே. மதுபோதை தீர்ந்ததும் அவர்கள் தாம் தாக்கியதை மறந்து போவார்கள். என்ன செய்வது என கண்ணீரும் வாழ்க்கையும் வாழும் பெண்களை இருப்பு என்ற சிறுகதையில் இவ்வாறு காட்டுகிறார்.

கணபதிப்பிள்ளை உழைப்பதை குடித்தே தீர்த்துவிடும்
புண்ணியவான். கையில் காசு இல்லாதபோது கனகம்மாவை
காசுள்ள மரமாக நினைத்து செயற்படும் வீராதிவீரன்.
ஐந்து பிள்ளைகளுடன் மழையிலும் வெயிலிலும் போராடிக்
கொண்டு புருசனையும் சமாளிக்க வேண்டும்.
வழக்கம்போல கணபதிப்பிள்ளை கனகம்மா அடித்து
நொருக்கிவிட்டானா என கமலா நினைத்தாள்.[90]

ஒரு போலித்தனமான கணவனால் துன்புறுத்தப்படல்

போலித்தனம் என்பது தங்களைப் பெரியவர்களாக காட்டிக் கொள்ளும் மனிதர்களின் தரக்குறைவான செயல்களே ஆகும். வெளியிலும் அலுவலகத்திலும் தான் பெரிய மனிதன் எனக் காட்டிக்கொள்ளும் ஒருவன் வீட்டில் தன் மனைவியை துன்புறுத்துவதை முகமூடி மனிதர்கள் என்ற கதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

"போடி வெக்கம் கெட்ட கழுதை
நீயும் ஒரு பொம்பிளையோ?"

"ஏன் என்னைச் சித்திரவதை செய்யிறியள்"
"போடி பேசாமல் படார் என்ற சத்தத்துடன்
அந்த வார்த்தைகள் வந்தன"[91]

கணவன் எவ்வளவு மோசமாக நடத்தியபோதும், அவனிடம் அவன் மனைவி விசுவாசம் காட்டுவதையும், ஆனால் அவன் கருத்திலெடுக்காது துன்புறுத்துவதையும்,

"நீங்கள் என்னதான் சொன்னாலும் நான் ஒழுங்கான
பெண்சாதியாய்த்தான் இருப்பன்"
அப்ப நான் ஒழுங்கில்லாமலே இருக்கிறன். உனக்கு
அவ்வளவு வாய்க் கொழுப்பே? தொடாந்து பல
படார் படார்"[92] என விபரிக்கிறார்.

4.2.3 பெண்கள் மீதான தொந்தரவு

பெண்களைத் தனியே வீதிகளில் கண்டால் சிலர் வேண்டத்தகாத செயல்களைச் செய்வார்கள். அவர்களை உற்றுப்பார்த்தும், கிண்டலடித்துக் கேலிசெய்தும் தொந்தரவு செய்வதே வேலை வெட்டியில்லாத பலருக்கு நாளாந்தம் வேலையாகிப் போய் விடுவதை தனது காலம் கழிப்பமடி என்ற சிறுகதையில் கீழ்வருமாறு வெளிப்படுத்துகிறார்.

காமப்பார்வை பார்க்கும் அவர்களை எப்படிச் சொல்லலாம்
அதுகள் என்றா?
அதுகள் பார்வையாலே கற்பழிக்க முனையும்.
வேகங்களுடன் கடைவாசலிலே தம் அடித்துக்
கொண்டு காரணமில்லாமல் சிரித்துக் கொண்டு
போகும் பெண்களின் இடுப்புச் சேலை அவிழ்ந்து
விழாதா? அல்லது சிலுக்கு, அனுராதா மாதிரி
கடை வாசலில் நின்று ஆடமாட்டார்கள் என்றா?
பார்க்கிறார்கள்.[93]

அதேபோல சமகாலம் என்ற கதையில் சந்திக் கடையடியில் நின்றவர்களைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

சந்திக்கடையடியில் நின்ற கும்பல் ஒன்று சிகரெட்டுக்களைப்
புகைத்துக் கொண்டு எங்களைப் பார்த்து என்னவோ கூறிச்
சிரித்தார்கள் சந்திரா பதில் சொல்ல முனைந்தாள்.[94]

பஸ்ஸில் போகும்போது பெண்கள் மீதான தொந்தரவை காலம் கழிப்பமடி சிறுகதையில்,

நல்லவேளை நடந்து போகிற தூரத்தில் கல்லூரி இருப்பது
இல்லாவிட்டால் முன்னுக்கும் பின்னுக்கும் நிற்பவரின்
துணையோடு மினிபஸ்ஸில் கைபிடிக்காமல் நிற்கவேண்டும்.[95]

எனக் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு பார்வையாலும், செயல்களாலும் பெண்கள் அனுபவிக்கும் இடையூறுகள் இச் சிறுகதைகளில் விளக்கப்படுகிறது.

4.2.4 பெண்களின் கருத்துக்கள் கவனிக்கப்படாமை

திருமணம் என்பது இரு மனங்களின் இணைவு என்று கூறுவர். ஆனால் திருமணம் பற்றி பெண்கள் என்ன நினைக்கிறார்கள், அவர்கள் தமது மணவாளன் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று எதுவும் கேட்கப்படுவதில்லை. அவர்கள் மீது பெற்றோர்களாலும், சகோதரர்களாலும் திருமணங்கள் திணிக்கப்படுகின்றன. காலம் கழிப்பமடி சிறுகதையில் கீழுள்ளவாறு காட்டுகிறார்.

"வேண்டாம் உன்ரை கதை.
தம்பி முடிவாய் கடிதம் எழுதியிருக்கிறான்.
ஒரு பெடியன் இஞ்சை என்டு. யாழ்ப்பாணம் வரேல்லை
கொழும்புக்கு வாறானாம். இரண்டு கிழமை கொழும்பிலை
நிற்பானாம்"
அதுக்கு,
"நாங்கள் இஞ்சை இருந்து கொழும்பு போக வேணும்"
"போய்"
போய் உன்ரை கலியாணத்தை அங்கை முடிக்கிறது.[97]

இவ்வாறுதான் ஒரு பெண்ணுக்கு கணவன் அறிமுகம் செய்து வைக்கப் படுகிறான். அவளது கதைகள் கேட்கப்படுவதில்லை. அவ்வாறே பெண்கள் சமுதாயத்தில் எத்தனை விடயங்களுக்குப் பயந்து வாழவேண்டியுள்ளது என்பதை சேர்ந்தோம் வாழ்ந்திடுவோம் என்ற சிறுகதையில்,

பெண்கள் சமுதாயத்துக்குப் பயப்படவேண்டியிருக்கிறது.
தெருவில், வெளியில் குறைகேட்காமல் வாழ. தெரிந்தவர்களைக்

கூட பார்த்துச் சிரிக்காமல் ஐயாவுக்குப் பயந்து, அம்மாவுக்குப்
பணிந்து, அண்ணை தம்பிக்கு தலைகுனிந்து, வெளியுலக
பூனைகளை ஒத்த பெண்களை, வம்புகள் செய்யும்
ஆண்களுக்கிடையில் தப்பி நல்ல பெயர் காவி.[7]

பெண்கள் ஒவ்வொரு விடயங்களிலும் அச்சத்துடன் செயற்பட வேண்டியுள்ளதைக் காட்டுகிறார்.

4.2.5 திணிப்புக்களைப் பெண் எதிர்த்தல்

தான் விரும்பாத ஒரு திருமணம் தன் பெற்றோரால் நிர்ப்பந்தம் செய்யப் படும்போது கல்வியறிவும், தொழில் காரணமாக வருமான பலமும் உள்ள ஒரு பெண் அதனை எதிர்க்க முடியும் என்பதையும், தனது கருத்தை சமூகத்திலும், குடும்பத்திலும் சுதந்திரமாக வெளிப்படுத்த முடியும் என்பதையும் பின்வருமாறு காட்டுகிறார்.

வாறவன் விசரனாக இருந்தாலும் பறவாயில்லை,
வேலையில்லாட்டியும் எனக்கு ஒண்டுமில்லை.
இஞ்சை வந்து இந்த ஊரிலை என்னேடை குடும்பம்
நடத்துவன் எண்டால் நான் சம்மதம் இல்லை
என்னை என்ன செய்தாலும் சம்மதிக்கமாட்டன்.[98]

4.2.6 பொறுப்பான குடும்பப் பெண்கள்

தங்கள் வாழ்க்கைத் துணைவன் நல்லவனாக இல்லாதபோதும், குடும்ப முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு எந்தவேளையிலும் தமது கஸ்டங்களைப் போக்கும் முயற்சியிலும், உழைப்பிலும், பிள்ளைகள் முன்னேற்றத்திலும் கவனமாக இருக்கும் பெண்களைப் பொறுப்பான குடும்பப் பெண்கள் எனலாம். இவ்வாறான குடும்பப் பெண்ணாக என்னுடையதும் அம்மாவினுடையதும் சிறுகதையில் வரும் அம்மா ஒரு மகனின் பார்வையாக ஆசிரியரால் சித்திரிக்கப்படுகிறாள்.

அரிசி இடிக்க, மிளகாய் இடிக்க, நெல்லுக்குத்த அம்மா
போன காலத்தில் சின்ன வயதில் அம்மாவுடன் துணைக்குப்
போயிருக்கிறேன். அப்போதும் அம்மாவின் தலையில் கடகம்
இருக்கும்......
மூச்சிழுக்க மூச்சிழுக்க அவள் தன்னையே உலக்கையாக்கி
இடித்து இடித்து உள்ளங்கைகள் காய்த்துக் கன்றி அவை
வரலாறாகப் போய்விட்டன.[99]

இவ்வாறே பொறுப்புள்ள குடும்பப் பெண்ணாக இருப்பு என்ற சிறுகதையில் கனகம்மா சித்திரிக்கப்படுகிறாள்.

பெரிசும் சிறுசுமாக உள்ள ஐந்து பிள்ளைகளுடன்
மழையுடனும் வெய்யிலுடனும் போராடிக் கொண்டு
புருசனையும் சமாளிக்க வேண்டும்.[100]

என கனகம்மா குடும்பப் பொறுப்புடன் நடந்து கொள்வதைக் காட்டுகிறார்.

அன்புள்ள அப்பா என்ற சிறுகதையில் வரும் பாக்கியம் கணவன் மீது கொண்ட அக்கறையையும் பொறுப்பையும் பின்வருமாறு காட்டுகிறார்.

பாக்கியம் இருக்கும் வரை அவர் உடல்நிலை, மனநிலை
அறிந்து செயற்பட்டதால் நன்று. அவள் எந்தவேலையில்
இருந்தாலும் பத்துமணி பால் தேநீரை கந்தையர் இருக்கும்
இடத்துக்குக் கொண்டு வந்து விடுவாள்.
இரண்டு கோப்பையில் வரும்.[101]

இவ்வாறு குடும்பப் பொறுப்புடன் கணவன், பிள்ளைகள், குடும்பம் என்ற அக்கறையுடன் செயற்படும் பெண்கள் காட்டப்பட்டுள்ளனர்.

4.2.7 பெண்கள் ஏமாற்றப்படுதல்

திருமணம் செய்வதாகக் கூறி, காதலித்த பெண்களை சந்தர்ப்பம் வரும் போது கைவிட்டு, பின்னர் தமக்கு வசதியாக வாய்க்கும் பெண்ணைத் திருமணம் செய்து, மனதில் பழைய காதலையும் நினைத்து, இரண்டுங் கெட்டான் வாழ்க்கை வாழ்பவர்கள் உண்டு. அவ்வாறான ஒரு சிறுகதையாக தீர்வுகள் என்ற கதை அமைந்துள்ளது. அதில் தான் காதலித்த கோமதி என்ற பெண்ணை கைவிட்டு வெளிநாடு போகும் காதலனைக் காட்டுகிறார்.

நான் விரும்புகிற ஆளோடை இலட்சிய வாழ்க்கை வாழ
வேணும் என்று விரும்பிறன், என்னை முழுமையாய் புரிந்து
கொள்ளுவியள் எண்டு நம்புறன் எண்டு சொல்லி பெருமூச்சு
ஒன்றை விட்டாள். அதுதான் கோமதியை சந்தித்த கடைசிநாள்.
அதற்கு அடுத்த மாதமே திடுமென வெளிநாட்டுப் பயணம்
சரிப்பட்டுவர அவன் வந்து சேர்ந்துவிட்டான்.[102]

அந்நிய தேசத்துப் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து தன் காரியங்களை வெற்றி கண்டபோதும், பழைய காதல் நினைவுகளில் மூழ்கிக் கிடந்து கவலைப்படும்

அவனை நினைத்து வருந்தும் மேல்நாட்டுப் பெண்ணை அதே சிறுகதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

> உங்கடை நாட்டிலை திரும்பவும் பிரச்சினையா?
> உங்கடை குடும்ப ஆட்கள் உங்கடை தம்பியோடை
> திரும்பவும் கனடா போட்டினம்தானே? பிறகென்ன
> யோசனை?[103]

ஆண்கள் தங்கள் சுயநலங்களுக்காக வெளிநாட்டுப் பெண்களையும், உள்நாட்டுப் பெண்களையும் ஏமாற்றுவதை தீர்வுகள் என்ற சிறுகதை விளக்குகிறது.

4.2.8 பொறுப்பற்றவர்களாக நடக்கும் பெண்கள்

குடும்பம் பற்றியோ, கணவன் பற்றியோ அக்கறையின்றி நாளாந்தம் தமது மகிழ்ச்சியான பொழுதுபோக்கை மட்டுமே கவனம் செலுத்துவதுடன், பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியும் அக்கறையின்றி செயற்படுபவர்கள் பொறுப்பற்ற பெண்களாவர். அவர்கள் கணவனில் அக்கறையின்றிச் செயற்படுவதை குறைவிருத்தி நாடு என்ற சிறுகதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

> "எப்போதாவது நல்ல மனம் வந்தால் பொன்னம்மா
> காலைத் தேத்தண்ணி கொடுப்பாள். அனேகமாக அவர்
> அவள் படுத்திருக்கும் அறை வாசலில் நின்று போட்டு
> வாறன் என்று சொல்லிவிட்டுப் போனால் மாலை ஆறு
> மணிக்குத்தான் திரும்பக் காணலாம்.[104]

தன் பிள்ளைகளில் அக்கறையற்றவளாகவும், அவர்களுக்குத் தவறான வழிகளைக் காட்டக் கூடியவளாகக்கூட அவள் இருப்பதை அதே கதையில் பின்வருமாறு வெளிப்படுத்துகிறார்.

> வடிவான என்ரை பெட்டையளை நாஞ்சிக் கொண்டுபோக
> மன்னன்கள் வருவான்கள். அந்த நம்பிக்கைக்கு தெம்பூட்டுவது
> போல கிட்டிலை வாத்திவேலைக்கு எடுபட்ட கணநாதனும்,
> சந்தியிலை கடை வச்சிருக்கிற கந்தமூர்த்தியும் மாதிரியான
> பெடியள். இவர்களைக் கண்டவுடன் படும் பாட்டிலிருந்து

தெரியலாம். நல்லூர்த் திருவிழாவுக்குக் கண்டவுடன்
வாங்கோ வாங்கோ என்று கூட்டிக்கொண்டு போய்
ஐஸ்கிறீமும் வாங்கிக் கொடுத்து சந்தோஷப்பட்டது
கந்தமூர்த்தியும் கணநாதனும்தான்.[105]

இவ்வாறு பொன்னம்மா தனது பிள்ளைகளை யாரோ ஒருவனுக்குக் கட்டிக்கொடுக்கத் தயாராக இருக்கிறாள்.

4.3 புலம்பெயர்வு

புலம்பெயர்வு என்பது மக்கள் தமது தாய்நாட்டை விட்டுப் பிரிந்து வேறு நாடுகளுக்குச் சென்றமையாகும். முதலில் இளைஞர்களே உயிரச்சம் காரணமாகவும், உள்நாட்டில் பொருளாதார நடவடிக்கைகள் கேள்விக்குறியானமையாலும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் சென்றனர். இளைஞர்கள் மட்டுமன்றி, பிற்காலத்தில் யுவதிகளும் மணப்பெண்களாக மேலே கூறிய நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தனர். இதனால் புலம்பெயர் நாடுகளான கனடா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் குறிப்பிட்ட தொகை ஈழத்தமிழர்கள் வாழ்வதுடன், தமிழ்க் கலாசாரமும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதனை பல்கலாசாரத்தன்மை வாய்ந்த கனடா நாடு அங்கீகாரமளித்து ஏற்றுக்கொண்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளிலும் அவுஸ்திரேலியாவிலும் தமிழர்கள் அந்நாட்டுப் பிரைசகளைாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். புலம்பெயர்வு பற்றிய பல்வேறு செய்திகளைத் தனது சிறுகதையில் சிதம்பர திருச்செந்திநாதன் படைத்துள்ளார்.

4.3.1 புலம்பெயர்வுக்கான காரணங்கள்

புலம்பெயர்வுக்கு போரும், பொருளாதாரத் தேவைகளுமே காரணமாக அமைந்தன எனலாம். போர்க்காலத்தில் கைது, காணாமல் போதல், கடத்தப்படல், விசாரணை, படைகளுக்கு துணைப்படைகளுக்கு ஆட்சேர்த்தல் போன்ற நடவடிக்கைகள் புலம் பெயர்வுக்கான காரணங்களாக அமைந்தன. பொருளாதார வளம் கருதியும் மக்கள் புலம் பெயர்ந்தனர்.

போர் காரணமான புலம்பெயர்வு

போர்க்காலம் இளைஞர்களுக்கு ஆபத்து மிக்கதாகவும், அவர்களது உயிருக்கு ஆபத்தானதாகவும் மாறியது. இதனால் நாட்டில் தொடர்ந்து வாழ்க்கை நடத்துவது கடினமானது

என உணர்ந்து இளைஞர்கள் புலம்பெயர்ந்தமையை அகதி முகாம் என்ற சிறுகதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

ஒவ்வொரு நாளும் சொந்த மண்ணில், கிராமத்தில், தெருவில்
உயிரை விடும் துர்ப்பாக்கியம் அதிகரிக்க அதிகரிக்க இருக்கும்
சொத்துக்களை அரைகுறைக்கு விற்றுக்கொண்டு குடும்பம்
குடும்பமாக எல்லோரும் இடம்பெயர்கையில்......[106]

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நிர்ப்பந்தித்து அனுப்புதல்

தங்கள் பிள்ளைகள் தங்களோடு வாழ விரும்புவதை ஏற்றுக்கொண்டாலும், உயிரச்சம் காரணமாக தமது காணிகளை விற்று, சொத்துக்களை அடைமானம் வைத்து பிள்ளைகளை வெளிநாடு அனுப்புவதை அகதிமுகாம் என்ற கதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

வெளிநாடு போய் நிம்மதிதான் இல்லாவிட்டாலும்
உயிராவது மிஞ்சும். அப்பு, ராசா நாங்கள்
சொல்லுவதை கேள். தோட்டக் காணியில்
கொஞ்சத்தை வித்துப்போட்டு காசு தாறம்.
நீ எவ்வளவு கெதியா போக முடியுமோ, போய்ச்சேர்.[107]

தமது பிள்ளைகள் போரில் இணைந்துகொள்ளப் போகிறான் என்ற அச்சத்தில் மகனைப் பெற்றோர் வெளிநாட்டுக்கு அனுப்பினர். காணிக்கு வேலியுண்டு என்ற கதையில்

அவனைத் தேடி ஒளிபொருந்திய விழிகளை உடைய
சில இளைஞர்கள் வந்தார்கள். இளைஞர் சக்தி வேகம்
பெற்றுக்கொண்டிருந்த நேரமது. கணபதிப்பிள்ளையும்
தங்கமாகவும் துல்லியமாக இனங் கண்டு கொண்டனர்....
(மகனின் மாற்றத்தை) லண்டனில் உள்ள பிள்ளைகளுடன்
போனில் கதைத்தனர். விளைவு இரண்டொரு மாதங்களில்
மகனின் மனம் மாற்றப்பட்டு லண்டன் அனுப்பி வைக்கப்பட்டான்.[108]

இவ்வாறு பதிவுசெய்துள்ளார். போராளிகளாவதைத் தடுத்து பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்புவதில் பெற்றோர்கள் அக்கறை செலுத்தியதை இது வெளிப்படுத்துகிறது.

பொருளாதார நலன்களுக்காக புலம்பெயர்தல்

புலம்பெயர்வுக்கு போர் ஒருபுறம் காரணமாக அமைந்தது எனினும், தமது சகோதரிகளின் திருமணத்திற்கு சீதனம் திரட்டுவது என்ற பொருளாதார நலன் மறுபுறம்

அமைந்தது என்பதை அகதிமுகாம் சிறுகதை பின்வருமாறு விளக்குகிறது.

> யாழ்ப்பாணத்து இளைஞர்கள் ஊர் தேசம் பார்க்க வெளிநாடு போவது குறைவு. கூடப்பிறந்த பெண் சகோதரங்கள் மதிலுடன் கூடிய கல்வீடு வளவும், கழுத்தை மறைக்கும் நகைகளுமாக புகுந்த வீட்டு கஸ்டங்களைக் குறைக்கும் புண்ணியவதிகளாக வாழவேண்டும் என்பதற்காக போய் உயிரையும் உடலையும் பணயம் வைத்து உழைக்கிறார்கள்.[109]

4.3.2 புலம் பெயர்வால் ஏற்பட்ட மாற்றங்கள்

புலம்பெயர்ந்த பிள்ளைகளின் வருமானத்தை நம்பியிருத்தல், புலம்பெயர்வு போர்க்கால வாழ்வில் பொருளாதாரங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் பெற்றோர்களுக்கும், சகோதரர்களுக்கும் வாழ்வாதரத்தை மேம்படுத்த உதவியது. உள்ளூர் பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதால் புலம்பெயர்ந்து வாழும் பிள்ளைகளின் உழைப்பே வருமான வழியாக அமைந்தது.

> தெரிஞ்ச யாரையாவது பிடிச்சு சின்னதாய்த் தன்னும் ஒரு வேலை எடுத்துப்போடு. உன்ரை சீவியத்துக்காகச் சொல்லேல்லை, எங்கடை சீவியத்துக்கும் உதவும். இனிமேல் தோட்டம் செய்து நாங்கள் நல்லாய் வருவம் எண்ட நம்பிக்கை எனக்கில்லை.[110]

ஆடம்பரமான வாழ்க்கை

சிக்கனமாக வாழ்ந்த மக்கள் வாழ்வில் ஆடம்பரப் பொருட்கள் இடம்பிடிக்க ஆரம்பித்தன. இதற்கு வெளிநாட்டிலிருந்து வந்த பணவரவு பிரதான காரணமாக அமைந்தது. இதனை குறைவிருத்தி நாடு என்ற சிறுகதையில்,

> இப்பதான் வீட்டுக்கு பெயின்ட் பண்ணியிருக்கிறம் முதல் இருந்த கலர் தம்பிக்கு பிடிக்கேல்லை. அதுதான் அடிச்சனாங்கள்.
> வெளிநாட்டுத் தொடர்புள்ள அனேகம்பேரின் வீடுகளில் இருக்கவேண்டிய அத்தனையும் இருந்தன.[111]

இவ்வாறு வெளிப்படுத்துகிறார்.

குடும்ப வாழ்க்கை பாதிப்பு

வெளிநாடுகளில் உள்ள மணமகனைத் திருமணம் செய்யும் பெண்கள் குறிப்பிட்ட காலத்தில் அவர்களைச் சென்றடையாமை காரணமாக குடும்ப வாழ்க்கை

கேள்விக்குறியானது. வெளிநாட்டிலுள்ள கணவனின் கடிதங்களுடன் அவர்களது திருமண வாழ்வு கண்ணீர் நிறைந்ததாக அமைந்தது.

> மாதாமாதம் வரும் கடிதம் மட்டும் காதல்மொழி பேசும்,
> பிரிவுத்துயரில் அழும். அது மனதில் முடங்கிப்போய்
> இருக்கும் உணர்வுகளை சிலிர்க்கச் செய்யும். சிலவேளை
> கடிதங்களைக் கிழித்தெறியும் அளவுக்கு ஆத்திரம் வரும்.[112]

காதல் வாழ்க்கை முறிவடைதல்

புலம்பெயர்வு காரணமாக காதலர்கள் பிரிந்தார்கள். இப்பிரிவு நிரந்தரமாகவே அவர்களது காதலை முடிவுக்குக் கொண்டுவந்தது. இலட்சிய வாழ்வு வாழ ஆசைப்பட்ட பெண் ஒருத்தியின் காதல் புலம்பெயர்வால் முறிவடைய அவள் ஏமாற்றப்படுவதையும், வெளிநாட்டில் திருமணம் செய்த அவன் கோமதி என்ற தன் முதல் காதலியை நினைத்துக் கலங்குவதையும் தீர்வுகள் என்ற சிறுகதை விளக்குகிறது. காதல் வாழ்வு முறிவடைந்த விதத்தை ஆசிரியர் பின்வருமாறு காட்டுகிறார்.

> நான் விரும்பிற ஆளோடை இலட்சிய வாழ்வு வாழவேணுமெண்டு
> விரும்பிறன். என்னை முழுமையாய்ப் புரிந்து கொள்ளுவியள்
> எண்டு சொல்லி முடித்து பெருமூச்சு ஒன்றை விட்டாள்.
> அன்றுதான் அவன் கோமதியை சந்தித்த கடைசி நாள்.
> அதற்கு அடுத்த மாதமே வெளிநாட்டுப் பயணம் சரிப்பட்டு
> வர அவன் வந்து சேர்ந்துவிட்டான்.[113]

4.3.3 புலம்பெயர்வும் சமூகச் சீர்கேடுகள்

வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்து சென்று, தம் குடும்பங்களைப் பிரிந்து வாழ்வதாலும், தனிமையில் காணப்படுவதாலும் அவர்களின் பழக்கவழக்கங்கள் சீர்கெடுகின்றன. மதுப்பாவனையும் பெண்களின் மோகமும் அவர்களைச் சீரழிப்பதை பின்வருமாறு கூறுகிறார்.

> அவன் பியர் குடித்தான் அவனுக்குப் போதை ஏறுவதை
> அவள் வேடிக்கை பார்த்தாள்.
> அவளது நெருக்கமும் தாபமும் ஒன்று சேர்ந்தபோது
> அவன் நிலைகுலைந்து போனான். அவள் வேகமாக
> அவனை வெல்ல வைத்தாள் தன் வேகங்களுக்கெல்லாம்
> ஈடுகொடுக்கச் செய்து மெய்மறந்தான்.[114]

செய்யும் தவறுகளுக்காக மனச்சாட்சி ஒருவரைத் துன்புறுத்துவதையும், அதற்காக அவர் தன் மனத்திற்குக் கூறும் ஆறுதலையும் அக உணர்வாக பின்வருமாறு பதிவுசெய்கிறார்.

> ஏன் தேவையில்லாமல் மனதைக் குழப்புவான் என்று
> நினைத்துக் கொண்டான். எத்தனை ஆயிரம் கிலோ
> மீற்றருக்கு அப்பால் அந்நிய தேசத்தில் முகம் தெரியாத
> மனிதர்கள் முன்னால் செய்யும் தவறுகளுக்கு என்ன பயம்?[115]

கணவன் மனைவி அதுவும் திருமணமான இளம் தம்பதிகள் பிரிந்து வாழ்வது கொடுமையானது. அவர்களின் தவிப்பும் தாபமும் தவறுகள் நடக்க வழிகோலுகின்றன என்பதை இருப்பு என்ற சிறுகதையில்,

> பிரமாண்டமான வீடு, தேவையான வசதிகள்........ இல்லாதது கணவன்தான் சட்டென்று எல்லாமே சூனியமாகிவிட்டது போன்ற பிரமை, அந்தரிக்கும் மன உணர்வுகள். எந்த அலுவலுக்கும் கணேசன் உதவியை நாடவேண்டி இருந்தது.... ரவுணுக்குப் போய் வரும்போது பேய் மழை பெய்து கொண்டிருந்தது. வெடவெடக்கும் குளிர் வேறு, கணேசனும் பக்கத்தில்தான் அமர்ந்தான். ஊதல் காற்று ஊசியாக உடலை இணைத்தது... அவன் பாவித்திருந்த பெவியூம் அவள் பாவித்த பெவியூமை விட அட்டகாசமாக மணத்தது ஒருவித மயக்கத்தை ஏற்படுத்தியது. என்ன மாதிரி இருவரும் நெருங்கி அமர்ந்து கொண்டார்கள் என்பதை அவளால் உணரமுடியவில்லை. அவன், அவள் காதுகளுக்குள் எதையோ சொல்ல முனைந்தான்.... சட்டென்று அவள் சுயநினைவுக்கு வந்தாள்.[116]

இவ்வாறு புலம்பெயர்வு தவறுகள், ஒழுக்கக் கேடுகள் நடக்கச் சந்தர்ப்பம் வழங்குவதை இருப்பு என்ற சிறுகதையில் பதிவுசெய்கிறார்.

4.4 சமூகப் போலித்தனங்கள்

சமூகத்தின் உண்மைக்குப் புறம்பான செயற்பாடுளைச் செய்துகொண்டு, வெளியே நல்வர்களாகவும், பெரியவர்களாகவும் தம்மைக் காட்டிக்கொள்வதே சமூகப் போலித்தனங்களாகும். இவ்வாறான சமூகப் போலித்தனங்கள் அலுவலகங்களிலும், வியாபார நிலையங்களிலும் அதிகளவில் காணப்படுவதை தனது கதைகளில் காட்டுகிறார்.

4.4.1 அலுவலகங்களில் போலித்தனம்

அலுவலகங்களில் அதிகாரிகளாக இருந்து கொண்டு, மாதாமாதம் பொது மக்களின் வரிப்பணத்தில் அரச ஊதியம் பெற்றுக்கொண்டு அப்பாவிப் பொதுமக்களை

ஏமாற்றும் அரச ஊழியர்களை தனது என்றும் தங்கள் நினைவில் வாழும் என்ற கதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

> எடுக்கிற சம்பளத்திற்கு வேலை செய்யிற மாதிரி காட்டிக் கொண்டால் காணும். பெரிசாய் முதுகு முறிய வேணும் எண்டு ஆரும் நினைக்கக்கூடாது என்ற கனகசபை.[117]

> ஆணும் பெண்ணுமாக இரண்டு பேர் வந்து நின்றார்கள். சிறிது நேரம் அவர்கள் எதிரே நிற்பதைக் கவனிக்காமல் தீவிரமாக வேலைசெய்வது போல பாவனை செய்தார்.

இவ்வாறான மோசமான அதிகாரிகளின் அலுவலகங்கள் எவ்வாறு இருந்தன என்பதை அதே கதையில்,

> மேசை தலைகீழாக இருந்தது. பதிவுப் புத்தகங்கள் சிதறுண்டுபோய் இருந்தன. பக்கத்து ராக்கையில் பைல்கள் ஒழுங்காக இருக்கவில்லை. மேசையிலே தீக்குச்சிகளும் தேநீர்க் கிளாசுகளும்.[118]

இவ்வாறு அதிகாரிகள் மோசமாகச் செயற்படுவதை தனது கதைகளில் காட்டுகிறார்.

4.4.2 வியாபார நிலையங்களில் போலித்தனங்கள்

வியாபார நிலையங்களில் பொருட்களைப் பதுக்கி வைத்தும், செயற்கைத் தட்டுப்பாடுகளை ஏற்படுத்தியும், மக்களுக்குப் பொருட்களை ஏமாற்றி விற்பனை செய்தும் பல்வேறு போலித்தனங்களை மேற்கொள்வர். இவ்வாறான பதுக்கல் செயற்பாடு ஒன்றை தனது கோஷமும் வேஷமும் என்ற சிறுகதையில் பின்வருமாறு பதிவுசெய்கிறார்.

> என்ன அரை லோட் தானே என்னப்பா? இப்ப அதுக்குத்தானே மார்க்கட். வாறகிழமை அது விலை ஏறப்போவதாகக் கேள்வி, ஓமோம், நான் பெலத்துக் கதைக்கேல்லை இப்ப கடையிலை ஆட்கள் இல்லை. அதுசரி விஷயத்துக்கு வா. அரை லோட் காணாது, எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் அனுப்பு, நாள் போகப்போக எல்லாம் பிரச்சனையாகப் போகும். இப்ப ஸ்ரொக் பண்ணினால்தான் பிறகு எல்லாம் சரியாய் முடியும்.[119]

பதுக்கல் நடவடிக்கை ஒன்றை தொலைபேசி உரையாடல் மூலம் வெளிப்படுத்துகிறார்.

கடையில் இருக்கும்போது யாராவது உதவிகேட்டு வந்தால், வியாபார நிறுவனங்களின் உரிமையாளர் மனேச்சர் போல மாறி தந்திரமாக அவர்களை அனுப்பி விடுவதை அதே கதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

"முதலாளி இல்லை. அவர் இல்லாமல் நாங்கள் ஒன்றும்
செய்ய முடியாது. அவர் கட்டாயம் உதவி செய்வார்.
உதவி செய்ய அவருக்குப் பிடிக்கும்" என்றார் சுந்தரம்.[120]

இவ்வாறு மிகவும் மோசமான ஈயாத குணமுள்ள முதலாளி பின்னர் நல்ல மனிதனாக மேடைகளில் கமராக்களுக்கு முன்னால் செயற்படுவதை,

இப்போது எமக்கு பிரசங்கம் மூலம் இனிய கருத்துக்களைச்
சொன்ன திருவாளர்..... அவர்களுக்கு பிரபல வர்த்தகர், கொடை
வள்ளல் சுந்தரம் அவர்கள் கதாப்பிரசங்க மாமேதை என்ற
பட்டத்தை வழங்கி, அன்பளிப்புச் செய்து, பொன்னாடை போர்த்தி
கௌரவிப்பார். கமராக்கள் படமெடுக்க ஆரம்பித்தன.[121]

என விபரிக்கிறார்.

4.5 முதியோர் பிரச்சினை

வயது முதிர்ந்தோர் பிள்ளைகளால் கவனிக்கப்படாது விடப்படுதல் அல்லது வேண்டா வெறுப்பாக நடத்தப்படல் முதியோர் பிரச்சினை ஆகும். பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பான பல்வேறு கனவுகளுடன் ஓடியாடி, கஷ்டப்பட்டு உழைத்த பெற்றோர் பிள்ளைகளால் புறக்கணிக்கப்படுவதை அன்புள்ள அப்பா என்ற சிறுகதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

தந்தை மீதான மகனின் கட்டுப்பாடுகள், ஏச்சுக்கள்.
அப்பா நெடுக ரீ.வீயோடை இராதேங்கோ, அதுக்கும்
ஆறுதல் வேணும் தானே.
நாங்கள் விடிய வெள்ளன எந்தளவு அந்தரத்திலை
நிக்கிறம், நீங்கள் பொழுது போகாமல்
விளையாடுறீங்கள்.[122]

மருமகளின் ஏச்சுக்கள்

வயது முதிர்ந்தவர் என்பதைக்கூட கவனிக்காமல் தனது கணவனின் தந்தையை ஏசுவதை,

உந்த மனிசன் எங்களை மானம் கெடுக்கமால்
இருக்கமாட்டுது.
இஞ்சையப்பா மத்தியானம் வச்சிட்டுப்போன
சாப்பாடு அப்பிடியே கிடக்குது....
இந்த மனிசன் எங்கைபோய் ஆரிட்டை
நக்கிப்போட்டு வருது. உந்த மனிசன்
எங்களை மானம் கெடுக்கமால் இருக்க
இருக்க மாட்டுது.[123]

என விபரிக்கிறார்.

முதியோர் மனவருத்தம்

தாம் எவ்வாறு வாழ்ந்தோம், பிள்ளைகளின் முன்னேற்றத்துக்காக எவ்வாறு செயற்பட்டோம், பிள்ளைகள் தம்மைப் புறக்கணிக்கிறார்களே என்ற வருத்தத்தில் பெற்றோர் கலங்குகின்றனர். இந்த மனவருத்தத்தைப் பின்வருமாறு காட்டுகின்றார்.

இவர்கள் வீட்டில் ஒரு நாய் கூட இல்லை.
தான் இல்லாவிட்டால் சிலவேளை நாய்
வளர்க்கப்படலாம்.[124]

இன்று முதியோர் பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்ட விரக்தி நிலையில் வாழ்கின்றனர். பலர் பிள்ளைகளால் ஒதுக்கப்பட்டு முதியோர் இல்லங்களில் வாழ்கின்றனர்.

அடிக்குறிப்பு

01. சிவத்தம்பி.கா., இலக்கியமும் கருத்துநிலையும், தமிழ்ப் புத்தகாலயம், திருவல்லிக்கேணி, சென்னை, 2002, ப.25
02. திருச்செந்திநாதன்.சிதம்பர.இணுவை., மணல்வெளி அரங்கு, சவுத் ஏசியன் புக்ஸ், வசந்தம் பிரைவேட் லிமிட்டெட், கொழும்பு 11, 2002, ப.17
03. மேலது, ப.18
04. திருச்செந்திநாதன்.சிதம்பர., என்னுடையதும் அம்மாவினுடையதும், சூர்யா அச்சகம், சென்னை, 1995, ப.121
05. மணல்வெளி அரங்கு, ப.19
06. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.119
07. மணல்வெளி அரங்கு, ப.21
08. மேலது, ப.23
09. திருச்செந்திநாதன்.சிதம்பர., வெட்டுமுகம், சூர்யா அச்சகம், சென்னை, 1993, ப.122
10. மேலது, ப.122
11. மேலது, ப.123
12. மணல்வெளி அரங்கு, ப.25
13. மேலது, ப.25
14. மேலது, ப.24
15. மேலது, ப.20
16. மேலது, ப.26
17. மேலது, ப.28
19. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.118
20. மணல்வெளி அரங்கு, ப.25
21. திருச்செந்திநாதன்.சிதம்பர., ரமணா, சூரியகாந்தி, உதயன் பிரைவேட் லிமிட்டெட், 20 டிசம்பர் 2015, ப.10
22. மேலது, ப.10
23. வெட்டுமுகம், ப.23
24. மணல்வெளி அரங்கு, ப.27
25. வெட்டுமுகம், ப.127
26. மேலது, ப.123
27. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.30
28. மேலது, ப.31
29. மேலது, ப.87

30. மணல்வெளி அரங்கு, ப.20

31. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.143

32. மேலது, ப.72

33. மேலது, ப.72

34. வெட்டுமுகம், ப.127

35. மேலது, ப.129

36. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.72

37. மேலது, ப.48

38. மேலது, ப.38

39. மணல்வெளி அரங்கு, ப.18

40. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.40

41. மேலது, ப.116

42. மணல்வெளி அரங்கு, ப.67

43. மேலது, ப.53

44. மேலது, ப.55

45. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.116

46. மணல்வெளி அரங்கு, ப.67

47. மேலது, ப.69

48. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.47

49. மேலது, ப.48

50. வெட்டுமுகம், ப.136

51. மணல்வெளி அரங்கு, ப.29

52. மேலது, ப.35

53. மேலது, ப.89

54. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.48

55. வெட்டுமுகம், ப.137

56. மணல்வெளி அரங்கு, ப.93

57. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.126

58. மேலது, ப.126

59. மேலது, ப.139

60. மேலது, ப.120

61. மேலது, ப.120

62. மேலது, ப.120

63. மேலது, ப.48

64. மேலது, ப.11
65. மணல்வெளி அரங்கு, ப.56
66. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.37
67. மணல்வெளி அரங்கு, பக். 67, 68
68. மேலது, ப.42
69. மேலது, ப.57
70. மேலது, ப.20
71. மேலது, ப.50
72. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.120
73. மேலது, ப.55
74. வெட்டுமுகம், ப.96
75. மணல்வெளி அரங்கு, ப.83
76. மேலது, ப.63
77. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.79
78. வெட்டுமுகம், ப.93
79. மேலது, ப.76
80. மேலது, ப.70
81. மேலது, பக். 71, 72
82. மேலது, ப.75
83. மேலது, ப.79
84. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.102
85. மேலது, ப.74
86. வெட்டுமுகம், ப.104
87. மேலது, ப.75
88. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.138
89. மேலது, ப.33
90. மேலது, ப.115
91. வெட்டுமுகம், ப.37
92. மேலது, ப.38
93. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.49
94. மேலது, ப.77
95. மேலது, ப.49
96. மேலது, ப.57
97. வெட்டுமுகம், ப.79
98. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.60

99. மேலது, ப.132

100. மேலது, ப.115

101. திருச்செந்திநாதன்.சிதம்பர.இணுவை., அன்புள்ள அப்பா, சூரியகாந்தி, உதயன் பிரைவேட் லிமிட்டெட், 07 பெப்ரவரி 2015, ப.25

102. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.103

103. மேலது, ப.104

104. மேலது, பக். 40, 41

105. மேலது, ப.42

106. மேலது, ப.34

107. மேலது, ப.37

108. வெட்டுமுகம், ப.105

109. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.33

110. மேலது, ப.37

111. மேலது, ப.45

112. மேலது, ப.114

113. மேலது, ப.103

114. மேலது, ப.100

115. மேலது, ப.100

116. மேலது, பக். 111, 112

117. மேலது, ப.86

118. மேலது, ப.85

119. வெட்டுமுகம், ப.13

120. மேலது, ப.17

121. மேலது, ப.21

122. அன்புள்ள அப்பா, ப.25

123. மேலது, ப.26

124. மேலது, ப.26

இயல்

ஐந்து

இயல் – ஐந்து

சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புக்களின் கலைப்பெறுமானம்

சிறுகதைகளைப் பொறுத்தவரை கருத்துக்களிலும் பார்க்க வடிவம் செழுமையானதாக அமைய வேண்டியது அதன் கலையழகுக்கு அவசியமானதாகும். ஏனெனில், கருத்துநிலை மட்டும் சிறந்த இலக்கியமாக அமையாது. அதன் உருவம் செழுமையடையும்போதுதான், ஆபரணம் ஒன்றில் பதித்த முத்தைப்போன்று கருத்தும் வெளிப்படும். எனவே சிறுகதைக்கு கதைக்கட்டமைப்பு முக்கியம். அவ்வாறே மொழியும் சிறப்பாகக் கையாளப்பட வேண்டும். சிறுகதைகளில் ஒவ்வொரு சொல்லும் ஆராய்ந்து அமைக்கப்பட வேண்டும். உணர்வு நிலைக்கு ஊறுபயக்கும் ஒரு சொல் கூட சிறுகதையின் அமைப்பை, அதன் கதையழகை ஊறுபடுத்திவிடக் கூடியது. அந்தளவுக்கு சொற்கள், வசனங்கள், வடிவங்கள் என்பன சிறுகதைகளில் முக்கியம் பெறுகின்றன. சிதம்பர திருச்செந்திநாதன் பல வடிவங்களில் கதைகளைப் படைத்துள்ளார்.

5.1 சிறுகதைகளின் அமைப்பு

சிறுகதைகளின் அமைப்பு என்பதனுள் சிறுகதை வடிவங்கள், சிறுகதைத் தலைப்புக்கள், பாத்திரங்களின் அமைப்பு, சிறுகதையின் தொடக்கம், சிறுகதையின் முடிவு என்பன இடம்பெறுகிறது.

5.1.1 சிறுகதை வடிவங்கள்

சிறுகதை வடிவங்களாக அருகருகே பொருத்திக்காட்டல், நாட்குறிப்பு வடிவில் காட்டல், விவரண முறையில் கதைகூறல், குறியீட்டு வடிவில் கதைகூறல், சுயசரிதை வடிவில் கதைகூறல் போன்ற வடிவங்கள் கையாளப்பட்டுள்ளன.

அருகருகே பொருத்திக் காட்டல்

வெவ்வேறு செயற்பாடுகளை அருகருகே பொருத்திக் காட்டுவதன் மூலம் ஒருவரின் போலித்தனங்களை வெளிப்படுத்துகிறார். கோஷமும் வேஷமும், ஆரோகணம் அவரோகணம், முகமூடி மனிதர்கள், குட்டையும் மட்டைகளும் என்ற கதைகள் சமூகப் போலித்தனங்களை வெளிப்படுத்துவன. இதற்கு இந்த வடிவம் சிறப்பாக உள்ளது.

நாட்குறிப்பு வடிவில் அமைதல்

சேர்ந்தோம் வாழ்ந்திடுவோம் என்ற கதை சீதனம் தொடர்பானது. திருமணப் பேச்சு ஆரம்பமாகி, முடிவாகி, மீண்டும் குழப்பமடைந்து, மீண்டும் சீதனத்துடன் திருமணம் நடைபெறுவதை நாட்குறிப்பு வடிவில் அந்தந்தத் திகதிகளோடு பதிவாக்கியுள்ளமை பொருத்தமான வடிவ கையாளுதலைக் காட்டுகிறது.

விவரண முறை

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி என்ற சிறுகதையும், என்னுடையதும் அம்மாவினுடையதும் என்ற சிறுகதையும் விவரண முறையில் அமைந்துள்ளன. அவை தாய் பற்றிய, தாய்க்கும் மகனுக்கும் இடையேயான சம்பவங்களின் நினைவுகள் பற்றிய விவரணமாக அக்கதைகளில் பரிணமித்துள்ளன. எதுவரை, எனக்காக என்பனவும் சம்பவ விபரிப்புக்களாக அமைந்த கதைகள்.

சுயசரிதை

தனக்கு நடந்த சம்பவங்களை, அனுபவங்களைத் தானே வெளிப்படுத்திக் கூறுதல் சுயசரிதை ஆகும். மணல்வெளி அரங்கு அவ்வாறான சுயசரிதை, எனினும் அங்கு குறியீடுகள் மேலோங்கியிருப்பதால் குறியீட்டு வடிவமாகவே அக்கதை கருதப்படல் வேண்டும்.

குறியீட்டு வடிவம்

மணல்வெளி அரங்கு குறியீட்டு வடிவில் அமைந்த கதையாகும். அத்தொகுதியில் மணல்வெளி அரங்கு, காணாமல் போனவன், சமாதானம், தேவர்கள் என்ற கதைகள் குறியீட்டு வடிவில் அமைந்தவை. சிதம்பரத் திருச்செந்திநாதன் குறியீட்டு வடிவில் சிறுகதைகளை ஆக்குவதில் கைதேர்ந்த ஒரு படைப்பாளியாக உள்ளதை இக்கதைகள் உணர்த்துகின்றன. நேரடியாக கதைகூற ஆபத்தான களநிலமைகளில் குறியீட்டு வடிவிலான கதைகள், கனதியும் சிறந்த பரிமாணமும் வாய்ந்தவை.

5.1.2 சிறுகதைத் தலைப்புகள்

சிறுகதைகளுக்கு கதைத் தலைப்பு அவசியமானதாகவும், காத்திரமானதாகவும் அமைவது அவசியமானதாகும். சிதம்பர திருச்செந்திநாதனின் படைப்புகளின் கதைத் தலைப்புகளைக் கொண்டே கதையின் கருத்துநிலையையும், கதையின் பாங்கையும் அறியலாம். அவை குடும்பப்பாங்கானவை, போர்க்கால நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டவை, போலித்தனங்களை அம்பலப்படுத்துபவை என்று வகைப்படுத்த முடியும்.

குடும்பப் பாங்கானவை

குடும்ப உறவு சம்பந்தமான கதைகளை உணர்த்தும் படைப்புக்களில் தாய்ப்பாசம், தாய்மை உணர்வுகள் மேலோங்கி இருப்பது சிறப்பானதாகும்.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி.....

என்னுடையதும் அம்மாவினுடையதும்

என்றும் தங்கள் நினைவில் வாழும்

அம்மாவை அல்ல

போன்ற கதைகள் குடும்பப்பாசம், பெற்றோர் அன்பு என்பவற்றை வெளிப் படுத்துகின்றன. அவற்றின் உணர்வுநிலைகளாக கதைத் தலைப்புக்கள் உள்ளன. நல்ல மேய்ப்பன் என்பது ஒரு வழிகாட்டியைப் பற்றியது. அது தந்தை ஒருவர் மகனுக்கு உதவும் விதம் காட்டப்படுகிறது. எனக்காக என்ற கதை ஒரு நல்ல காதல் கதை, ஒரு நல்ல காதல் கதை எனினும், காதலை தேசவிடுதலைக்காக அர்ப்பணிப்பதாக இந்தக் கதை அமைகிறது.

சமூகப் பாங்கானவை

ஒருவரை ஒருவர் ஏமாற்றும் போலித்தனங்கள், வஞ்சனைகள், சமூக பின்னடைவுக் காரணிகளை வெளிப்படுத்துவனவாக கோஷமும் வேஷமும், ஆரோகணம், அவரோகணம், முகமூடி மனிதர்கள், குட்டையும், மட்டைகளும், மண்வாசனை என்ற கதைகள் அமைந்துள்ளன. அவற்றின் தலைப்புகளே இரட்டை நிலைப்பாட்டுத் தன்மையை எடுத்தியம்புகின்றன.

போர்க்கால அவலங்கள்

வெட்டுமுகம், என்று மடியும், எதுவரை, காட்சி மாற்றம், அகதிகள் முகாம், சமகாலம், ஒருபோதும், மணல்வெளி அரங்கு, காணாமல் போனவன், அட இவ்வளவுதானா என்ற தலைப்புகளிலேயே அதில் கூறப்படும் விடயங்களின் கனதியான தாக்கத்தை தெளிவாகக் காணமுடியும்.

பெண்ணியம் சார்ந்த படைப்புக்கள்

காலம் கழிப்பமடி, இருப்பு, தீர்வுகள் என்ற தலைப்புகள் சீதனம், காத்திருத்தல், ஏமாற்றம் போன்ற பெண்கள் சார்பான பிரச்சினைகளை தெளிவாகக் காட்டுகின்றன.

தனிநபர் பாதிப்பு

யாரைநோவது என்ற படைப்பின் தலைப்பிலேயே அதன் வலி தெரிகிறது. அவ்வாறே என்றும் தங்கள் நினைவில் வாழும் என்ற சிறுகதைத் தலைப்புக்களும் அமைந்துள்ளன. சிறுகதைகளின் தலைப்புகள் தனித்துவமான, கருத்தாழம் மிக்கனவாக அமைகின்றன.

கதையில் தலைப்பு ஒரு சிறுகதையை வாசிக்க ஒரு வாசகரை அழைக்க வேண்டிய கவர்ச்சியும், அழகும் நிறைந்ததாக அமையவேண்டும். அந்த வகையில் சிதம்பர திருச்செந்திநாதனின் தலைப்புகள் உயிரோட்டமும் கவர்ச்சியும் மிக்கனவாக உள்ளன.

5.1.3 சிறுகதைகளின் பாத்திரவார்ப்பு

சிறுகதைகளில் பாத்திரங்கள் வளர்த்துச் செல்லப்படும் நிலை இல்லை, வார்க்கப்படுகின்றன எனக் கூறப்படுகிறது. இதன் கருத்து ஒரு மூன்று, நான்கு வசனங்களுடன் ஒரு பாத்திரம் பற்றியும், அதன் மனோபாவம் பற்றியும் வெளிப்படுத்திவிட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே சிறுகதை கட்டமைப்பு செழுமையும், உணர்வுத் திறனும் உள்ளதாக அமையும்.

சிதம்பர திருச்செந்திநாதனின் சிறுகதைகள் சிறந்த பாத்திரவார்ப்புக்களைக் கொண்டவை. ஒரு குடும்பத்தின் நிலையையும், கணவன் மனைவி உறவு நிலையையும் மிகச் சுருக்கமாகவும், அதேவேளை மிகுந்த கனதியான உணர்வுகளுடனும் இருப்பு என்ற சிறுகதையில் காட்டப்படுகிறது.

பொறுப்பற்ற கணவன்

> கணபதிப்பிள்ளை உழைப்பதை குடித்தே தீர்த்துவிடும் புண்ணியவாளன். கையில் காசு இல்லாபோது கனகம்மா காசுள்ள மரமாக நினைத்துச் செயற்படும் வீராதிவீரன். குத்தகைக் காணியில் பெரிசும் சிறிசுமாக உள்ள ஐந்து பிள்ளைகளுடன் மழையுடனும் வெய்யிலுடனும் போராடிக் கொண்டு புருசனையும் சமாளிக்க வேண்டும்.[1]

சிறுகதைகளில் சொற்சிக்கனம் அவசியமாக வேண்டப்படும். இந்த மூன்று வசனங்களும் மிகச் சிறப்பாக அந்த உணர்வுநிலையை வெளிப்படுத்துகின்றன. இது

ஆசிரியரின் சிறுகதை புனையும் ஆற்றலை வெளிப்படுத்துகின்றது மட்டுமன்றி, சிறந்த பாத்திரவார்ப்பு முறையையும் தெளிவாக்குகிறது. குறைவிருத்தி நாடு என்ற சிறுகதையின் குடும்பப் பின்னணி, கணவன் மனைவி உறவுநிலை என்பன மிகக் குறைந்த சொற்களுடன் விளக்கப்படுகிறது.

பொறுப்புள்ள மனைவி

> எப்போதாவது நல்ல மனம் வந்தால் பொன்னம்மா காலைத் தேத்தண்ணி கொடுப்பாள். அனேகமாக அவர் அவள் படுத்திருக்கும் அறைவாசலில் வந்து நின்று போட்டுவாறன் என்று சொல்லிப்போனால் மாலை ஆறு மணிக்கு திரும்பக் காணலாம். அந்தவகையில் பொன்னம்மா கொடுத்து வைத்திருக்க வேண்டும். காலைத் தேநீர்கூட இல்லாமல் புருசன் சந்தோசமாக, அமைதியாக பெண்சாதியிடம் விடைபெற்றுப் போவது என்றால்.[2]

பொன்னம்மாவின் ஏனோதானோ என்ற அக்கறையீனத்தையும், தன் மனைவி மீதும், குடும்பம் மீதும் அக்கறை கொண்ட கணவனையும் இந்த வரிகள் மிகச்சிக்கனமாக வெளிப்படுத்துகின்றன.

உழைப்பாளி

அகதிமுகாம் என்ற சிறுகதையில் பின்வருமாறு இரண்டு வரிகள் காட்டப் படுகிறது.

> கணநாதன் வெளிநாடு போவது பற்றிக் கனவுகூடக் கண்டதில்லை. என்னவோ தெரியவில்லை அவன் கொஞ்சம் கூட அக்கறை காட்டாமல் மண்ணோடு போராடிக் கொண்டிருந்தான்.[3]

ஒருவரின் உழைப்பும், நம்பிக்கைகளும் எவ்வளவு கனதியாக இந்த வரிகளுக்குள் அடக்கப்பட்டுள்ளது.

பொறுப்பான தாய்

என்னுடையதும் அம்மாவினுடையதும் என்ற சிறுகதையில் வரும் அம்மா என்ற பாத்திரம்,

இத்தனை வயது வந்தும் இவ்வளவு கஸ்ரங்கள், வேதனைகள் மத்தியிலும், துன்ப துயரங்களுக்கிடையிலும், நோயின் விசாரிப்புகளுக்கு மத்தியிலும் இந்த அம்மாவால் எப்படி எழும்பமுடிகிறது. தப்பாமல், தவறாமல் எழும்பி கேற்றில் கழுவி, தண்ணீர் வைத்து, நெருப்புமூட்டி, பச்சை விறகு என்றாலும் காயப்பண்ணி, அதை எரியச்செய்யத் தானும் வதங்கி, காய்ச்சலாகட்டும், தலையிடியாகட்டும், மழை பெய்தாலென்ன, குளிராக இருந்தாலென்ன அப்பொழுதும் எதுவுமே தவறாமல் எப்படி முடிகிறது?[4]

குடும்பப் பொறுப்புடைய ஒரு தாயையும், அந்தத் தாய் பற்றிய மகனின் பார்வையையும் கொண்டு, தாயினதும் மகனினதும் பாத்திரங்கள் வடிக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் தாய் பற்றிய மகனின் பார்வை மூலம் மகனின் குடும்ப அக்கறை, தாய்ப்பாசம் போன்ற விடயங்களை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

சிதம்பர திருச்செந்திநாதனின் சிறுகதைகளில் வரும் பாத்திரங்களில் தாய், பெண்கள் பற்றி பாத்திரங்களே அதிக கனதியான கருத்துச் செறிவு மிக்கதாக, தனித்துவப் பண்புகளை வெளிக்காட்டுவனவாக அமைந்துள்ளன.

5.1.4 சிறுகதைகளின் முடிவுகள்

சிறுகதைகளில் எப்பொழுதும் முடிவுகள் வித்தியாசமானவை. சிறுகதைகள் முடியும்போதே கதை ஆரம்பிக்கின்றது எனக் கூறுவார்கள். எழுத்தின் வழி தோன்றி எழுத்துக்கப்பால் நிற்கும் உணர்வுகளை தோற்றுவிப்பவையாக சிறுகதைகள் அமைய வேண்டும்.2 சிறுகதைகளின் முடிவுகள் ஏன் ஆரம்பம் எனக் கூறுப்படுகின்றது என்றால், எழுத்திற்கு அப்பால் நிற்கும் மௌனங்கள் சிறுகதையின் முடிவுக்கு அப்பால் பேச ஆரம்பிக்கின்றன. உணர்வுநிலைகளும், கற்பனைகளும் எழுத்து முடியும்போதே தோன்ற ஆரம்பிக்கிறது. எனவேதான் சிறுகதைகளின் முடிவுகள் முக்கியம் பெறுகின்றன. சிதம்பர திருச்செந்திநாதனின் காலம் கழிப்பமடி சிறுகதையின் முடிவு பின்வருமாறு அமைகிறது.

வாறவன் எந்த விசரனாக இருந்தாலும் பரவாயில்லை,
வேலையில்லாட்டியும் எனக்கு ஒண்டும் இல்லை.
இஞ்சை வந்து இந்த ஊரில என்னோட குடும்பம்
நடத்துவன் எண்டால் நான் சம்மதிக்கிறன். இல்லை

எண்டால் என்னை என்ன செய்தாலும் சம்மதிக்க
மாட்டன்.

தூரத்தில் வெடிச்சத்தங்களும் பதில் சத்தங்களும்
கேட்கத் தொடங்கின. பொங்கிவரும் ஆத்திரத்துடன்
தாய் கண்டபடி பேசத்தொடங்க சிரித்துக் கொண்டு
அப்பால் போனாள் அவள்.[5]

ஒரு பெண் தனது திருமணம் தொடர்பாக எடுத்த தீர்க்கமான முடிவையும், அதற்கு அப்பால் அவளது வீட்டாரின் எதிர்ப்பும், பின்னர் தொடர்ச்சியாக பல கற்பனை களையும் ஏற்படுத்த வைக்கிறது இம்முடிவு.

அவ்வாறே என்னுடையதும் அம்மாவினுடையதும் என்ற சிறுகதையில் ஒரு தாய் தன் குடும்ப முன்னேற்றம் பற்றிய எண்ணங்களுடன் ஓய்வின்றி உழைப்பதையும், அந்தத் தாயின் உழைப்பையும், கஷ்ரங்களையும் பார்த்து கவலைப்படும் மகன் தன் தாயை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போவதாயும் கதை முடிவுக்கு வருகிறது.

ஏண்டா மோனை ஏலாத காலோடை என்னும்போதே
அம்மாவின் கவலை புரிந்தது.
"நீங்கள் என்ன பாரமே" என்னும் போதே விசிலடிக்க
வேணும் போல இருந்தது.
எங்கள் ஒழுங்கைக்குள் இறங்கியபோதே இடிந்துபோன
பள்ளிக்கூடக் கட்டிடம் தெரிந்தது. அம்மா எனது வலது
பக்க ஜெய்ப்பூர் காலையும், இடிந்துபோன பள்ளிக்கூடத்தையும்
பார்த்தாள். இரண்டையும் தாக்கியது ஒரு ஷெல்தானே.[6]

ஒரே நாளில் ஒரே ஷெல்லில் அவனது காலும், அவன் கற்ற பள்ளிக்கூடமும் சேதமானது என்றதன் பின்னால் ஒரு கதையின் ஆரம்பம் உள்ளதை காணமுடிகிறது. அவனது எதிர்காலமான பள்ளிக்கூடமும், அம்மாவினது எதிர்காலமான அவனும் அந்தச் ஷெல்லால் பாதிக்கப்பட்டனர்.

சிதம்பரத திருச்செந்திநாதனின் இன்று நாளை என்ற சிறுகதையின் முடிவு பின்வருமாறு அமைகிறது.

> இப்போது அதிகம் வித்தியாசம் வித்தியாசமான விமானங்கள் வந்து போகின்றன. இரைச்சலுடன் காதைப் பிளக்கின்றன. அவை என்ன விக்கினங்கள், தம்பி என்னடா செய்யிறது என்று கோட்டார் பக்கத்தில் வந்து நின்ற அம்மா. நான் பதில் சொல்லாமல் அம்மாவைப் பார்த்தேன்.மோட்டுத்தனமாய் எயாப் போட்டுக்கும் கிட்டக் காணி வேண்டி வீடு கட்டினமே. இப்ப எயார்போட்டை பெருப்பிக்கிறம் என்று சொல்லி" என்று சொல்லி முடிக்காமல் அம்மா அழத் தொடங்கினாள். என் கண்கள் கனத்தன ஆனால் அழவில்லை. நாளைக்கு எங்கள் வளவில் கூட ஒரு யுத்தவிமானம் நிற்கும். நாங்கள் எந்த இடத்தில் பதுங்க வேண்டி வருமோ தெரியாது.[7]

இந்தக் கதையின் பின்னால் அவர்கள் வீடுகளை விட்டு விரட்டப்பட்டு, ஒவ்வொரு இடமிடமாக அலையும் நிலையின் ஆரம்பத்தை இச்சிறுகதை முடிவு தொடக்கி வைக்கிறது.

குறைவிருத்தி நாடு என்ற சிறுகதையில் பகல் முழுவதும் இனசனம் வீடுகளில் சுற்றி பகற்பொழுதை மகிழ்ச்சியாகக் கழித்த பொன்னம்மாவும் பிள்ளைகளும் அந்திசாயும் நேரம் வீடு வந்து,

> "புஸ்பா ஓடிப்போய் சின்னத்தங்கம் வீட்டில் இரண்டு
> நெருப்புக்குச்சி வேண்டிக்கொண்டு வா என்றாள் பொன்னம்மா.
> அரிசியும் இல்லைப்போல. நான் இஞ்சால பரிமளா
> அக்கா வீட்டைபோய் அரிசி வேண்டிக்கொண்டு வாறன்
> என்று புறப்பட்டாள் பத்மா"[8]

பகல் முழுவதும் மகிழ்வாகக் கழித்துவிட்டு இரவு வீட்டுக்கு வந்து ஒவ்வொரு வீடாகச் சென்று பொருள் சேகரித்து வாழ்வு நடத்தும் ஒரு வீட்டையும், அதன் நிலையையும் குறைவிருத்தி நாடு என்ற கதை சித்திரிக்கிறது. அவர்களது எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைக் கதைமுடிவு உணர்த்துகிறது.

அட இவ்வளவு தானா என்ற சிறுகதை முடிவு மக்களின் குறைகளைக் கேட்க வந்த அதிகாரி விசாரணை நிறைவடைந்து வெளியேறும் நிலையை,

அவனது மேசையைச் சுற்றி ஆட்கள் சந்தை மீன் வியாபாரியை சுற்றி நிற்பவர்களைப் போல அவனையே, பார்த்துக்கொண்டு அவனால் விரைவாக, நகர முடியவில்லை. பரிதாபமாக அல்லாட அதிகாரிக்கு உதவ வந்தவர் கனகசபை, ஆட்களை விலத்தி அதிகாரியை வெளியேற்றுவதற்கிடையில் அவர் களைத்துவிட்டார்.[9]

இவ்வாறு மக்கள் குறைகளைத் தீர்க்காமலே, விசாரணை செய்ய முடியாமலே அதிகாரிகள் புறப்படுவது மக்களின் பிரச்சினைகளின் கனதியையும், அதிகாரிகளால் தீர்க்க முடியாமையையும், அல்லது அவற்றில் அக்கறை காட்டாமையையும் சிறப்பாக விளக்குகின்றார். முடிவுகள் கதையின் ஆரம்பமாகவோ அல்லது சிந்தனையைத் தூண்டுவதாகவோ முடிவடைகின்றன.

5.2 சிதம்பர திருச்செந்திநாதன் சிறுகதைகளில் மொழியாற்றல்

சிறுகதைகளைப் பொறுத்தவரை அவை தீட்டித் தீட்டி ஒளி பெறச்செய்ய வேண்டிய படைப்புக்கள். அச்சிறுகதைகளில் சொற்கள் கனதியானவையாகவும், வாக்கியங்கள் இறுக்கமும், உள்ளர்த்தங்களை கொண்டனவாகவும், உணர்ச்சிகள் வெளிப்படக்கூடியனவாகவும், அமைப்பு செம்மையுடையனவாகவும் அமைய வேண்டும். உரைநடை கவிதைக்குரிய காம்பீரியத்துடனும், நுண்ணுணர்வுடகும் செயற்படவேண்டும்.[10] என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தவகையில் ஒரு சிறுகதையாசிரியருடைய மொழிநடை வன்மையும், ஆற்றலும் மிக்கதாக அமையவேண்டும். சிதம்பர திருச்செந்திநாதனின் சிறுகதைகளின் வர்ணனைகள், அவர் கையாண்டுள்ள உவமைகள், கதைகளின் குறியீட்டுக்கையாட்சி, சிறுகதைகளின் முடிவுகளில் அவருடைய மொழியாற்றல் வெளிப்படுவதைக் காணலாம். அவருடைய உவமைகளும், குறியீடுகளும் தனித்துவம் வாய்ந்த அவருடைய சிறுகதைகளின் அடையாளமாக உள்ளன.

5.2.1 சிறுகதைகளில் வர்ணனை

சிறுகதைகள் கட்டிறுக்கமானவையாக, உணர்வுபூர்வமானதாக அமைய வேண்டுமாயின், அவற்றிற்கு சொற்சொட்டு அவசியம் எனபதால், வர்ணனைகளுக்கு இடமில்லை என்று கருதக்கூடாது. ஏனெனில் ஒரு கதைக்கு உரிய பின்னணியை வர்ணனைகள்தான் கட்டியெழுப்பக்கூடியன. அவை அளவாகவும், தேவை கருதியனவாகவும் சிறுகதைகளில்

அமையும். சிதம்பர திருச்செந்திநாதன் தனது சிறுகதைகளில் கதைக்குத் தேவையான பின்னணியை உருவாக்கவும், அந்த நேரத்து நிலமைகளை விளக்கவும் குறியீட்டு வடிவிலும் வர்ணனைகளைக் கையாண்டுள்ளார்.

கதைக்கான பின்னணியாக வர்ணனைகள் இடம்பெறல் இன்று... நானா...? என்ற சிறுகதையில் பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காக புதிதாக காணி வாங்கிக் கட்டிய வீட்டை அளக்க வருகிறார்கள். மிகக் கஷ்டப்பட்டு மகன் கப்பலில் வேலை செய்து, உழைத்துக் கடன்பட்டு கட்டிய வீடு, அவர்களுக்கு அந்த வீட்டின் மீதான விருப்பம், முயற்சி, அழகு என்பவற்றைக் காட்ட அந்த வீட்டுச்சூழல் பற்றிய வர்ணனை அவசியமாகிறது. எந்தச் சூழலில் வளவை அளக்க வருகின்றனர் என்ற கனதியை வீடு வளவு பற்றிய வர்ணனை பின்னணியாக எடுத்துக் காட்டுகிறது.

> எங்கள் வீடும் வளவும் என்னமாதிரி அழகாக இருக்கின்றன. முற்றத்தில் மல்லிகை குப்பென்று அதன் வாசனை எப்பொழுதும் மூக்கைத் துளைக்கும் அதன் வெண்மையான, வாசனையா எனது மனதை சுண்டியிருக்கிறது. வீட்டில் நின்றால் அதனையே சுற்றிக் கொண்டிருக்கவேண்டுமட் போல. வீட்டாக்களின் வேடிக்கைப் பேச்சையும் மீறி எனக்கு மல்லிகையில் ஆர்வம் அதிகம். கொஞ்சம் தள்ளி நந்தியாவட்டை நட்சத்திரங்கள் மாதிரி அதன் பூக்கள் உதிரியாகச் சில செல்வந்தர்கள் இன்னும் பெயர்தெரியாத பூக்கன்றுகள் நிலாக்காலத்தில் வீட்டின் முன்விறாந்தையில் இருந்து பார்க்கும்போது சந்தோசமாக இருக்கும். பெரிய பூந்தோட்டம் என்று சொல்ல முடியாவிட்டாலும் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவின பூச்செடிகளும், குரோட்டன்களும் ஒருவகைப் பொலிவினை எங்கள் வீட்டுக்குத் தருகின்றன.[11]

வர்ணனையை எதிர்நிலையாகக் காட்டி நிலைமையை விளக்கப் பயன்படுததுகிறார். ஒரு சூழல் பற்றிய எண்ணங்களை, உணர்வுகள் மறக்கச் செய்துவிடுகின்றன. அவை கவனிக்கப்படாமல் விடப்படுவதன் மூலம் ஓர் எதிர்நிலை உத்தியாக வர்ணனைகள் பயன்படும். அதாவது ஓர் அழகான சூழலைக் காட்டி வர்ணித்தலும் பாத்திரங்கள் அதனை இரசித்தலும் இயல்பானது. அழகாக சூழல் வர்ணிக்கப்பட்டும், அவற்றின் அழகு கவனிக்கப்படாது விடுதல் எதிர்நிலையானது. இவ் உத்தியை நல்ல மேய்ப்பான் என்ற சிறுகதையில் காணலாம்.

தோட்ட வெளியூடாகப் பரவியிருந்த காலைப் பனிக்குளிரையோ, வழக்கமாக வீட்டின் சுற்றுப்புற அமைதியையோ, எதுவித பாதிப்பையோ உண்டாக்கவில்லை. விடியற்

காலை குசினிக்குள் எழும் எங்கள் ஆரவாரங்கள் எங்கே போனது. டெல்லி செய்திகளையும் செவிமடுத்துக்கொண்டு கந்தோருக்குச் வெளிக்கிடும் பரபரப்பு இருக்கவில்லை.[12]

குறியீட்டு வடிவில் வர்ணனையைப் பயன்படுத்தல் மணல்வெளி அரங்கு என்ற சிறுகதையில் வர்ணனை குறியீட்டுவடிவில் காட்டப்படுகிறது.

கருமேகத்தில் சூழப்பட்டிருந்த நிலவு அச்சம் நீங்கி வெளியே வந்தது. இடிந்த கட்டடங்கள் ஒரு பெரிய கட்டடம் நிச்சயம் எரிந்த நூலமும் இல்லை. முகம் அழிந்த மனிதர்கள் போல் தெரிந்த கட்டடங்கள். ஆனால் எல்லாம் வெள்ளையாக. இரவு எப்போதும் மாறாமல், இரவுப் பூச்சிகள் வண்டுகளின் சப்தங்களுடன், காற்றின் அணைப்புடன் முயங்கிக்கொண்டிருந்தது. தெரு முற்றும் துறந்த முனிவனாய் எவ்வித உணர்வும் இல்லாமல் நீண்டு கிடந்தது. வழக்கமான பாதையா? புதிய பாதையா என்பது தெரியவில்லை. கேட்பதும் சரியில்லை. சரிந்த சுவர்கள், அழிந்த வீடுகள் மத்தியிலே நிதானமாய் தெருவின் முடக்குகளில் சிறிய சிறிய கூடுகள் வெள்ளைப் புறாக்கள் மாத்திரம் பக்குவமாய் சீவிக்கப் பொருத்தமாய்.[13]

என வர்ணனையில் இருள்சூழ வெளிவந்த நிலவு அவர்கள் சூழ வீதிக்கு அழைத்துவரப்பட்டவரையும் அவ்வாறே வெள்ளைப் புறாக்கள் வாழப் பொருத்தமான கூடுகள் சமாதானத்திற்கான படைகளின் காவலரண் என்பதும் குறியீட்டு வடிவில் வர்ணனைகளில் உட்பொதிந்திருக்கிறது.

5.2.2 சிறுகதைகளில் உவமையைக் கையாளல்

ஒரு பொருளை விளக்குவதற்கு அதனோடு ஏதேனும் ஒருவகையில் ஒத்த இயல்பையுடைய பொருளைக் காட்டி விளக்குவது உவமையாகும். உவமைகள் மரபுரீதியாக தமிழில் இருந்து வந்துள்ளன. அவை தான் வாழும் சூழலை நன்கு அவதானித்து தான் சொல்ல வந்த கருத்துடன் பொருந்தக்கூடிய விதமாக அதனை வெளிப்படுத்தக்கூடிய விடயத்தின் மூலம் காட்டுதல், சுருக்கமாக தெரிந்த ஒன்றைக் கொண்டு தெரியாத ஒன்றை விளக்குவது உவமை எனலாம்.

சிதம்பர திருச்செந்திநாதன் தனது சிறுகதைகளில் தனித்துவமான உவமைகளக் கையாண்டு காட்டுகிறார். உலகத்துப் பொருட்களை நேர்நின்று நீயே பார்

உனக்குப் புதிதாக ஏதாவது தோன்றலாம், பழைய உவமைகளும், கருத்துக்களுமே அதிலிருந்து உதிக்க வேண்டுமென்பதில்லை[14] என மாபா ஸான் தனது நூலின் முன்னுரை ஒன்றிலில் குறிப்பிடுகிறார். இவ்வாறே புதுவிதமான சமூகப்பார்வை காரணமாக ஆசிரியர் தனது சிறுகதைகளில் நிகழ்கால விடயங்களை ஒட்டிய உவமைகளைக் கையாண்டுள்ளார். அன்புள்ள அப்பா என்ற சிறுகதையில்,

மனைவி இறந்த பின்னர் கிடைக்காது போன தேநீரை
நாலரை மணித் தேநீர் 2009ல் காவுகொள்ளப்பட்ட
ஈழத்தமிழரின் போராட்டம் போன்ற சங்கதியாகிவிட்டது.[15]

இவ்வளவுதானா என்ற சிறுகதையில் காணாமல்போனோர் தொடர்பாக விசாரணை செய்ய வந்த அதிகாரிகளின் கோவைகளின் தாள்கள் வெளியே மிதப்பதை,

குழியில் அடங்க மறுத்த சடலத்தின் கைகால்கள் போல
கோவைகள் ஊடக தாள்கள் மிதந்து கொண்டிருந்தன[16]

எனக் காட்டுகிறார். இதன் மூலம் அதிகாரிகளால் சம்பவங்கள் மூடி மறைக்க முடியாது எனக் காட்டுகிறார். தனக்கு வேண்டாத திருமணம் பேசப்படுவது பற்றி காட்டுவதற்கு.

கனரக வாகனங்கள் வந்து போகும்போது றோட்டு கரையோர
வீடுகளில் உள்ளவர்களின் மனம்போல படபடக்கிறது.[17]

எனக் காட்டுகிறார்.

யாரைநோவது என்ற சிறுகதையில், அலுவலகத்தில் எந்தவிதமான தகவலும் இன்றி பென்சன் அட்டையைத் தேடுவதை,

பொம்பரிலை சுத்திக்கொண்டு பெடியளைத்
தேடுறமாதிரி[18]

இடம்பெயர்ந்து தென்மராட்சியில் வாழும்போது ஈக்கள்
மொய்ப்பதை எம்.ஜி.ஆர் படம் ஓடும் தியேட்டரில்
சனங்கள் போல கும்பல் கும்பலாக ஈக்கள்[19]

என்றும்,

யாரை நோவது என்ற சிறுகதையில் ஏமாற்றுத்தனத்தைக் காட்ட,
செத்துப்போகிற எல்லாரையும் பயங்கரவாதிகள் எனச் சொல்லும்
றேடியோ போல்[20]

எனவும் காட்டுகிறார்.

யாரை நோவது என்ற சிறுகதையில் வீதியோரக் கடையில் பசியின் கடுமையைத் தணிப்பதை,

ஒரு சோடி அப்பமும் ஒரு பிளேன்ரீயும் வயிற்றுக்கொதியை
இடைக்காலத் தீர்வாக அடங்கியிருந்தன.[21]

என இடைக்காலத்தீர்வையும் சிற்றுண்டியையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

காலம் கழிப்பமடி என்ற சிறுகதையில் வீதிகளின் சீர்கேட்டை,

நாடிபிடித்து உடம்புநிலை பார்ப்பதுபோல றோட்டைப்
பார்த்து நாட்டைச் சொல்லலாமா?[22]

என்றும்,

ஊரெங்கும் மினிசினிமாக்கள் தோன்றியதை,

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் மாதிரி
மினித்தியேட்டர்கள் ஊரெல்லாம்[23]

எனவும் காட்டுகிறார்.

காட்சி மாற்றம் என்ற சிறுகதையில் வெளிநாட்டிலிருந்து வரமுடியாமையை,

யாழ்ப்பாணம் போகும் எண்ணம் பொருண்மியத் தடைக்கு
உட்பட்ட பொருட்களைப் போல தடைப்பட்டுப் போய்விட்டது.[24]

எனக் காட்டுகிறார்.

இவ்வாறே,

(1) ஷெல்லொன்று வெடித்துச் சிதறுமாப்போல (எ.அ. 138)

(2) நவீனரக ஆயுதத்துடன் நிற்கும் பையன்போல (எ.அ. 65)

(3) நிவராண வெட்டால் ஒடுங்கிய பொதுசனம் போல

(4) மீன் வியாபாரியைச் சுந்நி நிற்பதைப்போல (ம.வெ.அ 60)

(5) வெளிறி வாடிய கத்தரிக்காய்த்தோல் போல

(6) தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முனைந்து நிற்பதாய் காட்டும் அரசுபோல

(7) தீராத தண்ணீர் விடாயால் தண்ணீரைப் பருகுவது போல (ம.வெ.அ. 26)

(8) வேள்விக்கு நேர்ந்துவிட்ட கிடாய்களைப் பார்ப்பது போல (ம.வெ.அ. 74)

என உவமைகளைப் புதுமையாகவும், தனித்துவமாகவும் தனது கதைகளில் ஆசிரியர் கையாண்டுள்ளார்.

5.2.4 சிறுகதைகளில் குறியீடுகள்

இலக்கியப் படைப்பாளிகள் தாம் நேரடியாகச் சொல்ல விரும்பாதவற்றை அல்லது தமக்கு அது அச்சுறுத்தலாக அமையும் எனக் கருதும் விடயங்களை, அந்த நிகழ்வோடு ஒத்த வேறு நிகழ்வுகளைக் காட்டிப் பொருத்தி விடுதல் குறியீட்டுக் கையாட்சி எனலாம். இதற்குச் சரியான குறியீடு ஒன்றைக் கண்டுபிடித்து உரிய விதத்தில் பொருத்திக் காட்ட வேண்டும். அவ்வாறு செய்யும்போது அது சிறந்த இலக்கியத் தரத்தையும், மிகுந்த ரசனையையும், கலைப்பெறுமானத்தையும் பெறும். இவ்வாறான சிறந்த குறிட்டு வடிவில் அமைந்த சிறுகதைகளாக தேவர்கள், மணல்வெளி அரங்கு, காணாமல் போனவன், சமாதானம், ஒரு பாலத்தின் கதை, பயம் வேண்டாம் என்பன அமைந்துள்ளன.

இவ்வாறே பயம் வேண்டாம் என்ற சிறுகதையில்,

> மனிதர்கள் சேரச்சேர மைதானத்திற்கு மாத்திரம்
> பயம் வலுக்கத் தொடங்கியது. என் கொள்ளளவைத்
> தாங்குமா, இடம் காணாவிட்டால் என்னை ஆழமாக
> அல்லவா வெட்டும்.[25]

குறியீட்டு வடிவில் மைதானம் தன்னை மிக ஆழமாக வெட்டப் போகிறார்கள். ஏனெனில் அதிகளவானவர்கள் சுற்றிவளைக்கப்படுகிறார்கள் என அச்சமடைகிறது.

> மாடுகள் இலைகுழை சமிபாடடையாத நேரத்தில் மாத்திரம்
> கொஞ்சம் பச்சை இறைச்சி சாப்பிடும். இறைச்சிக்காக அவை
> யாரையும் வெளிப்படையாகக் கொல்வதில்லை என்பது.
> அவனைப் போல பலருக்கு ஆறுதல் என்றாலும் அவை
> எப்படியோ இறைச்சியைத் தேடிக்கொள்கின்றன. எலும்புகளை
> மாத்திரம் யாரும் அறியாமல் மேச்சலுக்குப் போகும் தங்கள்
> மேச்சல் தரைகளில் புதைத்துவிடுகின்றன.[26]

பலரைக் கொன்று செம்மணியில் புதைக்கப்பட்டதை இவ்வாறு சித்திரிக்கிறார். செம்மணி ஒருபோக நெற்செய்கையும், மற்றைய காலங்களில் மாடுகள் மேய்ச்சல் தரையாக உள்ளதை, அங்கு பலர் கொன்று புதைக்கப்பட்டு பின் எலும்புகளை மீட்டதையும் குறியீடாகக் காட்டுகிறார்.

தேவர்கள் என்ற கதையில் குறியீடு சமய நம்பிக்கையுடன் தொடர்புபட்டது. கண்டவல் விண்டிலர் விண்டவர் கண்டிலர் என்ற சமயக்கருத்து ஒன்றுண்டு. கடவுளை

தேவர்கள் கண்டால் சொல்லக்கூடாது என்பது ஒரு சமய நம்பிக்கை. அதன்படி கடவுளைக் கண்டால் சொல்லக்கூடாது.

> "தேவனைக் கண்டாயா?" என்று கேட்டபோது சட்டென்று
> அப்பாவின் அப்புவின் அப்பு நள்ளிரவில் கோயிலில் கண்ட
> காட்சி நினைவுக்கு வந்தது. தேவர்களைக் கண்டால்
> சொல்லக்கூடாது. தேவர்களை மட்டுமா?. தேவனையும்தான்[27]
> (தேவன் என்பது ஒரு போராளியின் பெயர்)

காணாமல் போனவன் என்ற சிறுகதையில் கிழவனின் உயிரை எடுக்க வந்த இயமன் கிழவரைக் கூட்டிப் போகிறான், கிழவன் நினைக்கிறார்.

> ஏன் வீட்டில் வைத்து உயிரை எடுக்காமல் கூட்டிக்கொண்டு
> போகிறான். இவனது பொது வழக்கம் இருந்த இடத்தில்
> வைத்து உயிரைப் பறிப்பதுதானே. சமகாலத்துப் பழக்கம்
> இவனிலும் தொற்றிக்கொண்டு விட்டதா?[28]

கூட்டிக் கொண்டு போய்ச் சுடுவதுதான் அக்காலப் பழக்கம். இவ்வாறு கதைகளில் பல்வேறு விடயங்களையும் காட்ட பயங்கரமான, அக்காலத்தில் வெளிப்படுத்த முடியாத விடயங்கள் குறியீடுகளாக கதைகளில் நுட்பமாகக் காட்டியுள்ளார்.

மணல்வெளி அரங்கு சிறுகதை உருமறைப்புக்கள், குறியீடுகள் என்பவற்றுடன் அமைந்த சிறந்த ஒரு சிறுகதை. அதன் உருமறைப்புக்களை விலக்கி குறியீடுகளை விளங்கும்போது கதையின் வீச்சு தெளிவாக விளங்கும். மணல்வெளி அரங்கு சிறுகதையின் தெரிந்தெடுத்த வரிகளுடன் கதைச் சுருக்கமும் குறியீட்டு விளக்கமும் கீழே தரப்படுகிறது.

> படார் என்ற ஓர் அதிர்வு வாசற்புற கதவு தட்டப்பட்டது. முன்பை விட வேகமாக தடார் தடார் நேரம் இரவு பன்னிரண்டைந்து. கதவு உடைபடுவது போல் இடிபட்டது. இனியும் பொறுத்தால் உடைத்துவிடுவார்கள். கதவைத் திறந்தால், ஐந்துபேரோ, ஆறுபேரோ தெரியவில்லை. அதற்குமேல் அவர்கள் நீளமாக நிற்பது புரிந்தது. எல்லோரும் தெரிந்தவர்கள், வழக்கமாகச் சந்திப்பவர்கள். காலை மாலை வணக்கம் சொல்பவர்கள். உங்களிட்டை ஒரு அலுவல். இந்தநேரம் கஷ்ரப்படுத்திறதுக்கு மன்னிக்கவேணும். நீங்கள் எங்களோடை வரவேணும் (பௌவியமாக). கொஞ்ச நேரத்தில் விடிந்து

விடும்தானே? அதற்கிடையில் அலுவல் இருக்கு வாங்கோ என்றான் ஒருவன். வீட்டின் வாசலில் இருந்து கேற்றடி வரை வரிசையாக நின்றார்கள். தெருவின் இருமருங்கும் நீண்ட வரிசையாக அவர்கள். தெரு மறைந்துவிட்டது. காலில் மணல் சொர சொர என்றிருந்தது. கெதியாய் நட என்றான் ஒருவன். சுருக்கென்று காலில் எதுவோ குத்தியது. முள் இல்லை, அதைவிடப் பெரிதாக. தொடாதே அது பிறகு ஒரு காலத்தில் யாருக்காவது ஆராய்ச்சிக்கு உதவும். "நில்" என்றவன் அப்பால் போனான். இதழ் கோடியில் ஏதோ ஊர்ந்தது. வாயைத் துடைத்தேன் உப்புக்கசிந்தது. மண்ணைத் தொட்ட கையா கண்ணீரா? நான் மாத்திரம் அல்ல, என்னைப் போல் பலர் அழைத்து வரப்பட்டிருந்தனர். எல்லோரும் நண்பர்களாக. தூரத்தில் ஒரு வாகனம் இரையும் சத்தம் கேட்டது. அதன் வெளிச்சத்தில் றோட்டுக்குக் குறுக்காக அமைந்திருந்த வளைவின் நிழல் விரிந்து படுத்தது. அணிவகுத்து வந்தவர்கள் கைக்கருவிகளுடன் அரைவட்டம், முழுவட்டம் தீபோட்டு ஆடத் தொடங்கினார்கள். மணல்வெளி பெரிய அரங்காக மாறியது.[29]

மணல்வெளி அரங்கு சிறுகதையில் சமாதானத்துக்கான யுத்தம் என்ற பெயரில் சண்டை நிகழ்ந்து சந்திகள் எல்லாம் காவலரண்கள் இருப்பதை,

சரிந்த சுவர்கள் அழிந்த வீடுகள் மத்தியிலே நிதானமாய்
தெருவின் முடக்குகளில் சிறிய சிறிய கூடுகள் வெள்ளைப்
புறாக்கள் மட்டும் பக்குவமாய் சீவிக்க.

என்க் காட்டுகிறார்.

மணல்வெளி அரங்கு என்ற சிறுகதை திகில் நிறைந்த பயங்கரமான காலப்பகுதி ஒன்றின் பதிவாக உள்ளது.

தூரத்தின் வாகனம் இரையும் சத்தம் கேட்டது. அதன் லைட்
வெளிச்சத்தில் றோட்டுக்குக் குறுக்காக அமைந்திருந்த
வளைவின் நிழல் விரிந்து படுத்தது.

எனவே இவ்வரிகள் அவ்விடத்தை யாழ்ப்பாண வரவேற்பு வளைவு அமைந்துள்ள செம்மணி என்பதைக் குறியீட்டால் உணர்த்தியுள்ளார்.

அணிவகுத்து வந்தவர்கள் கைக்கருவிகளுடன் அரைவட்டம்,
முழுவட்டம் தீபோட்டு ஆடத் தொடங்கினர்.

கைக்கருவி என்பது துப்பாக்கி, துப்பாக்கியுடன் அரை வட்டம் போட்டு ஆடுதல் என்பது சுடுதல் என்பதாகும். மணல்வெளி பெரிய அரங்கமாக மாறியது. அரங்கம் - ஆடும்மிடம். பெரிய அரங்கம் - சிவனாடுமிடம், சுடலையாக மாறியது என குறியீடு இறுக்கமாகவும், கனதியாகவும் அமைந்துள்ளது.

இக்கதை மிகுந்த திகில் சம்பவமாகவும், பயங்கரமான காலப்பகுதி ஒன்றின் பதிவாகவும் உள்ளது. இக்கதையில் றோட்டுக்குக் குறுக்காக இருந்த வளைவு செம்மணி வெளியில் உள்ள யாழ்ப்பாண வரவேற்பு வளைவு எனவும், வெளியிலே கொண்டு வந்து விட்டவர்களை சுற்றி நின்று அரைவட்ட வடிவில் சுழன்று கருவிகள் (துப்பாக்கிகள்) இயக்கப்பட்டன என்பதையும், மணல்வெளி பெரிய அரங்காக மாறியது. அரங்கம் - சுடலை. அந்த இடம் மயான பூமியாக புதைகுழிகளால் நிரம்பியதை இந்தக் கதை குறியீட்டு வடிவில் சித்திரிக்கிறது. இந்தக் கதையின் மற்றைய பகுதிகள் உருமறைப்புகளாக இருப்பதுடன், சரியான வகையில் பகுத்து நோக்கும்போதே ஆசிரியரின் குறியீட்டு வடிவிலான உத்தி தெளிவாகிறது. இக்கதை ஆசிரியரின் குறியீட்டுக் கையாட்சித் திறனுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

5.2.4 உணர்வுகள்

இலக்கியப் படைப்புக்களில் உணர்ச்சிநிலைகள் முதன்மையானவை. சிறுகதைகளில் அவற்றின் உணர்வு நிலையிலேயே உயிர் உள்ளது என்பர். சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புகளில் காதல், தாய்ப்பாசம், வெறுப்பு, கோபம், இரக்கம், விரக்தி ஆகிய உணர்வுநிலைகள் வெளிப்படுகின்றன.

காதல்

ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையே எதிர்ப்பாற்கவர்ச்சி காரணமாக ஏற்படும் ஆழமான அன்பு காதலாகும். எனக்காக என்ற சிறுகதையில் பின்வருமாறு காதல் உணர்வு காட்டப்படுகிறது.

> நிலவு நனைக்கும் கடல் ஊடாக எங்கள் படகுத்தொடர் புறப்பட்டது. படகின் அணியத்தில் அவன் அமர்ந்தான். அணியத்தின் அருகே பலகை இருக்கையில் சந்தோச நுரை கட்ட நான் அமர்ந்தேன். நிலவில் அவன் விழிகள் பளபளத்தன. நான் என்னை இழந்தேன். தீராத தண்ணீர் விடாயால் தண்ணீர் பருகுவதுபோல பார்வையால் பருகத் தொடங்கினான். அவன் கூர்மையான பார்வை என்னைத் துளைக்கும் போதெல்லாம் உடலிலே ஏற்பட்ட அதிர்வுகளை உணர்ந்தேன்.[30]

தாய்ப்பாசம்

ஒரு தாய்க்கும் மகனுக்கும் இடையே இயல்பாக ஏற்படும் அன்பு தாய்ப் பாசம் எனப்படும்.

> அம்மாவின் கடகத்தையும் பையையும் சைக்கியின் பின்புறம்
> கட்டிக்கொண்டு அம்மாவை சைக்கிளின் முன்புறம் ஏற்றும்போது
> வாழ்க்கையில் கிடைக்காத பேறு கிடைத்ததுபோல இருந்தது.
> "என்னடா மேனை ஏலாத காலோடை" என்னும் போது அம்மாவின்
> கவலை புரிந்தது.
> "நீங்கள் என்ன பாரமே"[31]

வெறுப்பு

ஒன்றின் மீது ஏற்படும் எதிர்ப்பு உணர்வு அல்லது ஏற்றுக்கொள்ள முடியாமை வெறுப்பு எனப்படும். அம்மாவை அல்ல என்ற சிறுகதையில் இதனைச் சிறப்பாகப் பிரதிபலிக்கிறார்.

> இதெல்லாம் நாங்கள் சண்டை பிடிச்ச இடம். இந்தா இது ஒரு
> ஆமிக்காரண்டை சப்பாத்து என்றபடி அதை உதைந்தான்.[32]

இரக்கம்

ஒருவர் மீது அல்லது ஒரு உயிரின் மீது அதன் நிலை கருதி ஏற்படும் அனுதாபம் இரக்கமாகும். என்று மடியும் எங்கள் என்ற சிறுகதையில் இதனை இவ்வாறு பிரதிபலிக்கிறார்.

> பாவம் எத்தனை நாள் சாப்பிடாமல் இருந்துதோ இண்டைக்கும்
> வெள்ளன வந்திட்டுது.[33]

கோபம்

ஒரு விடயத்தை ஏற்றுக்கொள்ளாமை தொடர்பாக ஏற்படும் அதீத உணர்வு கோபம் ஆகும். காலம் கழிப்பமடி என்ற சிறுகதையில் பின்வருமாறு விபரிக்கிறார்.

> கண்டறியாத சிரிப்பு சிரிக்கிறாய். எனக்கு உன்ரை வயது
> தெரிஞ்சபடியால்தான் கேட்கிறன் என்ன நினைச்சுக் கொண்டிருக்கிறாய்.[34]

பயம்

ஆபத்தான சந்தர்ப்பங்களில் மனதில் ஏற்படும் படபடப்பு உணர்வு பயம் எனப்படும். வீட்டை மட்டுமல்ல என்ற சிறுகதையில்,

குண்டுச் சத்தங்களும் துப்பாக்கிச் சத்தங்களும் தாராளம். இடையிடையே ஷெல்லடிகள் வீட்டில் மனைவி, பிள்ளைகள் எல்லோரும் நிலைகுலைந்துபோய் இருந்தார்கள். மருளும் விழிகளுடன் பிள்ளைகள் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.[35]

இவ்வாறு குறிப்பிடுகிறார்.

அடிக்குறிப்பு

01. திருச்செந்திநாதன்.சிதம்பர., என்னுடையதும் அம்மாவினுடையதும், சூர்யா அச்சகம், சென்னை, 1995, ப.114
02. மேலது, ப.41
03. மேலது, ப.32
04. மேலது, ப.127
05. மேலது, ப.60
06. மேலது, ப.135
07. மேலது, ப.31
08. மேலது, ப.47
09. திருச்செந்திநாதன்.சிதம்பர., மணல்வெளி அரங்கு, சவுத் ஏசியன் புக்ஸ், வசந்தம் பிரைவேட் லிமிட்டெட், கொழும்பு 11, 2002, ப.70
10. சிவத்தம்பி.கா.,ஈழத்து தமிழ் இலக்கியத் தடம் 1980 - 2000, பார்வையும் விமர்சனங்களும், மக்றோ பிறின்டட் பிரைவேட் லிமிட்டெட், சென்னை, 2000, ப.87
11. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.25
12. மேலது, ப.09
13. மணல்வெளி அரங்கு, ப.42
14. சிதம்பர ரகுநாதன், இலக்கிய விமர்சனம், தமிழ்ப் புத்தகாலயம், மைலாப்பூர், சென்னை, 1948, ப.93
15. திருச்செந்திநாதன்.சிதம்பர., அன்புள்ள அப்பா, சூர்யாகாந்தி, உதயன் பிரைவேட் லிமிட்டெட், 07.02.2016 ப.25
16. மணல்வெளி அரங்கு, ப.55
17. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.52
18. மேலது, ப.63
19. மணல்வெளி அரங்கு, ப.20
20. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.64
21. மேலது, ப.133
22. மேலது, ப.48
23. மேலது, ப.65
24. மேலது, ப.137
25. மணல்வெளி அரங்கு, ப.50
26. மேலது, ப.31
27. மேலது, ப.35

28. மேலது, ப.67

29. மேலது, பக். 42, 43

30. மேலது, ப.26

31. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.135

32. மணல்வெளி அரங்கு, மேலது, ப.93

33. வெட்டுமுகம், ப.152

34. என்னுடையதும் அம்மாவினுடையதும், ப.56

35. வெட்டுமுகம், ப.122

இயல்

ஆறு

இயல் – ஆறு
ஆய்வு முடிவுரை

சிதம்பர திருச்செந்திநாதன் படைப்புக்கள் ஓர் ஆய்வு என்னும் இவ் ஆய்வுக் கட்டுரையில் இயல் ஒன்று ஆய்வுத் தலைப்பு, ஆய்வு அறிமுகம், ஆய்வு நோக்கம், ஆய்வு எல்லை, இலக்கிய மீளாய்வு, ஆய்வின் தேவை, ஆய்வுக் கருதுகோள், ஆய்வு மூலங்கள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வின் பயன், ஆய்வின் அமைப்பு என்பவற்றைக் கொண்டுள்ளது. இவ் ஆய்வு எல்லைப்படி சிதம்பர திருச்செந்திநாதனின் சிறுகதைகள் மட்டுமே இவ் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இயல் இரண்டில் சிதம்பர திருச்செந்திநாதனின் ஆளுமை, வளர்ச்சிப் பின்னணி ஆராயப்பட்டுள்ளது. இவ் ஆளுமை வளர்ச்சிப் பின்னணியில் அவரது குடும்பம், அவரது கல்விச் செயற்பாடுகள், அவரது தொழில், சமூகம் என்பன எவ்வாறு செல்வாக்குச் செலுத்தின என்பது ஆராயப்பட்டுள்ளது.

இயல் மூன்றில் சிறுகதைகளின் தோற்றம், வளர்ச்சி, தமிழ்ச் சிறுகதைகளின் தோற்றம், ஈழத்துச் சிறுகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும், ஈழத்துச் சிறுகதைகளுக்கு பங்களிப்புச் செய்த பத்திரிகைகள், புத்தகங்கள் ஆகிய தகவல்கள் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

இயல் நான்கில் இணுவை சிதம்பர திருச்செந்திநாதனின் கருத்துநிலை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. சிதம்பர திருச்செந்திநாதன் தனது சிறுகதைகளில் தனது அரசியல் சார்ந்த கருத்துக்களையும், போரின் மீதான வெறுப்பையும், அதன் தாக்கங்களையும் மிக ஆழமாகப் பதிவுசெய்துள்ளார். தமிழர்களின் தேசிய விடுதலை உணர்வையும், சுய நிர்ணய உரிமை ஒன்றின் தேவையையும் அரசியல் சார்ந்த அவருடைய கருத்துநிலை தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது. அவ்வாறே பெண்கள் ஆண்களின் அடிமைகள் அல்ல, அவர்கள் தனித்துவம் மிக்கவர்கள், ஆண்களும் பெண்களும் இணைந்து புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும், பெண்களின் கல்வியும், தொழில்வாய்ப்பும் அவர்களைச் சுயமாகவும் நம்பிக்கையோடும் செயற்பட உதவும் என்ற கருத்துநிலையை பெண்ணியம் சார்பாக முன்வைக்கிறார். சமூகம் போலித்தனம் அற்றதாகவும், உண்மையானதாகவும், நேர்மையாகவும் காணப்பட வேண்டும், முதியோர்கள் பேணப்படல் வேண்டும் என்ற ஆசிரியரின் கொள்கைகள் அவருடைய சிறுகதைகள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இயல் ஐந்து ஆசிரியர் தனது கருத்துநிலையை வெளிப்படுத்த மொழியைச் சிறப்பாகக் கையாண்டவிதம், அவரது சிறுகதைகளின் கலைநயம் என்பனவும் ஆராயப் பட்டுள்ளது. அவரது மொழியாற்றல், அவர் கையாண்ட உவமைகள், வர்ணனைகள், கதை முடிவுகள் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. கட்டிறுக்கமாக சிறிய வசனங்களுக்குள் ஆழமான உணர்வுகளும், எண்ணங்களும் திணிக்கப்பட்டு கச்சிதமான முறையில் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுவதுடன், கலைநயம்மிக்க படைப்புக்களாக அவருடைய சிறுகதைகள் அமைந்துள்ளன.

இணுவை சிதம்பர திருச்செந்திநாதனின் படைப்புக்களில் சிறுகதைகள் மட்டுமே ஆய்வுஎல்லை கருதி இவ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவரது நாவல்கள், புனைவுசாரா எழுத்துக்கள் இன்னும் ஆய்வுசெய்யப்படவில்லை. தொடர்ந்து தனது அனுபவங்களுடனும், ஆளுமை வீச்சுடனும் படைப்புக்களை வெளிக்கொண்டு வருகிறார். அவருடைய புனைவுசாராத படைப்புக்களும், அவற்றின் பெறுமானங்களும் முழுமையாக ஆய்வுசெய்யப்பட வேண்டியுள்ளது.

உசாத்துணை நூல்கள்

01. செல்லப்பா.சி.சு., தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது, காலச்சுவடு பதிப்பகம், நாகர் கோவில், டிசெம்பர் 2007 (இரண்டாம் பதிப்பு).

02. திருச்செந்திநாதன்,சிதம்பர., பதிவும் பகிர்வும் தொகுப்பு, எழுகலை இலக்கியப் பேரவை வெளியீடு, நோபிள் பிறின்ரேர்ஸ். யாழ்ப்பாணம், யூலை 2015.

03. திருச்செந்திநாதன்.சிதம்பர., என்னுடையதும் அம்மாவினுடையதும் சிறுகதை தொகுதி, சூர்யா அச்சகம், சென்னை, 61, யூன், 1995.

04. சிவத்தம்பி.கா., தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், இராமன்ஸ் பிறின்டிங் பிறஸ், சென்னை, 1967.

05. குணராசா.க., ஈழத்து தமிழ்ச் சிறுகதை வரலாறு, வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம், ஆனந்த அச்சகம், 2001.

06. நாவலர் நூற்றாண்டு மலர், மெய்கண்டான் அச்சகம், செட்டியார் தெரு, கொழும்பு, 1969.

07. நன்னெறி கதாசங்கிரகம், சதாசிவம்பிள்ளை ஆனோல்ட்., ஸ்திறோங் அஸ்பரி அச்சியந்திர சாலை, மானிப்பாய், 1883.

08. சிவத்தம்பி.கா., ஈழத்து தமிழ் இலக்கியத்தடம் 1980 - 2000 பார்வையும் விமர்சனங்களும், சென்னை மைக்ரோ பிறின்ட் பிரைவேட் லிமிட்டெட், சென்னை, 2000.

09. சிவத்தம்பி.கா., இலக்கியமும் கருத்துநிலையும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 2002.

10. திருச்செந்திநாதன்.சிதம்பர.,மணல்வெளி அரங்கு, சவுத் ஏசியன் புக்ஸ், வசந்தம் பிரைவேட் லிமிட்டெட், காழும்பு 11, 2002.

11. திருச்செந்திநாதன்.சிதம்பர., வெட்டுமுகம், சூர்யா அச்சகம், சென்னை, 1993.

12. மௌனகுரு.சி., சித்திரலேகா.மௌ., நு.்.மான்.எம்.ஏ., இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம், சித்திரா அச்சகம், யாழ்ப்பாணம், 1979.

13. நவீன இலக்கிய வளர்ச்சியும் ஈழத்துப் பத்திரிகைகளும், மல்லிகை, 39வது ஆண்டு மலர், ஜனவரி 2004.

14. எழுபதுகளில் கலை இலக்கியம், காவ்யா வெளியீடு, பெங்களூர், 2000.

15. கைலாசபதி.க., நவீன இலக்கியத்தின் அடிப்படைகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2002.

16. குணராசா.க., (தொகுப்பாசிரியர்), ஈழத்து முன்னோடி சிறுகதைகள், பூபாலசிங்கம் பதிப்பகம், கொழும்பு. 2001

17. ராசுகுமார்.மோ, வசந்தா.ரா, (தொகுப்பாசிரியர்கள்), சிவத்தம்பியின் நேர்காணல்கள், தேவா ஓவ்செட், சென்னை, 2003.